THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am obliged to the hon. Member for the sermon he has preached to the Government with reference to the attitude we should take pending the decision of the States Reorganization Commission. But, unfortunately, the fact relied upon by him is not correct and he has rushed forward with a motion even without asking me whether such an order has been passed. Therefore, it is likely to lead to misunderstandings amongst the public. Therefore, I would like to give the facts of the case.

"The electoral rolls of Gudalur taluk in the Nilgiris district were so far printed in Malayalam alone. On a representation from the Town Congress Committee of Gudalur, the Collector of the Nilgiris, recommended that the rolls may be printed both in Malayalam and Tamil from this year onwards as a good number of Tamils are living in this area. The 1951 Census enumeration slips relating to Gudalur taluk were recently resorted for extracting villagewise language figures and it was found therefrom that there was no linguistic group which had an absolute majority, that persons in the taluk speaking Tamil as their mother-tongue form 21·7 per cent of the total population while the percentage of those speaking Malayalam is 48·3. The other languages spoken in the taluk are—

Kannada 12·4 per cent.

Telugu 1·5 per cent.

Other languages 16·1 per cent.

The Election Commission was generally following the principle that the electoral roll should be printed in a second language in all tracts wherever the second language is spoken by more than 20 per cent of the population of the tract and in this case the Tamil population was 21·7 per cent. Following this principle, the Government considered that the electoral roll of Gudalur taluk should be prepared in Tamil also. On the recommendation of this Government, the Election Commission has, under the rules, directed the preparation of the Assembly and Parliamentary rolls at Gudalur taluk in Malayalam and in Tamil in this year's revision."

Mr. SPEAKER :—"I think the hon. Member is not pressing his motion."

Sri M. NARAYANA KURUP :—"The statement speaks for itself and I have nothing to add."

Mr. SPEAKER :—"Next item on the agenda."

III.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

Mr. SPEAKER :—"Discussion on the Governor's Address will continue. Amendments have been given notice of to the motion of thanks to the Governor. I thought I could select one or two amendments. But the amendments vary in substance. Therefore, I have decided to allow all the amendments to be moved formally and seconded. Then we will have a discussion both on the motion and the amendments thereto."

The following amendments were moved by the hon. Members concerned and duly seconded :—

Sri M. NARAYANA KURUP :—"*Add* at the end the following :—

'*but regret to note that the promised comprehensive agrarian reforms are to be postponed indefinitely*'."

3rd August 1955]

SRI K. C. GOPALAN UNNI :—"*Add* at the end the following :—

'*but regret to note that the Governor has not taken notice of the following urgent issues :—*

(*a*) *the need for starting a Medical College and an Engineering College in Malabar in view of the difficulties caused to students from Malabar in getting admission to Technical Institutions in other districts;*

(*b*) *the need for starting new industries in Malabar;*

(*c*) *the several hardships caused to merchants in South Malabar due to the activities of the officers of the Commercial Taxes Department of the district;*

(*d*) *the deliberate destruction of private forests in Malabar and the failure of the authorities to prevent the same even though the facts are brought to their notice;*

(*e*) *the failure of the Government to take necessary steps for improving the conditions of the Adivasis of Attappady in Walluvanad taluk even though scheme after scheme is sent up to the Government by different departments;*

(*f*) *the failure to mention about the Kundipuzha Hydro-Electric System in Mannarghat, Malabar;*

(*g*) *failure to mention about the feelings of the people with regard to the formation of linguistic States especially,* (i) *Aikyakerala;* (ii) *Aikya Thamizhagam; and* (iii) *Samyuktha Karnataka; and*

(*h*) *failure to note the fall in prices of paddy, coconut, pepper, tapioca, betel leaves, betel nuts, etc., the main agricultural produces of Malabar*'."

SRI K. MADHAVAN NAMBIAR :—"*Add* at the end the following :—

'*but regret to note that no mention is made of the following :—*

(*a*) *failure of the Government to stabilize the prices of agricultural produce at an economic level so as to benefit the agriculturists and not the middlemen;*

(*b*) *failure of the Government to extend the time-limit for payment of the first instalment of debts even after repeated demands from the people of Malabar;*

(*c*) *failure to mention about the Barapuzha Hydro-Electric Scheme;*

(*d*) *failure to mention about the Mysore-Tellicherry Railway line;*

(*e*) *failure to take effective action for improving the handloom industry in Malabar;*

(*f*) *failure to take necessary steps by an ordinance or otherwise to prevent destruction of forests before the necessary legislation is introduced; and*

(*g*) *failure to take immediate steps to prevent eviction of tenants without waiting for the comprehensive land reforms legislation*'."

SRI R. KRISHNAN :—" *Add* at the end the following :—

'*but regret to note*—

(*a*) *that no mention is made about the anti-people activities of certain police officers in Malabar, particularly in Alathur in Palghat taluk and Valapad in Ponnani taluk;*

(*b*) *that no mention is made about the formation of linguistic States with special reference to Aikyakerala, Aikya Thamizhakam and Samyuktha Karnataka;*

(*c*) *that no notice has been taken of the attempt of the beedi manufacturers to foist the burden of the sales tax on tobacco on the workers by reducing their wages;*

(*d*) *that no action has been taken to extend the time-limit for payment of debts including arrears of rent even after repeated demands from the people especially from Malabar*'."

SRI S. RAMALINGAM :—" *Add* at the end the following :—

'*but regret to note that no mention is made of the following* :—

(*a*) *the steps to be taken to eradicate unemployment—both educated and rural unemployment;*

(*b*) *the amendment to be made in the Estates (Abolition and Conversion into Ryotwari) Act so as to include all inam estates under the purview of the Act;*

(*c*) *the steps taken to assign waste lands to the landless poor;*

(*d*) *the steps taken to open a medical college at Tanjore;*

(*e*) *the steps taken to establish Tamil as State language; and*

(*f*) *the steps taken to improve the condition of N.G.Os.*'."

3rd August 1955]

SRI S. PAKKIRISWAMI PILLAI :—" *Add* at the end the following :—

' *but regret to find*—

(*a*) *that the Governor of Madras has not been advised by the Council of Ministers properly to take steps in safeguarding the interests of the workers in the State against the steep fall in wages due to the lowering down of the cost of living index;*

(*b*) *that in the Address, there is no mention about implementing the provisions of the Madras City Slum Improvement Act with a view to improve the slums in the City of Madras*'."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—" *Add* at the end the following :—

' *but regret to note that the Address does not refer to*—

(*a*) *the wholesale eviction of land-owners in or around the Neiveli Project area without paying proper compensation;*

(*b*) *the failure of the Government in not opening sugar factory at Kolianur, Villupuram;*

(*c*) *the facilities to be offered to N.G.Os. under the Second Five-Year Plan; and*

(*d*) *the reason for non-inclusion of the South Arcot district for development purposes under the Second Five-Year Plan on an experimental measure*'."

SRI C. H. KANARAN :—" *Add* at the end the following :—

' *but regret to note*—

(*a*) *that the Governor has not taken note of the fact that prices of agricultural produce like pepper, tapioca and coconut are still going down causing hardship to the people of Malabar;*

(*b*) *that no mention has been made about the representations from peasants of Malabar numbering about a lakh that the date for payment of the first instalment of debt should be extended till March 31, 1956, and thus creating a very grave situation in Malabar;*

(*c*) *that no mention is made about the conditions and proposals for amelioration for the thousands of fishermen in the coastal areas of Malabar who are jobless during many months and suffering from want;*

(*d*) *that no mention has been made about starting Medical, Engineering and Agricultural Colleges in Malabar;*

(*e*) *that no mention is made about the formation of Aikyakerala, and other linguistic States;*

[Sri C. H. Kanaran] [3rd August 1955

(f) that no mention is made about the destruction of forest wealth going on unchecked in Malabar in spite of the statutory provisions of Madras Preservation of Private Forests Act; and

(g) that no mention is made about the non-inclusion of representatives of mass organizations in the development committees and inclusion of only the representatives of the ruling party in many places in Malabar'."

SRI M. KALYANASUNDARAM :—" *Add* the following at the end :—

' but regret to point out that—

(a) there is no mention in the Address about the need to protect the interest of the workers against rationalization and retrenchment and to ensure fair living conditions in order to secure the enthusiastic co-operation of the workers in fulfilling the targets of the Five-Year Plan; and

(b) the Governor has not been properly advised by his Council of Ministers about the acute transport difficulties in the City of Madras causing great inconvenience to all sections of the City population '."

SRI K. UPPI :—" *Add* the following at the end :—

' but regret that the Address fails to mention some of the important problems of the State, particularly in the district of Malabar such as the trade depression, unemployment and the grievances of minorities in the matter of facilities for education especially in getting admission to technological and professional institutions '."

SRI C. KANDASAMY :—" *Add* at the the end the following :—

' but regret to note that—

(a) the measures pointed out in the Address on Land Reforms are very halting and hesitant and will not rouse the peasants for greater agricultural production; and

(b) the Address fails to state the urgency of settling the boundary dispute with the Andhra State on the basis of contiguity and the language spoken by the majority of the people taking the village as a unit '."

SRI S. RAMALINGAM :—" *Add* at the end the following :—

' but regret to note—

(1) that the Address has failed to mention—

(a) about the rural electrification extension which is slow because of the policy of the Government in demanding minimum guarantee from the peasants for ten years for pump-sets;

(b) *about the extension of the provisions of the City Tenants Protection Act, 1921, to all the Municipal Towns in the State which is now confined only to towns like Tiruchirappalli and Madurai; and*

(2) *that the Governor has not been properly advised by his Council of Ministers regarding the need to curb the growing tendencies of corruption, favouritism and nepotism in the several departments of the Administration of the State* '."

SRI K. T. RAJU :—" *Add* at the end the following :—

' *but regret to note that there is no mention about the cancellation of the penalty levies imposed on the agriculturists in the Lower Bhavani area where penalties are levied for having raised paddy crops during the last season* '."

SRI P. K. GOPALAKRISHNAN :—" *Add* at the end the following :—

' *but regret that the Address has failed to mention about the following* :—

(a) *the steps the Government propose to take with regard to the extension of the period of the first instalment for repayment of debts about which a memorandum signed by about 75,000 agriculturists of Malabar was submitted to the Government;*

(b) *the assignment of Revenue lands in Wynaad to more than 7,000 families of agriculturists against whom threat of eviction from the lands, though stayed temporarily, is hanging like the sword of Damocles over their head;*

(c) *the necessity for allocation of a larger share, over and above the due share on the population basis, for the development of traditionally neglected areas like Malabar in the Second Five-Year Plan; and*

(d) *the necessity for the primary utilization of the waters of the Western Ghats for purposes of irrigation and power generation in Malabar, the neglect of which had been responsible to turn the richest district in our State to the poorest, with regard to food production* '."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" *Add* at the end the following :—

' *but regret to note that there is no mention in the Address about*—

(a) *any re-orientation of the negligent attitude of the State Government to Malabar particularly in the case of* (i) *technical and scientific education,* (ii) *irrigation projects,* (iii) *electricity schemes and* (iv) *development schemes including housing and Harijan Welfare;*

[Sri T. C. Narayanan Nambiar] [3rd August 1955

(b) *the failure of the State Government to take any steps to solve the problem of rural indebtedness and to immediately extend the period of repayment of debts by making suitable amendments in the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Act, 1955; and*

(c) *the unhelpful and undemocratic attitude of the State Government to the Local Boards in the matter of democratisation of the administrative machinery, financial aid and increased power'."*

SRI P. RANGASWAMI REDDIAR :—" *Add* at the end the following :—

'*but regret for not enunciating the policy of our Government, with respect to the question of official language of our State, the working of the Prohibition Act, the eradication of corruption in all spheres of Government departments and the provision of accommodation for all in colleges and schools and the question of growing unemployment among educated men and women*'."

SRI P. RANGASWAMI REDDIYAR :—" *Add* at the end the following :—

'*but regret to note that the Address has failed to mention—*

(a) *the attitude of the Government regarding the adoption of Hindi as a compulsory medium of test for Union services which will adversely affect the interest of the people of the State:*

(b) *the steps taken towards making Tamil and other regional languages as the medium of instruction in the collegiate courses of studies and technical schools and colleges; and*

(c) *the proper basis of integration of Tamil-speaking areas in the Andhra State with the Madras State*'."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" *Add* at the end the following :—

'*but regret to point out that the Address has failed to give definite assurances regarding the inclusion of the Neiveli Scheme and the scheme to extract steel from the iron ore available at Salem in the Second Five-Year Plan although vague reference have been made*'."

SRI M. KALYANASUNDARAM :—" *Add* the following at the end :—

'*but regret to note—*

(a) *that no mention has been made with regard to taking of urgent steps to appoint a Commission to enquire into the service conditions, pay scales, leave facilities, retirement benefits, etc., of all categories of staff employed*

3rd August 1955] [Sri M. Kalyanasundaram]

in the various departments of the State Government including village officers and staff in the special works; and

(*b*) *that the Governor has not been advised by the Ministers regarding the urgent need to appoint a Committee of enquiry for suggesting ways and means for curbing corruption and wasteful expenditures in the various departments, including special works and commercial undertakings with a view to achieve effective results in the implementation of the various schemes of national advance '.''*

MR. SPEAKER :—'' The motion as well as the amendments are before the House for discussion. Sri K. Vinayakam will now speak.''

* SRI K. VINAYAKAM :—'' Mr. Speaker, Sir, with great care I have perused the Address delivered by the Governor of this State. But to my dismay, as usual, the Address has been very disappointing. There is nothing striking nor spectacular about it.''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' On a point of order, 4-37 p.m.
Sir. தமிழரசு கழக உருப்பினர்கள் எல்லாம் தமிழிலேயே பேசவேண்டுமென்று உறுதிகொண்டவர்கள். அப்படி இருக்க கனம் மெம்பர் அவர்கள் ஏன் ஆங்கிலத்தில் இப்போது பேசுகிறாரோ தெரியவில்லை ? ''

* SRI K. VINAYAKAM :—'' தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள், நான் இங்கு தமிழில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழிலேயே பேசுகிறேன். இந்த மாகாணத்தின் கவர்னர் நேற்று நம்மிடையே விடுத்துள்ள பேருரையிலே, எதுவும் பிரமாதமாக இந்த நாட்டுக்கு செய்ய வேண்டிய விஷயங்கள், காரியங்கள் உள்ளடங்கி இருப்பதாகத் தெரியவில்லை. அதிலே குறிப்பிட்டிருக்கும் ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி நான் விவாதிக்க முன் வந்திருக்கிறேன். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் என்பது, பொது மக்களை கண் துடைப்பதற்கும், ஏமாற்றுவதற்காகவும், வருகிற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஓட்டு சம்பாதிக்கவும் செய்யப்படும், நடத்தப்படும், ஒரு வேடிக்கையான காரியமாகும். **It is after all a political hoax played upon the credulous public of our State.** இதைப்பற்றி எல்லாம் வேறு சந்தர்ப்பம் கிடைக்கும் போது, விவாதிக்கலாமென்று விட்டுவிட்டு, ஒரு ஜீவனுள்ள பிரச்சினை, இந்த கவர்னருடைய உரையில் இருப்பதால், அதைப் பற்றி மாத்திரம் பேச எனக்குக் கொடுத்த நேரத்தை பயன்படுத்த விரும்புகிறேன். ஏற்கனவே முன்பு ஒரு முறை நம் மாகாண கவர்னர் அவர்கள், **1954-ம்** ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இங்கு நம்மிடையே இந்த எல்லைப் பிரச்சினையைப் பற்றி உடனடியாக, இந்த அரசாங்கம் கவனிக்குமென்று சொல்லியிருக்கிறார். தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள், இங்கே கொஞ்ச நேரம் இருந்து, உட்கார்ந்து விவாதத்தைக் கேட்டால், அவர் நேரடியாகவே, இந்த எல்லைப் பிரச்சினை விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள, என் விவாதப் பேச்சு பயன்படுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.''

SRI A. RAMASWAMY TEVAR :—'' On a point of order, Sir. விநாயகம் அவர்கள் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம், பொது மக்களை ஏமாற்றத்தான் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். அந்தப் பொது மக்களில் மிஸ்டர் விநாயகமும் ஒருவர் அல்லவா ? ''

[3rd August 1955

* **Sri K. VINAYAKAM** :—" மக்களில் நானும் ஒருவனாக இருந்தாலும், நான் எவ்விதத்திலும் ஏமாற மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன். ஏற்கனவே ஒரு முறை **1951**-வது ஆண்டில் கூட நம் மாகாண கவர்னர் சொல்லியிருக்கிறார்—இந்த எல்லைப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து விடுவோம் என்று. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக, இந்தப் பிரச்சினையை நாம் தீர்த்து விடுவோம், தீர்த்து விடுவோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, அதன் பின் இப் பிரச்சினை விஷயமாக, எவ்விதமான ஆக்க வேலையும் செய்ததாக இது வரையிலும் தெரியவில்லை. அவர் அப்போதே 'இதற்கு வேண்டிய புள்ளி விவரங்கள், நாம் சேகரித்து வருகிறோம், அது முடிந்த பிறகு, இதைப்பற்றி ஆந்திர சர்க்காருடன், சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இதைத் தீர்த்து விடுவோம்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால் நம் அரசாங்கத்திற்கு கடந்த கால சரித்திரத்தை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். எல்லைப் பிரச்சினைப் பற்றிய பொது மக்கள் கிளர்ச்சியானது, இவ்வாட்சியை எதிர்த்து செய்யப்பட்ட கிளர்ச்சியல்ல, ஆந்திர சர்க்காரை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியுமல்ல. அவர்கள் செய்த கிளர்ச்சியெல்லாம், மத்திய சர்க்காரை எதிர்த்து செய்யப்பட்ட கிளர்ச்சியாகும். பொது மக்கள் மத்திய அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். அப்போது பிரதம அமைச்சர் பண்டித ஜவர்லால் நேரு அவர்கள், இந்த எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, **Boundary Commission** எல்லைக் கமிஷன் அனுப்புகிறேன் என்று சொன்னாரே தவிர, இந்த மதராஸ், ஆந்திர, இரண்டு சர்க்கார்களை அழைத்து சமரசப் பேச்சு வார்த்தை நடத்தி தீர்த்து விடுகிறேன் என்று சொல்லவில்லை. பண்டித ஜவர்லால் நேரு அவர்கள் இது விஷயமாக விடுத்த அறிக்கை **1953**-ம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றும் தேதி வந்திருக்கிறது. அதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அறிக்கையை சந்தேகித்து, இன்னொரு முறை அங்கு இருக்கும் மக்கள் கிளர்ச்சி செய்யக் கூடாதென்ற எண்ணத்தினால், **1954**-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாம் தேதி, பிரதமர் நேரு அவர்கள், மறு முறையும், ஒரு கடிதம் எழுதி, **Boundary Commission**-ஐ அனுப்பி எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இந்த அரசாங்கம், அப்படி **Boundary Commission**-க்கு இப் பிரச்சினையை விடாமல், ஆந்திர சர்க்காருடன் ஏன் நேரடியாக சமரச பேச்சு வார்த்தைகள் நடத்துகிறது என்பது புரியவில்லை. காரணம், நம் சர்க்கார், ஆந்திர சர்க்காரிடம் அதிக நம்பிக்கை வைத்திருப்பது தான். நம் சர்க்கார், ஆந்திர சர்க்காருடன் சமரசப் பேச்சு வார்த்தை நேரடியாக நடத்தினால், நம் கோரிக்கை நியாயமாக இருந்தால் ஆந்திர சர்க்கார் அந்த கோரிக்கைக்கு இணங்கி நம் பகுதியை விட்டு விடுவார்கள் என்று நினைக்கிறார்கள். இவ்விதமான பேரம் பேசுவதில் நம்மைவிட ஆந்திரர்கள் கெட்டிக்காரர்கள் என்பதை நம் சர்க்காருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அவர்கள் நமக்கு விட்டுக் கொடுக்க மாட்டார்கள். நமக்குத் தான் பரந்த மனப்பான்மை. யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்று சொல்லிக் கொண்டு, நம் சொத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கும் மனப்பான்மையுள்ள தமிழர்கள். ஆகவே நமக்கு வரவேண்டிய பங்கை, தைரியமாக, இந்த அரசாங்கத்தால் வாங்க முடியாது என்று பொது மக்கள் நம்புகிறார்கள். **They have no proper bargaining power. Madras will lose in the bargain.** இந்த சர்க்காரின் நோக்கமெல்லாம் பாதிக்கப்பட்ட மக்களை கேட்காமலேயே பேச்சு வார்த்தையின் மூலம் இப்பிரச்னையைத் தீர்த்து விடலாம் என்பது. இது சரியான காரியமல்ல. பாதிக்கப்பட்ட மக்களிடத்திலே, தங்கள் எதிர்காலத்தை பொருத்திருக்கும் இவ்வெல்லைப் பிரச்சினையைப் பற்றி பேசினால், அவர்களுக்கு ஓர் நம்பிக்கை ஏற்படும். பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி கவலைப்படாமல், அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து உங்கள் கோரிக்கை என்ன, என்ன தவறுகள் இருக்கின்றன, **1951**-ம் ஆண்டு சென்ஸஸ்படி வைத்து நடத்தி இப்பிரச்சினையை தீர்க்கலாமென்றிருக்கிறோம், அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்காமல், அதிகாரிகளைப் போட்டு, ஆந்திர சர்க்கார் இந்த சர்க்கார் அதிகாரிகள் கூடி, பரிசீலனை செய்து, பிறகு ஒரு முடிவுக்கு வருகிறோம் என்றால், பாதிக்கப்

3rd August 1955] [Sri K. Vinayakam]

பட்ட மக்கள் எப்படி இந்த சர்க்காரிடம் நம்பிக்கைகொள்ளும் என்பதை யோசிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கர்நூலுக்கு போய் இருந்தார்கள். நம் அமைச்சருக்கு நல்ல வரவேற்பு அங்கே கொடுக்கப்படவில்லை என்ற சந்தேகம் எனக்கு இருந்துகொண்டிருக்கிறது. அந்த சர்க்காரிலிருந்து இங்குவரும் அமைச்சர்களுக்கு ஏராளமான வரவேற்புகள் தரப்படுகின்றன."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I was given a reception about which I was quite satisfied. The hon Member need not feel that I did not receive any welcome either from the Hon. Ministers or from the Members of the Assembly there."

* SRI K. VINAYAKAM :—" Still I maintain it is a matter of opinion. ஒரு அமைச்சர் திருப்தி அடையலாம், யாராவது ஒருவர் ஒரு எலுமிச்சம் பழம் கொடுத்தாலும் போதுமென்று நினைக்கலாம். ஆந்திர அமைச்சர் இங்கே வருகிறுர் என்றல் சென்னை கார்ப்பரேஷன் அந்த அமைச்சருக்கு வரவேற்பு கொடுக்கிறது. இங்கு ஒரு மண்டபத்தை அந்த அமைச்சர் திறந்து வைக்க பெரிய வைபவம் நடைபெறுகிறது. அந்த அமைச்சருக்கு நடத்தப்படும் வரவேற்பின் போக்கு அது. நம் அமைச்சருக்கோ திருத்தணி நம்மைவிட்டு போவதைப்பற்றி கவலையில்லை. உங்களுக்கு இப் பிரதேசங்களைப்பற்றி பேச உரிமையில்லை. அங்கு வசிக்கும் மக்களுக்கு அப்பிரதேச மக்களுக்கு வக்காலத்து வாங்கவேண்டிய கடமையை விட்டுவிட்டு நீங்கள் ஆந்திர சர்க்காரின் ஏஜண்டுகளாக இருப்பதற்க்காக கவலைப்படுகிறீர்கள், விரும்புகிறீர்கள். நீங்கள் ஏன் அப்படி கவலைப்படவேண்டும். ஆதலால் Why do you take the responsibility of negotiating with an intransigent stiff Government of the type of Andhra. ஆகவே பொது மக்களைக்காட்டி சமரச பேச்சு வார்த்தைகளை நீங்களாக —அங்கேயும் காங்கிரஸ் ஆட்சி, இங்கேயும் காங்கிரஸ் ஆட்சி—தொடங்கினால்; இச்சமரஸ பேச்சு வார்த்தைகளால் பொது மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இவ்வெல்லைப் பிரச்னையை தீர்க்க மத்திய சர்க்கார் முன்வந்தால்தான் இருசாராரும் நியாயம் அடைய ஏதுவாக இருக்கும். People on either side will get justice. இந்த மாகாணத்திலுள்ள தெலுங்கு மக்கள் யாரோ சிலர் இம்மாகாணததை விட்டு போகவேண்டுமென்று நினைத்துக்கொண்டு, இங்கு இருக்கும் தெலுங்கு மக்கள் ஆந்திர நாட்டுக்கு போக விரும்புவதைப்போல் காரியங்கள் நடத்துவது தவறு. அப்படி தாங்கள் ஆந்திர நாட்டுக்கு போகவேண்டுமென்று யாராவது கிளர்ச்சி செய்தார்களா, அல்லது வேண்டுகோளாவது விட்டார்களா? இல்லை. நீங்களாகவே, இவ்வெல்லைப் பிரச்னையைத் தீர்த்துவிடலாமென்று சொல்லுவது தவறு. இங்கிருந்து ஆந்திர நாட்டுக்கு எந்த மக்களும் போக விரும்பவில்லை. நீங்களாகவே சொல்லுகிறீர்கள். இரண்டு கிராமங்களை வாங்கிக்கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறீர்கள். யாருடைய சொத்தை யார் வாங்கிக்கொள்ளுவது? இப்படி எல்லாம் சமரசம் பேசுவது தவறு என்று சொல்லி உங்களுக்கு ஏன் இந்தத் தொல்லை? யாருக்கும் நியாயம், அநியாயம் செய்தவர்களாக நீங்கள் இருக்கவேண்டாம். நீங்கள் நியாயம் செய்வதாக நினைக்கலாம் ஆனால் அங்கு இருக்கும் மக்களுக்குத்தான் நியாயம் செய்யவேண்டும். அது பற்றி அந்த மக்களுக்குத்தான் அக்கரை. ஆகையால் இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த பிரச்சினையை தீர்த்துவிடுகிறோம் என்று சொல்லவேண்டும். ராஜகோபாலாச்சாரியார் முதல் அமைச்சராக இருந்தபோது அப்படித்தான் சொல்லப்பட்டது. அப்போது இருந்த கவர்னரும் 'நான் இப்பிரச்சினையை தீர்த்துவிடுகிறேன்' என்றுதான் சொன்னர். காமராஜர் அரசாங்கத்திலும், கவர்னர் அவர்கள் இதைத் தீர்த்துவிடுகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆனால் the very premises is wrong. இப்பிரச்னையை அணுகும் தோரணையே தவருக இருக்கிறது. Nothing tangible has been done so far in spite of the lapse of two years. ஆதலால் உங்களுக்கு இந்தத் தொல்லை வேண்டியதில்லை. As per the previous declaration by the

[Sri K. Vinayakam] [3rd August 1955

Prime Minister, let the Government of India appoint a boundary commission. மத்திய சர்க்கார் boundary commission-ஐ ஏற்படுத்தி, இப்பிரச்னையை தீர்க்கட்டும்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"எனக்கு தமிழில் சொன்னால், உறுதியாகாது, புரியாது என்று கனம் மெம்பர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதாகத் தெரிகிறது."

SRI K. VINAYAKAM :—"இச்சபையில் மலையாளி அங்கத்தினர்களும், கன்னட அங்கத்தினர்களும் இருப்பதால் அவர்களுக்கும் நான் சொல்லும் விவாதம் தெரியவேண்டுமென்றுதான் ஆங்கிலத்திலும் சொல்லுகிறேன். தமிழில் உங்களைவிட தீவிரமாக பேசி விளக்கமுடியும் என்றால்."

4-47 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM :—"I am glad, you realize, there are others who should understand."

SRI M. K. PADMAPRABHA GOUNDER :—"It would be convenient for us people coming from Kerala and Karnataka, if the hon. Member speaks in English. I have no prejudice against Members who speak in Tamil. Those who can speak in English may speak in English for the benefit of those who do not know Tamil."

*SRI K. VINAYAKAM :—"சபாநாயகர் அவர்களே, அதனால் நான் இறுதியாக சொல்லுவது இதுதான். தாழ்மையாக வேண்டிக் கொள்ள விரும்புவதும் இதுதான். அரசாங்கம் இந்த பேச்சு வார்த்தையை இன்றுமுதல் விட்டுவிடவேண்டும். The Government need not stand on its prestige. ஏதோ துவக்கிவிட்டோம். இப்போது எப்படி விடுவது, விநயகம் சொல்லுவதால், மக்கள் சொல்லுவதால் விட்டுவிடுவதா என்று நீங்கள் உங்களுடைய prestige-ஐ கவனிக்கவேண்டியதில்லை. நியாயம் வேண்டுமென்றால் பேச்சு வார்த்தை நடத்துவதை விட்டு, பேரம் பேசுவதை விட்டு, இந்த விஷயத்தை மத்திய சர்க்காரிடம் விட்டுவிட்டால், அவர்கள் Boundary Commission நியமிப்பார்கள். அவர்கள் வந்து உங்களிடம் இருக்கிற புள்ளி விவரங்களையும் அவர்களிடம் உள்ள விவரங்களையும் இரண்டையும் வாங்கிவைத்து நியாயமாக தீர்ப்பு செய்துவிட்டால் 'You will not be a party even if injustice is done to the people in the locality. The Madras Government will not take the responsibility. You better wash off your hands from that problem.' ஆதலால் நீங்கள் உங்கள் கையைக் கழுவிவிட்டுவிடுங்கள். மத்திய சர்க்கார் பார்த்துக்கொள்ளும். பிறகு நியாயம் கிடைக்கிறதா, இல்லையா என்று மக்களுக்கு தானாகவே விளக்கம் ஏற்படும். தயவுசெய்து சொல்லுகிறேன். நான் திரும்பவும். இந்த பிரதேச மக்கள் நேரு அவர்களுக்கு கடிதம் எழுதியதற்கு பதில் வந்திருக்கிறது. இந்த இரண்டு அரசாங்கங்களும் Voluntary-ஆக இவர்களாகவே முன்வந்து சமரசம் செய்துவைப்போம் என்று சொன்னதால்தான் Boundary Commission-ஐ அனுப்பவில்லை. பொருத்து இருங்கள் என்று சொல்லுகிறார்கள். Volunteer செய்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. ஆந்திர சர்க்கார் இந்தப் பிரச்னையை தள்ளிப்போட்டுக்கொண்டு திருத்தணியை எப்படியும் வைத்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறார்கள். நீங்களும் அதே நிலையில்தான் சென்றுகொண்டு வருகிறீர்கள். விடுகிற statement களும் முன்னுக்குப்பின் புறம்பாக இருக்கின்றன. ஒரு மந்திரி சொல்லுகிறார் States Reorganisation Commission வந்தபிறகு தீர்த்துவிடுகிறோம் என்று. ஸ்ரீ கோபால ரெட்டி சொல்லுகிறார், General Election-க்குப் பிறகு தீர்த்துவிடுகிறோம் என்கிறார். ஸ்ரீ காமராஜ நாடார் சொல்லுகிறார், எங்களால் தீர்த்துவிடுவதற்கு சாத்தியமில்லை, Central Government இடம் சொல்லி Boundary

3rd August 1955] [Sri K. Vinayakam]

Commission அனுப்புகிறோம் என்கிறார். இந்த statement-களை எல்லாம் வரிசையாக, கோர்வையாக வைத்திருக்கிறேன். Reason, புள்ளி விவரங்கள் இருப்பதால், தயவுசெய்து சொல்லுகிறேன், அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன், பயமுறுத்துவதாகவோ, வற்புறுத்துவதாகவோ ஏதோ ஆவேசத்தில் சொல்லுவதாகவோ நினைக்கக்கூடாது. நான் சொல்லுவது மக்களின் நிலைமையை உணர்ந்து அவர்களின் நன்மையை கருதிச் சொல்லுகிறேன். In the interest of the people living in that locality, I would request the Government to drop the idea of negotiating with the Andhra Government and leave the problem to the Central Government who will look after it. அதை விட்டுவிட்டு, நீங்கள் ஏற்றுக்கொள்ளுவது நியாயமில்லை. பேச்சு வார்த்தையை தொடர்ந்து நடத்துகிறோம் என்று சர்ச்சையில் ஈடுபட்டால், மக்கள் எழுச்சியின் காரணமாக உணர்ச்சியின் காரணமாக அவர்கள் நாட்டில் கிளர்ச்சி செய்ய தயாராக இருக்கிறார்கள். இந்த நிலைமையில், நானே கிளர்ச்சியில் தலைமை தாங்க நினைத்துள்ளேன். இந்த மாகாணம் முழுதும் மாத்திரம் அல்ல, ஆந்திர சர்க்காரில் இருக்கின்ற நம்முடைய பகுதிகளில்கூட கிளர்ச்சிகள் ஏற்படும். பிற்பாடு எங்களை பழிச்சொல்லுக்கு ஆளாக்கக்கூடாது. ஆதலால் please drop the proposal. இந்த முயற்சியைக் கைவிடவேண்டுமென்று சொல்லுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இங்கே இருக்கிற அரசாங்கம் தமிழ் அரசாங்கம் என்று அந்த மக்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டுடன் சேரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற மக்கள் உங்கள் சர்க்காரை விரோதித்துக்கொண்டுவிடுவதில் லாபம் இல்லை. தொல்லைதான் உண்டு என்று அவர்களுக்குத் தெரியும். என் உங்களிடம் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போகிறது என்றால்—நடந்துவருகிறதைத்தான் சொல்லுகிறேன்—அங்கிருக்கிற மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால், அதைத் தட்டிக்கேட்க உங்களுக்கு அவகாசம் இல்லை. மந்திரிகள் செய்கிறேன், செய்கிறேன் என்று நீண்ட சாக்குகள் சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து போர்டை மூடிவிட்டார்கள், காரணமில்லாமல் என்று சொன்னால், அதற்கு வக்காலத்து வாங்க இந்த அரசாங்கம் முன்வரவில்லை. அங்கு தமிழ் வருஷப் பிறப்பு விழா கொண்டாடிய போது அவர்கள் தடுத்தார்கள் அதைப்பற்றிக் கேட்கவில்லை. தமிழ் ரோடியோ வைத்திருந்தபோது மூடிவிட்டார்கள். அதையும் கேட்கவில்லை.

DEPUTY SPEAKER :—"The hon. Member has four more minutes."

*SRI K. VINAYAKAM :—"ஆனால் வருகிற அமைச்சர்கள் ஏதோ அவர்களுடைய Parliamentary Government நடப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிக்கொண்டு இருக்க விரும்புகிறார்களே தவிர, நமது அரசாங்கம் நமக்கு வேண்டிய வசதிகளை செய்வதற்கு முன்வரவில்லை என்பதால்தான் அங்கேயிருக்கிற மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. Temporarily they have lost confidence in the bargaining power of the Madras Government. அங்கிருந்து என்ஜினீயரிங் கல்லூரி பிள்ளைகள் வந்தால்—வருவது தவறு என்று ஒத்துக்கொள்ளுகிறேன், வரிசையாக வரக்கூடாதுதான், ஆனால் கஷ்டப்படுகிறவன்தான் வருவான், கேட்பான்—அமைச்சர் "பெற்றோர்கள் பணத்தை வீண் செலவு செய்துகொண்டு வருகின்றனர்" என்கிறார். இப்படிச் சொல்லி அமைச்சர் சுலபமாக தட்டிக் கழித்துவிடலாம். ஆனால், அந்த மாணவர்களுக்கு ஏற்படும் கஷ்டம் It affects the entire future life of the students. Venkateswara University-ல் தமிழே வேண்டாம் என்றால் அதைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும், 'you have become unfortunate creatures of circumstances' என்று சொல்லி திணிப்பதைத் தவிர, பின்னால் அவர்கள் துன்பங்களை ஏற்க நேரிடும்போது, எடுத்துச் சொல்லும்போது, மன்றாடிக் கேட்கும் போது, உங்கள் அரசாங்கம் முன் வந்து தீர்க்கவில்லை என்ற ஒரே குறைபாட்டால்தான் அந்தப் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் முடிவுக்கு

[Sri K. Vinayakam] [3rd August 1955

வந்து இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நமக்காக வாதாடி, பாடுபட்டு நியாயம் செய்யவேண்டுமென்று கேட்பதைவிட—கேட்டாலும் ஆந்திர சர்க்கார் நன்மையை செய்யமாட்டார்கள் என்று நினைத்தபிறகுதான் —இந்த பிரச்னையை மத்திய சர்க்காருக்கு விட்டுவிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆதலால் தயவுசெய்து கடைசியாக கேட்டுக்கொள்ளுகிறேன். மத்திய சர்க்காருக்கு இந்தப் பிரச்னையை விட்டுவிடவேண்டும். அப்படி விட தாமதித்தால், ஏதாவது prestige இவைகளை வைத்து வற்புறுத்தி இதையே நடத்திக்கொண்டுபோவேன், நாங்கள் தான் செய்வோம், ஏற்றுக்கொண்டு தீரவேண்டும் என்ற பிடிவாதத்தை கடைபிடித்துக்கொண்டு இருந்தால் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள். எழுச்சி வளரும். பிறகு அமைதி குலையும், அப்போது அந்த துன்பத்தை எதிர்த்து அடக்குமுறை செய்வதைவிட, இப்போதே பரந்த மனப்பான்மையுடன், விரிந்த எண்ணத்துடன் எல்லைக் கமிஷனிடம் பிரச்னையை விட்டுவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்."

4-55 p.m. *SRI N. MAHALINGAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல எழுகின்றேன்.

" நமது சபாநாயகர் கனம் சிவசண்முகம் பிள்ளை அவர்களை மத்திய சர்க்காரின பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராக நியமித்திருப்பதை நாம் எல்லோரும் மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அவர்கள் மத்திய சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராய் இருப்பதால், இனிமேலாவது இந்த மாகாணத்தில் உள்ள பிற்போக்கு வகுப்பினரும், ஹரிஜன மக்களும், I.A.S., I.P.S. பரீக்ஷைகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று அதிகமாய் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

" அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக இந்த மாகாணத்தில் மழை சரியாகப் பெய்து இருக்கிறது. பருவமழை சரியாகப் பெய்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் முக்கியமாக கோவையில், பொள்ளாச்சி தாலூக்காவில் பருவ மழை தவறிவிட்டதின் காரணமாக விளையக்கூடிய நிலக்கடலை வெள்ளாமை மிகவும் குறைந்துவிட்டது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வருஷம் நிலக்கடலை உற்பத்தி 30 சத விகிதம் தான் பொள்ளாச்சி தாலூக்காவில் இருக்கும். அந்த பிரதேசத்தில் உள்ள விவசாய மக்கள் மிகவும், பருவமழை $1\frac{1}{2}$ மாத காலம் தாமதமாக வந்ததால், சரியான வெள்ளாமை அறுவடையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

" பொள்ளாச்சி தாலூக்காவில், நிலக்கடலை உற்பத்தி குறைந்துவிட்டதோடு மட்டுமில்லாமல், மத்திய சர்க்காரின் export கொள்கை சரியானபடி இல்லாததால் நிலக்கடலையின் விலை மிகவும் குறைந்துவிட்டது. சாதாரணமாக நிலக்கடலை எண்ணெய், நல்லெண்ணெயைப்போன்ற விலை இருக்கக்கூடியது. ஆனால் இன்று அது நல்லெண்ணெயைவிட 7, 8 ரூபாய் விலை குறைவாக இருக்கிறது என்றால் அது சர்க்காருடைய கொள்கை சரியாய் இல்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறது. ஆகவே, மாகாண சர்க்கார் இதைக் கவனித்து, நிலக்கடலை விலையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

" இந்தியாவின் சில பகுதிகளில் விவசாயப் பொருள்களின் விலை குறைந்ததற்காக, மத்திய மாகாணம், பஞ்சாப் போன்ற பிரதேசங்களில் விவசாய விளைபொருட்களை எல்லாம் சர்க்கார் குறைந்தபட்ச விலைக்கு வாங்கி, விவசாயிகளுக்கு நன்மை செய்கிறார்கள். அதைப்போன்று நமது மாகாண சர்க்காரும் தயவுசெய்து விவசாய விளைபொருள்களின் விலையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் நிலக்கடலை

3rd August 1955] [Sri N. Mahalingam]

பயிரிடும் விவசாயிகள் எல்லோரும் மிகுந்த சிரமத்தை அடைவார்கள் என்பதை சர்க்கார் கவனத்திற்கு இந்த சமயத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

"இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நம்முடைய ராஜ்யத்தில் முக்கியமாக பல பெரிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. மேற்கே மலைத் தொடருக்கு அப்பால் மழை பெய்து மேற்குக் கடலில் போய் உபயோகமில்லாமல் விழுகிறது. அந்தத் தண்ணீரை வியர்த்தம் செய்யாமல் தடுத்து கிழக்கே நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அந்தத் தண்ணீரை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டில் பல இடங்களில் தண்ணீரைப் பாய்ச்சுவதற்கு வசதியாக இருக்கிறது. அப்படிப் போகும் தண்ணீரைத் தேக்கி இங்கு கொண்டு வருவதாக இருந்தால் திரு-கொச்சி சாக்காருடைய அனுமதியைப் பெற வேண்டியதாக இருக்கிறது என்று நம்முடைய சர்க்கார் கருதுகிறது. ஆனால் பொள்ளாச்சியிலுள்ள பரம்பையார் திட்டத்தை எடுத்துக் கொண்டால் திரு-கொச்சி சர்க்காருடைய சம்மதம் பெறவேண்டியதற்கு அவசியம் இல்லை. அப்படி அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றினால் சுமார் 65 சதுர மைலுக்கு காட்ச் மெண்ட் ஏரியாவில் பெய்யக்கூடிய மழை நீரை நாம் உபயோகப் படுத்தலாம். இப்பொழுது கோவை ஜில்லாவில் பெய்யும் மழைத்தண்ணீர் எல்லாம் மேற்கே போகிறது. திரு-கொச்சி சர்க்காருடைய பூமியில் பெய்யும் மழைத் தண்ணீரை நாம் எடுப்பதாகவே இல்லை. அதனால் பரம்பைக் குளம் திட்டத்தை எடுத்துக் கொண்டால் நம்முடைய மாகாணத்தில் மழைத் தண்ணீர் எல்லாம் கிழக்கே திருப்புவதற்கு வசதியாக இருக்கும். திரு-கொச்சி சர்க்காருடைய சம்மதத்தை நாம் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நாம் கொச்சி சர்க்காரைக் கேட்க வேண்டியதெல்லாம் நமக்கு அங்கே கொஞ்சம் அணை கட்டிக் கொள்வதற்கு இடம் வேண்டும் என்று மட்டும் கேட்க வேண்டியது தான். அப்படி அணை கட்டுவதற்கு சில நூற்றுக்கணக்கான எக்கர் நிலம் நமக்கு வேண்டும் என்று கேட்டால் போதமானது. தண்ணீர் உரிமையைப்பற்றி நாம் அவர்களைக் கேட்க வேண்டியதில்லை. சோலையார் என்று ஒன்று அங்கே சென்று கொண்டிருக்கிறது. பரம்பையார், சோலையார், முதலியவைகள் மேற்கே சென்று கொண்டிருக்கிறன. பரம்பையாற்றில் 65 சதுர மைலில் பெய்யும் மழையும், சோலையாரில் 60 சதுர மைலில் பெய்யும் மழையும் செல்கின்றது. இதில் பரம்பையார் தண்ணீரைமட்டும் திருப்பினால் 2 லட்சம் எக்கரா பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம், பல்லடம் தாலூக்காக்களில் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

"இப்பொழுது சாலக்குடியில் ஒரு மின்சார நிலையத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாகாண சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பல காரியங்களைச் செய்ய எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக திரு-கொச்சி சர்க்காருடைய சம்மதத்தைக் கேட்க வேண்டும் என்றும் சொல்லி கொண்டிருக்கிறார்கள். திரு-கொச்சி சர்க்கார் பல திட்டங்களை செய்ய எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் நம்முடைய சர்க்காருடைய அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. இதை நம்முடைய சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் நம் அனுமதி கேட்க வேண்டிய அவசியம் இருக்கும்போது நாம் நம்முடைய திட்டங்களுக்கு அவர்களிடம் அனுமதி கேட்டுக் கொள்ளவேண்டும். பரம்பையார் திட்டத்தினால் சித்தூர் தாலூக்காவில் சுமார் 20 ஆயிரம் எக்கருக்கு தண்ணீர் பாய்வதற்கு வசதி ஏற்படும். இந்தத் திட்டத்தினால் எவ்வளவோ பிரயோசனம் ஏற்படும். நம் மாகாண பிரதம இஞ்சினீயர் கூட இந்தத் திட்டமானது சிறந்த திட்டம், அதை எடுத்து நடத்த வேண்டும் என்று சர்க்காருக்கு அறிக்கை விட்டிருக்கிறார். இதனால் இரண்டு லட்சம் எக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாயும் என்று கூட சொல்லியிருப்பதாகத் தெரிய வருகிறது. இதைத் தவிர 25 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரமும் உற்பத்தியாகும் என்றும் சொல்லுகிறார். அதற்குப் போடக்கூடிய கொள்முதல் சுமார் 14 கோடியாகும். இந்த 14 கோடி ரூபாய்க்கு 100-க்கு 5 சத விகிதம் வட்டிக் கட்டி வரும். அதிலிருந்து வரக்கூடிய வருமானம் என்று கூட கணக்குப் போட்டிருக்கிறார்கள். இது ஒரு சிறந்த திட்டம் என்று இஞ்சினீயர் சர்க்காருக்கு

[Sri N. Mahalingam] [3rd August 1955

ரிப்போர்ட்டும் சமர்ப்பித்திருக்கிறார். 1947-ம் வருஷத்திற்குப் பின் எடுத்துக் கொண்ட எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் இப்படி 5 சத விகிதம் வட்டிகட்டக் கூடிய வருமானம் வரக்கூடிய எந்தத் திட்டத்தையும் சர்க்கார் நிறைவேற்றியிருப்பதாகத் தெரியவில்லை. அதனால் இந்தத் திட்டம் லாபகரமான திட்டமாக இருப்பதால் இதை இந்த ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"இதனால் தண்ணீர் பாயக் கூடிய பிரதேசம் பொள்ளாச்சியில் உள்ள உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம் முதலிய பஞ்சப் பிரதேசங்கள். ஆகவே மாகாண சர்க்கார் அவசியமாக இதையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக சமீபத்தில் இந்தியா சர்க்காருடைய ஸ்டாடிஸ்டிகல் பீரோவிலிருந்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள். அதை கவனித்தால் சென்னை ராஜ்யத்தில் ஒருவனுடைய வருமானம் என்னவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி சென்னை ராஜ்யத்தில் ஒருவருடைய சராசரி வருமானம் 236 லிருந்து 246 ரூபாய் வரையிலும் என்றும் ஆனால் பஞ்சாபி மாகாணத்தை எடுத்துக் கொண்டால் ஒருவருடைய வருஷ வருமானம் ரூ. 400 லிருந்து 430 வரையிலும் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாகாணத்தினுடைய வரும்படி மற்ற எந்த மாகாண வரும்படியைக் காட்டிலும் எவ்வளவோ குறைவாக இருக்கிறது. என்? இந்த மாகாணத்தில் மனிதனுக்கு வேண்டிய வசதி குறைவாக இருக்கிறது. தொழில் வசதி குறைவாக இருக்கிறது. இங்கு அதிகமாக விவசாயத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் மானவாரி விவசாயத்தை நம்பிக் கொண்டிருப்பதால் தான் வருமானம் இவ்வளவு குறைவாக வருகிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு மாகாண சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதை அதிகப்படுத்துவதற்கு நிறைய பெரும் தொழில்களை அதிகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய தொழில்களை நமது சர்க்கார் அவசியமாக ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் மத்திய அரசாங்க மந்திரிகள் பேசியபோது தென்னாட்டில் வேண்டிய தொழில் சாதனங்கள் இல்லை என்று பேசியிருக்கிறார்கள். அது சரியான உண்மை அல்ல. நம்முடைய நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நமது சர்க்கார் இந்தியா சர்க்காரை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தென்னாட்டில் பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. இப்பொழுது ஹெவி எலெக்டிரிகல் இண்டஸ்ட்ரி என்று பெரும் தொழிற்சாலைகளை 50 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆரம்பிக்கப் போவதாகத் தெரியவருகிறது. நம்முடைய மாகாண சர்க்கார் கிராமங்கள் பூராவும் மின்சாரத்தை மிக அதிகமாக விநியோகிக்கப் போகிறோம் என்று சொல்லிகொண்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாகாணத்தில் பெரும் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதனால் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை இங்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"தவிர ரயில்வே வாகனங்கள் உற்பத்தி செய்யும் தொழிலை மத்திய சர்க்கார் ஆரம்பிக்கப் போகிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் ஒன்றிரண்டு தொழிற்சாலைகளை நம்முடைய மாகாணத்திலுள்ள கோவை ஜில்லாவிலோ அல்லது மதுரையிலோ அல்லது மற்ற ஏதாகிலும் ஒரு இடத்திலோ அமைத்தால் சௌகர்யமாக இருக்கும். அப்படி ஆரம்பித்தால் நம் மாகாணத்திலுள்ள பல மக்களுக்கு தொழில் கிடைக்கக் கூடிய சௌகர்யம் ஏற்படும்.

"தவிர நெய்வேலியில் இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்து நடத்துவதற்கு இந்தியா சர்க்கார் 60 கோடி ரூபாய் கொடுக்க உத்தேசித்திருப்பதாக தெரிய வருகிறது.

3rd August 1955] [Sri N. Mahalingam]

அது வரவேற்கத் தக்கது தான். குறித்த காலத்தில் அந்தத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மாகாண சர்க்கார் சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இரும்பு உருக்கத் தொழிற்சாலைகளை சேலத்தில் ஆரம்பிக்க வேண்டும் 5 p.m. என்று பல முறையில் பல அங்கத்தினர்கள் மிக மிக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இரும்பு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய நடவடிக்கையை நம் மாகாண சர்க்கார் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. இனி மேலாவது அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சேலத்திலுள்ள கனிப் பொருள்களை சரியானபடி உபயோகப்படுத்த வேண்டும். மாகாணத்தில் இருக்கக் கூடிய மக்களின் வேண்டுகோள் அதுதான். வரப்போகும் ஆகஸ்ட்டு மாதம் 14, 15 தேதிகளில் நமது நிதி மந்திரியும் பிரதம மந்திரியும் டில்லிக்கு போகும்போது இதைப்பற்றி அங்கு எடுத்துச் சொல்லவேண்டும். அங்கு சென்றபோது இங்கு இரும்பு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" நம்முடைய மாகாணத்தில் பயிற்சி பெறும் இஞ்சினியர்கள் எல்லோரும் நம்முடைய மாகாணத்தில் பூராவுமே வேலை செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி இப்பொழுது அவர்களுக்கு வேலை கொடுக்க முடிவது இல்லை. அதனால் அவர்கள் பல்வேறு மாகாணங்களுக்குச் சென்று அங்கு வேலை செய்கிறார்கள். இதைத் தவிர பல இஞ்சினியர்களை 1946-47, 1947-48-ம் வருஷங்களில் பல மாணவர்களை மாகாண சர்க்கார் தேர்ந்தெடுத்து வெளிநாட்டிற்கு அனுப்பி அவர்களும் சிறந்த முறையில் பயிற்சி பெற்று இங்கு வந்தார்கள். அவர்கள் இங்கு வந்த பிற்பாடு அவர்களுக்கு வேண்டிய வேலைகளைக் கொடுக்க முடியவில்லை. அவர்களுடைய பயிற்சியை சிறந்த முறையில் உபயோகப்படுத்த முடியவில்லை. அவர்கள் அமெரிக்காவில் சென்று இரண்டு மூன்று வருஷங்கள் 10 அல்லது 15 ஆயிரம் ரூபாய் சர்க்கார் செலவு செய்து பயிற்சி அடைந்த பிறகு அவர்களுக்கு சூபர்வைசர் வேலைதான் கொடுத்திருக்கிறார்கள். மற்றும் அவர்கள் அஸிஸ்டெண்ட் இஞ்சினியர்களாகவுந்தான் வேலை செய்கிறார்கள். அவர்களை தகுந்தபடி உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் இங்கு இல்லை. இனிமேலாவது வெளிநாட்டிற்கு அனுப்பி பயிற்சி பெற்று வந்த மாணவர்களை சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" தவிர இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு ஆண்டு காலமாக 5-07 p.m. அமுல் செய்யப்பட்டு வருகிறதாயினும், கிராமப்புரங்களில் மிகவும் சிறந்த முறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டுக் கொண்டுவருகிறது. பலயிடங்களில் ரஸ்தாக்கள் போட்டிருக்கிறார்கள். பலயிடங்களில் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். ஆனால் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் செய்யப்படுகிற வேலைகளை எல்லாம் சரியானபடி பராமரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஜில்லா போர்டாரிடம் இவைகளை எல்லாம் பராமரிப்பதற்குப் போதுமான பணம் இல்லை. ஆகவே ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் செய்யப்படுகிற வேலைகளை எல்லாம் தொடர்ந்து பராமரிப்பதற்குப் போதுமான பணம் ஜில்லா போர்டார்களுக்குக் கொடுத்து எப்பொழுதும் நிரந்தரமாக அவைகள் மக்களுக்கு உதவியாக இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் நகரங்களில் வேலை செய்யக் கூடாதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் கிராமப்புரங்களில் வேலை செய்ய வேண்டியது தான். ஓரளவு நகரங்களுக்கும் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் பணம் ஒதுக்கினால் நகரங்களிலும் பல சீர்திருத்தங்கள் செய்வதற்குப் பிரயோஜனமாக இருக்கும். இப்பொழுது நகரங்களுக்கு சுமார் 5 சதவிகிதம் ஒதுக்கலாமென்று தான் இருக்கிறது. அதை 15 அல்லது 20 சதவிகிதம் ஒதுக்கலாமென்று ஏற்பாடு செய்தால் மிகவும் நன்மையாக இருக்குமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" எந்த ஜில்லா போர்டை எடுத்துக் கொண்டாலும் கிராமப்புர ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் இல்லையென்ற பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. டாக்டர்களுக்கு மூன்று வருஷப் பயிற்சி கொடுத்து அவர்களை எல்லாம்

[Sri N. Mahalingam] [3rd August 1955

கிராமப்புர ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பலாமென்ற யோசனை முன்பு இருந்தது. அதற்காகக் கட்டிடம் கூடக் கட்டினார்கள். ஆனால் சர்க்கார் அந்த யோசனையை அப்படியே விட்டுவிட்டார்கள். அகில இந்திய வைத்திய கவுன்ஸிலில் இந்த யோசனையை ஆதரிக்கவில்லையென்றே இந்த யோசனையை கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது. மூன்றுவாரம், நான்குவாரம் என்று ஹோமியோபதி வைத்திய முறையைத் தபால் மூலம் கற்றுக்கொண்டுவிட்டு தாங்களும் ஹோமியோபதி டாக்டர்கள் என்ற பெயருடன் பல பேர்கள் வைத்தியம் செய்கிறார்கள். இவர்களை விட எந்தவிதத்திலும் அலபதி முறையில் மூன்று வருஷம் பயிற்சி பெற்ற டாக்டர்கள் அளிக்கும் சிகிச்சை குறைவானதாக இருக்காது என்று நிச்சயமாக நாம் நம்பலாம். ஹோமியோபதி முறையிலும் நீண்ட காலம் பயிற்சி உள்ளவர்கள் அளிக்கும் வைத்திய சிகிச்சை மிகவும் நல்லதாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளாமல் இல்லை. ஆனால் போதுமான பயிற்சி இல்லாமலேயே பல கம்பவுண்டர்கள் இன்றையதினம் அலபதி ஊசி மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டு கிராமப்புர மக்களுக்கு இன்ஜெக்ஷன் கொடுக்கிறார்கள். அதனால் பலவிதமான கெடுதல்களும் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகையினால் தான் கிராமப்புர வைத்தியசாலைகளுக்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை என்கின்ற பிரச்னையைச் சமாளிக்க உடனடியாக அலபதி முறையில் மூன்று வருஷப் பயிற்சி கொடுத்து அந்த டாக்டர்களை கிராமப்புர ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பும் யோசனையை மறுபடியும் பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"கடைசியாக பரமக்குளம் திட்டத்தை இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்திலேயே அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri P. JEEVANANDAM :—"கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மேல் இரண்டு மூன்று கருத்துக்களை மட்டும் நான் கூறுவதற்கு விரும்புகிறேன்.

5-10 p.m. "முதன்முதலில் இதுவரையிலும் இல்லாதவிதத்தில் சென்னை ராஜ்ய சர்க்காரும், ஆந்திர சர்க்காரும் இஷ்ட பூர்வமாகவே பரஸ்பரம் கலந்து பேசி எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துக்கொள்ள முடியும் என்கின்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். நல்லெண்ணத்தோடு, பரஸ்பர உறவோடு இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என்று வந்திருக்கிறார்கள். இது வரவேற்கத் தகுந்த ஒரு காரியம் என்று நான் கருதுகிறேன். பேச்சு வார்த்தைகளால் தீர்க்க முடியும் என்றால் அதன்பேரில் போராட்டம் வேண்டுமென்று சொல்வதன் அர்த்தம் எனக்குப் புலப்படவில்லை. உலகம் முழுவதுமே பேச்சுவார்த்தைகளின்மூலம் முக்கியமான பிரச்னைகளை எல்லாம் தீர்த்துக் கொண்டுவிடலாம் என்கின்ற கொள்கைக்கு வரக்கூடிய அளவு சாதகமான சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்னையை 1951-ம் ஆண்டு ஜனக் கணக்கு இருக்கிறதே அதன் அடிப்படையில் தீர்த்துவிடலாமென்றும் இரண்டு சர்க்கார்களும் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளினால் மட்டும் தீர்த்துவிட முடியும் என்று சொன்னால் அது போதாது என்றே நான் கருதுகிறேன். பேச்சுவார்த்தைகளினால் முடியும் என்பதை வரவேற்கவேண்டும். ஆனால் இந்தப் பேச்சு வார்த்தை சரியான அளவுகோலோடு, கொள்கைத் தெளிவோடு நடந்தால் தான் சாத்தியமாகும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். கவர்னர் உரையில் இது வந்திருக்கிறது. தகராறுக்குரிய பிரதேசங்கள் பேச்சுவார்த்தைக்கு வருகிறபோது தாலுக்காவாரியாக, பிர்க்காவாரியாக, ஜில்லாவாரியாக அது வராமல் இன்று இரு ராஜ்யங்களுக்கும் எல்லை வகுத்திருக்கிறார்களே, அதற்கு இரண்டு பக்கத்திலும் இருக்கக்கூடிய கிராம அடிப்படை யூனிட்டாகக் கொண்டதாக வரவேண்டும். அப்பொழுதுதான் மிகத் துல்லியமாக எல்லையை நிர்ணயிக்க முடியும். எந்த கிராமத்தில் மெஜாரிட்டியாக தெலுங்கர்கள் இருக்கிறார்களோ அதனை தெலுங்கு பிரதேசத்துடனும், எந்த கிராமத்தில் மெஜாரிட்டியாக தமிழர்கள் இருக்கிறார்களோ அதனை தமிழ் பிரதேசத்துடனும் இணைக்கவேண்டும். அதோடு

3rd August 1955] [Sri P. Jeevanandam]

இவ்வாறு இணைக்கும்போது எது எந்த பிரதேசத்துடன் ஒட்டியதாக இருக்கிறதோஅதை அந்த பிரதேசத்துடன் கூடுமானவரையில் இணைப்பதற்கு முயல வேண்டும். அப்பொழுதுதான் 'Contiguity' என்று சொல்வார்களே அதற்கு ஒத்தாற்போல அமைய இடமேற்படும். இப்படி சர்ச்சைக்குறிய எல்லைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கிராமங்களையெல்லாம் யூனிட்டாக அமைத்துக்கொண்டு, அந்த கிராமங்கள் எந்தப் பிரதேசத்தை ஒட்டியதாக இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொண்டும், அந்தந்த கிராமங்களில் மெஜாரிட்டி மக்கள் யார், அவர் பேசுகின்ற மொழி எது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டும் இந்த பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டும். இந்த அளவுகோலை, இந்தக் கொள்கையை இரண்டு சர்க்கார்களும் ஒப்புக்கொண்டு வரவேற்கத் தகுந்த பேச்சு வார்த்தையில் ஈடுபட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்குமென்று நான் கருதுகிறேன்.

"மேலும் 1951-ம் வருஷ ஜனக் கணக்கை வைத்துக்கொண்டு இந்த எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்கின்ற யோசனைக்கே எதிர்ப்பு இருக்கிறது, அதாவது 1951-ம் வருஷ சென்ஸெஸ் பற்றியே அபிப்பிராயபேதங்கள் நாட்டில் இருப்பது இரு சர்க்காருக்கும் தெரியும் என்று நான் கருதுகிறேன். 1951-ம் வருஷ சென்ஸெஸ் எடுக்கும்போதே இந்தத் தமிழர், தெலுங்கர் என்கின்ற பிரச்னை இருந்திருக்கிறது. ஆகவே தற்போது 1951-ம் வருஷ சென்ஸெஸ் கணக்கை வைத்துக் கொண்டு இந்த எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கு இரு சர்க்கார்களும் முயலும்போது 1951-ம் வருஷ ஜனக் கணக்கே தவறானது, அதை ஒப்புக் கொள்ளமுடியாது என்கின்ற கிளர்ச்சி இந்த எல்லையில் இருக்கக் கூடிய கிராமங்களில் ஏற்படுமானால் இந்தத் தகராறு ஏற்படுகின்ற குறிப்பிட்ட கிராமங்களை மறுபடியும் பரிசிலனை செய்வதற்கு வேண்டிய தக்க ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும். இதுவும் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு மிகவும் உதவியாக இருக்குமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுபோன்ற விஷயம் எதுவும் கவர்னருடைய பிரசங்கத்தில் குறிப்பாகத் தெளிவுபடுத்தபடவில்லை. இருந்தாலும் இந்த விவாதத்திற்குப் பின்னர் கனம் மந்திரி அவர்கள் பதிலளிக்கும்போதாவது இது விஷயங்களை நன்கு தெளிவு படுத்திப் பதில் சொல்வார்கள் என்றே நான் நினைக்கிறேன். இதனால் குறிப்பிட்ட மக்கள் பக்கத்திலிருந்து எந்தவிதமான சங்கடங்களும் பின்னால் வராமலிருப்பதற்கு வழியுண்டு. மேலும் இந்த எல்லைத் தகராறு சம்பந்தமாக அந்தப் பிரதேசங்களில் இருக்கும் குறிப்பிட்ட மக்களின் அபிப்பிராயங்களையும், அதுபற்றி இந்தச் சபையில் சொல்லப்படுகின்ற யோசனைகளையும்கூட நமது சர்க்கார் இந்தப் பிரச்னையை சமூகமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள் தொடங்குவதற்கு முன்பாகவே ஆந்திர சர்க்காருக்கும் அனுப்பிவைப்பது, அவர்களும் இந்தப் பிரச்னையை தீர ஆலோசனை செய்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்குமென்றே நான் கருதுகிறேன்.

"அடுத்த பிரச்னை நான் இங்கே குறிப்பிடவேண்டியது இந்த ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு பகுதி மக்களையும் கவர்ந்து இருக்கக்கூடிய பிரச்னை. அதாவது இந்த ராஜ்யத்தின் ஆட்சிமொழி, இந்தப் ராஜ்யத்தின் கல்லூரிகளில் இருக்கவேண்டிய போதனா மொழி. இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட கவர்னர் உரையில் குறிப்பிடப்படாமல் இருப்பது வருந்தத் தக்கது. ஒவ்வொரு ராஜ்யத்தின் ஆட்சி மொழியும் அந்தந்த நாட்டு மொழியாகத் தான் இருக்கவேண்டுமென்று எல்லோரும் உணர்கிறார்கள். ஆகவே நம் ராஜ்யத்திலும் நம் நாட்டு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். இது நமக்கு மிகவும் தேவை. நாட்டு மொழியே ஆட்சிமொழியாக வேண்டுமென்று சொன்னால் நான் இந்த ராஜ்யத்தின் ஆட்சிமொழி தமிழாகத்தான் இருக்கவேண்டுமென்று கருதுகிறேன். தமிழ் மட்டுமல்ல. கன்னடியர்களும், மலையாளிகளும் நம் ராஜ்யத்துடன் இருக்கும் காலம் வரையில் கன்னடமும், மலையாளமும்கூட நம் ராஜ்ய ஆட்சிமொழியாகவே இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உலகம் முழுவதும் எப்படி இருக்கிறதென்றும் நாம் பார்க்கவேண்டும். எந்த வேறு நாட்டையும் நான் உதாரணமாகக் காட்டவில்லை. சோவியத் யூனி

யனுக்கோ, சீனுவுக்கோ நான் யாத்திரை செய்ய விரும்பவில்லை. ஐரோப்பாவில் சுவிட்ஜர்லாந்தை எடுத்துக்கொண்டால், 60 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் இத்தாலியர்கள், பிரஞ்சுகாரர்கள், ஜெர்மானியர்கள், சுவிஸ்காரர்கள் ஆகிய நான்கு தேசத்தவர்களும் இருக்கிறார்கள். அந்த நாட்டில் ஜெர்மன், சுவிஸ், பிரஞ்சு, இத்தாலி ஆகிய நான்கு பாஷைகளும் வழங்கப்படுகின்றன. நான்கு தேசத்து மக்கள், நான்கு தேசத்து மொழிகள் வழங்கப்படுகிற அந்த நாட்டிலே நான்கு மொழிகளும் தான் ஆட்சிமொழியாக இன்றைக்கு வழக்கில் இருந்து கொண்டிருக்கின்றன. நாட்டுமக்கள் பேசக்கூடிய மொழியே ராஜ்ய மொழியாக இருப்பதினால், அந்தக் குரல் கேட்கும் நாட்டு மக்கள் ஊக்கமும், உற்சாகமும் பெறுவதற்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே நாட்டு மொழி ஆட்சி மொழியாக்கப்படவேண்டியது மிகவும் அவசரமான பிரச்னை. ஆட்சி மொழியாக நாட்டு மொழியை ஆக்க முடியாது என்பதற்கு ஏற்கெனவே சொல்லிவந்த காரணங்களையே திருப்பித் திருப்பிச் சொல்லி இதனை இனியும் தட்டிக் கழிக்கக்கூடாது. வரக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியே இதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. வருகின்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மக்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் தான் அதனை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். இதற்கு மக்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருக்கவேண்டுமென்றால் வரக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அதிகார வர்க்கம் தயாரிக்கின்ற திட்டமாக இல்லாமல் மக்களுடைய ஐந்தாண்டுத் திட்டமாக முழுப் பலனையும் தரக்கூடிய திட்டமாக மிளிர வேண்டுமென்றால் மக்கள் விரும்பக்கூடிய இந்தக் காரியம் நடைபெறவேண்டுமென்று, அதை ஆட்சி மொழி, போதனு மொழி ஆகியவற்றுடன் சேர்த்தே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"இனி இந்தியா பூராவையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் இந்தியா பூராவுக்குமாக ஒரு மொழி இருக்கவேண்டியது மிகவும் முக்கியம். அதற்குத் தகுந்த மொழி எது என்று பார்க்கிறபோது எங்களைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் தங்கள் ஆட்சி மொழியாகவும், ராஜ்ய சர்க்கார்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு உபயோகப்படுத்தும் மொழியாகவும் ஹிந்தியை வைத்துக்கொள்வதை ஒப்புக்கொள்ளுகிறோம். ஹிந்தி தேசீய மொழியாக உருவாகிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷார் காலத்திலேயே அதற்கான வழி ஏற்பட்டது என்பதைவிட அதற்கும் முன்னதாக முஸ்லிம்களுடைய ஆட்சி காலத்திலிருந்தே அது இயல்பாகவே உருவாகிக்கொண்டு வந்திருக்கிறது. பிரிட்டிஷார் காலத்தில் அது தடைப்பட்டிருந்தது. இப்பொழுது இந்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை ஹிந்தி மொழி தேசீய மொழியாக இயல்பாகவே உருவாவதற்கு தடையாக இருக்கிறது. அதன் இயல்பான வளர்ச்சி தடைப்படுத்தப்படுகிறது என்றே குறிப்பிடவிரும்புகிறேன். ஏனென்றால் மத்திய சர்க்கார் ஹிந்தி மொழியை கட்டாயபாடமாக பரீட்சையில் திணிக்கிறார்கள். மறைமுகமாக ஹிந்தி மொழி தாய்மொழியாக இல்லாத பிரதேச மக்களிடையே பலவந்தமாக திணிக்கப்படுகிறது. எங்கே மறைமுகமாகத் திணிக்கப்படுகிறதோ அங்கே பெரிய ஆபத்துக்களையும் அது விளைவிக்கும். அதோடு சீக்கிரத்திலேயே கல்லூரிகளிலும் கூட ஆங்கிலம் இருந்த ஸ்தானத்தில் ஹிந்தி போதனு மொழியாகத் திணிக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. ஆகவே தான் உடனடியாக நமது ராஜ்யக் கல்லூரிகளில் நம் நாட்டில் வழங்கும் தமிழ் மொழியை போதனுமொழியாக ஏற்படுத்தவேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் மொழியை போதனுமொழியாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லும்போதே, மலையாளம் பேசக்கூடிய மக்கள் வாழும் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் மலையாள மொழியையும், கன்னடம் பேசக்கூடிய மக்கள் வாழும் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் கன்னட மொழியையும் போதனுமொழியாக ஆக்கவேண்டுமென்றும் விரும்புகிறேன். கன்னடம், மலையாளம், தமிழ் பேசக்கூடிய கேந்திரங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் அந்தந்த மொழியையே போதனு மொழியாக ஏற்படுத்தவேண்டுமென்பதில் கருத்துவேற்றுமையே இருக்கக் கூடாது. ஆகவே தமிழ்மக்கள் வாழக்கூடிய பிரதேசத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவும், போதனு மொழியாகவும் உடனடியாக ஏற்படுத்த

வேண்டுமென்று செய்வதில் காலதாமதம் செய்யக் கூடாதென்றே வலியுறுத்த விரும்புகிறேன். ஆங்கில மொழியிடம் எங்களுக்கு வெறுப்பு இல்லை. அது உலக மொழி. மிகவும் விசாலமாக வளர்ந்து பரவிக் கிடக்கும் ஒரு மொழி. ஆனால் அந்த மொழியே நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் நம்மை ஆதிக்கம் செலுத்தும்போது பலவந்தமாகப் புகுத்தப்பட்ட ஆதிக்கிய மொழியாக இன்றும் இருப்பதினால்தான் அந்த மொழியையே வைத்துக் கொள்வதற்கு நாம் வெட்கப்படுகிறோம். நூற்றைம்பது ஆண்டுகளாக நம்மை அடக்கி ஆண்டவர்கள் நம்மிடையே அந்த மொழியை புகுத்தியதினால் தான் நமக்கு அதனிடம் வெறுப்பு. அதைப்போலவே இன்று மத்திய சர்க்கார் ஹிந்தியை ஆதிக்கிய மொழியாக ஹிந்தியை தாய் பாஷையாகக் கொள்ளாதவர்களிடையே பலவந்தமாகத் திணிப்பதினால் தான் பலருக்கு அதனிடம் வெறுப்பு ஏற்படுகிறது. அந்த மொழியின் இயல்பான வளர்ச்சியும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் தாய்மொழியையே அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கும் கல்லூரிகளில் தாய்மொழியாகப் போதிக்கப்படவேண்டுமென்ற கொள்கையை உடனடியாக வற்புறுத்தவேண்டுமென்று நாங்கள் கருதுவதற்கும் முக்கியமான காரணம் மத்திய சர்க்கார் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை ஆதிக்க மொழியாகத் திணிக்கக் கூடாது என்பதற்காகவே தான். இந்த விஷயத்தைப்பற்றி நான் இப்பொழுது பேசுகின்றேன். நான் இதைப் பற்றி இங்கே பேச வருவதற்கு ஐந்து நிமிஷத்திற்கு முன்பாகத்தான் ஒருவருடன் இதைப்பற்றியே பேசிக்கொண்டு வந்தேன். சீன மொழி ஹிந்தி மொழியைப் போலவோ, ஆங்கில மொழி, பிரஞ்சு மொழியைப் போலவோ மிகவும் வளர்ச்சி அடைந்த ஒரு மொழி அல்ல. இருந்தாலும் கூட சீனா குடியரசு அந்தஸ்தைப் பெற்றவுடனேயே, அதன் தலைவர் மாசேதுங்கிலிருந்து அந்நாட்டு மக்கள் அத்தனைபேரும் எல்லா விஷயங்களையும், எவ்வளவு முற்போக்கான விஷயங்களாக இருந்தாலும் சரி, விஞ்ஞான விஷயங்களாக இருந்தாலும் சரி அத்தனை விஷயங்களையும் சீன மொழியிலேயே பேசிப் பயில்கிறார்கள், என்கின்ற விஷயத்தை சீனாவிலிருந்து வந்த அந்த நண்பரிடமிருந்து தெரிந்துகொண்டேன். அப்படி இருக்கும் போது மிகவும் வளர்ச்சி அடைந்த மொழிகளை உடைய நாம் நம் மக்களுடைய தாய் மொழியையே ஆட்சி மொழியாகவும் கல்லூரிகளில் போதனா மொழியாகவும் ஏன் செய்யக்கூடாது என்றே கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்கார் ஹிந்தியை பத்து ஆண்டுகளுக்குள்ளாக தேசீய மொழியாகிவிட எவ்விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டாலும் சரி, நம்முடைய ராஜ்ய சர்க்கார் நம்முடைய ராஜ்யத்தில் வழங்கும் மொழியையே கல்லூரிகளில் போதனா மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஏன் உடனடியாகச் செய்யக்கூடாது. இதுபற்றி நிபுணர்களின் அபிப்பிராயத்தை அறிய ஒரு கூட்டம் சென்னையில் கூட்டப்பட்டது. அதில் பெரும்பாலானவர்கள் எல்லோரும் போதனாமொழியாக பிரதேச மொழிகளையே கள்லூரிகளில் ஏற்படுத்தலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிற போதிலும் அதில் இன்னமும் அவநம்பிக்கை கொள்ள இடமேயில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒன்று.

"இன்னொரு விஷயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். 5-20 a.m
சமீபத்தில் தமிழை போதனா மொழியாக ஆக்குவதற்கு ஒரு கூட்டம் நடந்தது. அங்கே வந்திருந்தபோது நாம் என்ன பார்த்தோம்? எத்தனை வேந்தர்கள், எத்தனை கல்லூரி தலைமை ஆசிரியர்கள் பேசினார்கள்? ஆங்கிலத்தில் பயிற்சிபெற்ற அவர்கள் எல்லோரும் கல்வி இலாகா நிர்வாகத்தில் ஆங்கிலத்தைப்பற்றிப் பேசினார்கள். மக்களிடையே பழகி, தேசீய இயக்கத்தையும், சுதந்திர இயக்கத்தையும், விடுதலை இயக்கத்தையும் அந்தந்த மொழியின் அடிப்படையில் நடத்தியவர்கள்தான் நமக்கு எந்த பாஷை தேவை என்பதைச் சொல்ல முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கல்லூரிகளிலுள்ள தலைமை ஆசிரியர்களும், துணைவேந்தர்களும் தங்களுடைய அறிவுத் திறமை சென்ற காலத்திலுள்ள அனுபவம் ஆகியவைகளைக்கொண்டு சரியான விதத்தில் தமிழை வெகு சீக்கிரத்தில் கல்லூரி போதனாமொழியாகவும் பிரதேச மொழியாகவும் ஆக்கமுடியும்" என்பதைப் பார்த்தோம். சர்க்காரே பலவந்தமாக தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுவந்துவிடுவார்களா என்று

[Sri P. Jeevanandam] [3rd August 1955

பாராட்டத்தகுந்த முறையில், நம்பிக்கை உண்டாகும் முறையில், பேசப்படுகிறது. அதேபோல, பல கலைக்கழகக்கத்தில் தலைமை ஸ்தானத்தில் உள்ளவர்கள் இதற்கு இணங்கமாட்டேன் என்கிறார்கள். சென்றகாலத்தில் ஆங்கிலத்தில் ஊறி ஊறி ஆங்கிலத்தை விட்டு மீளவே மனம் வராமல் . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"நேற்றைய தினம் திரு நாராயணஸ்வாமிப் பிள்ளை அவர்கள் பேசியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. தமிழ்தான் போதனை மொழியாக இருக்கவேண்டுமென்று உறுதியாக அவர் பேசி இருக்கிறார்."

SRI P. JEEVANANDAM :—"அதை மனப்பூர்வமாக எல்லோரும் வரவேற்கிறோம். அதே மாதிரி கமிட்டியைப் பார்க்கும்போது மீண்டும் துணைவேந்த களும் பேராசியர்களும் . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"இந்தக் கமிட்டி போட்டிருப்பது சொற்களை வகுப்பதற்காக அல்ல. Scientific terminology எதை எடுத்துக்கொள்ளலாமென்று சிபாரிசு செய்வதற்காக மட்டுந்தான் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையும் செப்டம்பர் 30-ந்தேதிக்குள் முடிந்துவிடும்."

SRI P. JEEVANANDAM :—"இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுப்பதை சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். Scientific terminology அதாவது கலைச் சொற்களை வகுப்பதில்கூட மக்களிடையே பழகி இருக்கக்கூடிய, வழக்கத்தில் இருக்கக்கூடிய உயிருள்ள, சொற்கள் கிடைக்கும். இவ்வாறு லக்ஷக்கணக்கான மக்களிடையே புழங்கக் கூடிய சொற்களை adopt செய்வது அவசியமென்று நான் கருதுகிறேன். ஆகவே தமிழைக் கல்லூரிப் போதனை மொழியாகவும் பிரதேச மொழியாகவும் கொண்டு வரவேண்டியது அவசியம். அதேமாதிரி மத்திய சர்க்கார் நடத்தும் பரிக்ஷைகளில் பிரதேச மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவ்வாறு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் என்ன நேரிடும், நாம் எங்கே போவது என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. ஐந்து வருஷத் திட்டம் வெற்றியடைவதற்கு மக்களைத் திரட்டி, ஒற்றுமையை ஏற்படுத்தி, இந்திய யூனியனைப் பலப்படுத்தவேண்டும். இப்பொழுது சூடாக இருக்கக்கூடிய பிரச்னைகளைப் பொருத்த வரையில் நம்முடைய ராஜ்யத்திலுள்ள Policy-ஐ கவர்னர் தன்னுடைய உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அந்த உரையில் மொழிப் பிரச்னையைப் பற்றி ஒரு குறிப்பும் காணப்படவில்லை. இது ஒரு குறைபாடு.

"சர்க்காருடைய திட்டங்களெல்லாம் மக்களுடைய திட்டமாக இருக்க வேண்டும். ஐந்தாண்டுத் திட்டம், சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரை சென்ற ஐந்தாண்டுகளுக்குள்ளாக கால்வாசி அபிவிருத்தி வேலைகள் முடிந்துவிட்டன என்றும் வரப்போகிற ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாக்கி முக்கால்வாசி முடித்துவிடப்படும் என்றும் கவர்னர் உரையில் கூறியிருக்கிறார்.

5 25 a.m. "சர்க்கார் புதிதாக ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். அதாவது ரெவினியு டிவிஷனல் அதிகாரிகளையே அபிவிருத்தித் திட்டங்களின் அதிகாரிகளாகவும் ஆக்குவது என்ற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது மட்டும் போதாது. ரெவினியூ இலாகா அதிகாரிகள் எப்படி இதுவரை மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்களோ அதைப்போலவே ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர்களும் மக்களும் இன்னும் நெருக்கமான தொடர்பு உடையவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் இம்மாதிரி திட்ட வேலைகளில் இடம் கொடுக்க வேண்டியதவசியம். அதுமட்டும் போதாது. பொது மக்களிடம் நெருங்கிய தொடர்பு உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். மக்களுடைய தேவையை நன்கு அறிந்தவர்களாகவும் நிர்வாகத்தில் ஏற்கனவே அனுபவம் உள்ளவர்களாகவும் பலர் இருக்கிறார்கள். அவர்களையும் திட்ட அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தினால் இந்தத்திட்டங்களெல்லாம்

3rd August 1955] [Sri P. Jeevanandam]

மேலும் மேலும் வெற்றி தருகிற முறையில் இருக்கும். மக்களுக்கும் அனுகூலமாக இருக்கும். அப்படிச் செய்தால் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பலப் பல பலவீனங்களைப் போக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

" ஹிந்தியைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறிவிட்டேன். ஆனால், திரும்பவும் இது சந்தர்ப்பத்தில் நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஹிந்தி எதிர்ப்பு என்ற பேரில் துரதிருஷ்டவசமாக நம்முடைய ராஜ்யத்தில் தேசீயக் கொடிக்கு நெருப்பு வைக்கக்கூடிய ஒரு பேச்சு, ஒரு முயற்சி ஏற்பட்டிருந்தது. அது நடைபெறுமல் போனது எல்லாரும் வரவேற்கக்கூடிய விஷயம். சந்தோஷப்படவேண்டிய விஷயம். நம்முடைய ராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரை மத்திய சர்க்காரைப் பொறுத்தவரை, அவர்களுடைய நடவடிக்கைகளில், மக்களுக்காகத் திட்டம் செய்து வரும் அடிப்படையில் பலருக்குப் பல கடுமையான கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட கருத்து வேற்றுமைகள் தேசீயக் கொடியை கொளுத்துவதில் கொண்டுவந்துவிடலாமா என்று கேட்கும் போது, எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தாலும், தேசீயக் கொடியைக் கொளுத்த நினைப்பதே தவறாகும். ஒரு சர்க்காரை மாற்றிவிட்டு இன்னொரு சர்க்காரைக் கொண்டுவரவேண்டுமென்றால், சர்க்காருடைய திட்டங்களைக் கடுமையாக எதிர்க்கலாம். ஆனால், சர்க்காருடைய திட்டங்களை எதிர்ப்பதற்கும் நாட்டின் தேசீயக் கொடிக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஐம்பது ஆண்டுகளாக எல்லாத் துறையிலும் உள்ள புனிதமான மக்கள், தியாகமூர்த்திகள், மிகுந்த தேச பக்தர்கள், தேசீய உணர்ச்சி பெற்றவர்கள், இவர்களெல்லாருடைய தூமான உணர்ச்சி, ரத்தம், வாழ்வு இவற்றைக்கொண்டு உருவாக்கப்பட்ட ஒப்புயர்வற்ற பொதுவான கொடியே தேசீயக் கொடியாகும். அப்படிப்பட்ட தேசீயக் கொடியைக் கொளுத்த நினைப்பதை உண்மையிலேயே தேச பக்தி, தேசீய கௌரவம், தேசீய வாழ்க்கையில் அக்கறையுள்ள மனிதர்கள் யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இந்தச் சபையில் இருக்கக்கூடிய எல்லா அங்கத்தினர்களும் அதற்குக் கொஞ்சம் நினைவில்கூட ஒத்துக் கொள்ளமாட்டோம் என்று குறிப்பிட்டு வருகிறார்கள். அதிருஷ்டவசமாக சம்பந்தப்பட்டவர்கள் கொடி எரிப்பு இயக்கத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டார்கள். இருந்தாலும் எந்த ஒரு கொள்கையாக இருப்பினும் அதனை வற்புறுத்த வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக தேசீயக் கொடியைக் கொளுத்துவது என்ற கொள்கையை எந்தக் காலத்திலும் யாரும் ஆதரிக்கக் கூடாது. தங்கள் இன்னுயிரைக் கொடுத்தேனும் கொடியினைக் காப்போம் என்ற உறுதியை கட்சி மனப்பான்மை அற்று எல்லா மக்களும் திட சங்கல்பமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைப்பரப்பவேண்டும். ஹிந்தி எதிர்ப்புக்காக இப்படிப்பட்ட அநீதியான பாதையில் போகவேண்டிய அவசியமே இருக்காது, நமது சர்க்காரே ஹிந்தி விஷயத்தில் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும். தேச பக்தி சிறிதும் இன்றி தேசீயக் கொடியைக் கொளுத்த வேண்டும் என்பதற்காக ஹிந்தி எதிர்ப்புச் சாக்கு காட்டுவது இருக்கிறதே, அது கொஞ்சங்கூட சரியல்ல. அப்படிப்பட்டவர்களுடைய போக்கை எந்தத் தமிழ் மகனும் அனுமதிக்கமாட்டான் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்." 5–30 p.m.

*Sri S. THINAKARASAMI THEVAR :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் சபையிலே நிகழ்த்திய பிரசங்கத்திலே எல்லாவிதமான கருத்துக்களையும், ஆராய்ச்சி செய்து நடந்ததையும் நடக்க வேண்டியவைகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய பிரசங்கத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால், ஒன்று மாத்திரம் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது யாதெனில் இந்த ராஜ்யத்திலே 60 சத விகிதம் பிற்போக்கு சமுதாயமாகும். அந்தப் பிற்போக்கு சமுதாயத்தினர் பெரும்பகுதியினராய் இந்த மாகாணத்தில் வாழ்ந்தும், அவர்களுடைய நலனைக் கருதி ஒன்றும் இந்தப் பிரசங்கத்திலே குறிப்பிடப்படவில்லை என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். உண்மையிலேயே சர்க்கார் இந்தப் பிற்போக்குப்

[Sri S. Thinakaraswami Thevar] [3rd August 1955

பகுதியினருடைய முன்னேற்றத்தில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். ஏற்கனவே சர்க்கார் ஹரிஜனங்களுக்கு அதிகமான சலுகைகளைக் காட்டிக் கொண்டு வருகிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். இருந்தாலும் கூட எந்த அளவு கூடுதலான சலுகைகள் ஹரிஜனங்களுக்கு கொடுக்கின்றார்களோ அந்த அளவை பிற்போக்கு சமூகங்களுக்குக் கொடுக்கும் சலுகைகளோடு ஒப்பிட்டு பார்க்கும்போது பிற்போக்குக்கு கொடுக்கும் சலுகை மிகக் குறைவு என்றுதான் நான் சொல்லவேண்டும். ஆகவே, இது விஷயத்தில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று நான் மறு முறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தாற்போல் நமது நேருஜி அவர்கள் உலக சுற்றுப் பிரயாணம் செய்து அகில உலகங்களும் போற்றும்படியான உலக சமாதான காரியத்திலே ஈடுபட்டு பெரியதோர் கீர்த்தியை நமது தேசத்திற்குச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார். ஆனபடியினால் அவருக்கும் என்னுடைய பாராட்டு தலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

" மூன்றாவதாக, நமது சபாநாயகர் அவர்கள் சென்ற ஒன்பது வருஷ காலமாக இந்தச் சபையிலே மகத்தான சேவை செய்து வந்திருக்கிறார். அவருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தச் சர்க்கார் அதிக கவனம் செலுத்தவேண்டிய முக்கிய விஷயங்கள் இரண்டு. ஒன்று விவசாயிகள் விஷயத்திலும் மற்றொன்று தொழிலாளிகள் விஷயத்திலும் ஆகும். இந்தத் தேசம் சுபீட்சமாக இருக்கவேண்டுமானால் என்றைக்கு இந்தத் தேசத்தினுடைய எல்லா விவசாயிகளும் க்ஷீணதிசையினின்று விடுவிக்கப்பட்டு சுபிட்ச திசையை அடைகிறார்களோ அன்றைக்குத்தான் இந்த தேசம் உண்மையான சுபீட்ச நிலையை அடைந்ததாகக் கருதப்படும். ஆகவே, இந்த இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்திலே அதிகமான சலுகைகள் விவசாயிகளுக்குக் காட்டவேண்டும். அடுத்தாற்போல் தொழிலாளர்களுக்கு அதிலும் விசேஷமாக இந்த வேலையில்லாத் திண்டாடம் பல இடங்களில் இருக்கிற காரணத்தால் அந்தந்தப் பிரதேசங்களிலே தொழிற்சாலைகள் ஆரம்பித்து தொழிலாளர்களுக்கு விசேஷ தொழில் கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை புவானிசாகர் திட்டம் மலம்பூழா திட்டங்கள் பூர்த்தியாகியிருக்கின்றன. மணிமுத்தார், வைகை, அமராவதி திட்டங்கள் இன்றைய தினம் அமுல் நடந்து வருகிறது. வைகைத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்தத் திட்டத்திலும் இன்று நல்ல முறையில் வேலை நடந்துகொண்டு வருகிறது. ஒன்று மாத்திரம் சாக்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது என்னவெனில், இந்த மாதிரி பெரிய நீர் தேக்க திட்டங்களிலே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறது. இந்த மாதிரி பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதிலே சர்க்கார் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அங்குள்ள இஞ்ஜினீர்கள் எல்லாம் மிகவும் நேர்மையானவர்காளாகவும், திறமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இல்லையென்றால் மிகவும் பாதகம் ஏற்படும். மற்றுமொரு விஷயம் குறிட்பிட விரும்புகிறேன். அம்மாதிரி திட்டங்களிலே உள்ள இஞ்ஜினீர்களைப் பற்றி கவனிக்கவேண்டியது என்னவென்றால் அவர்கள் மீது குற்றச் சாட்டுகள் இருந்தாலும் சரி, அல்லது ட்ரிப்யூனல் போன்ற மன்றங்களில் விசாரணையில் இருக்கும்படியான உத்தியோகஸ்தர்களாயிருந்தாலும் சரி அவர்களை அம்மாதிரி நீர்த்தேக்கத் திட்டங்களிலே இல்லாதிருக்கும்படி சாக்கார் விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" வைகை திட்டத்திலே, சற்று வேலை தாமதமாக நடக்கிறது. அதிலே சர்க்கார் விசேஷ கவனஞ் செலுத்தி அதை துரிதமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் கால்வாய் வேலை இப்போது ஆரம்பிக்கப்போகிறார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் இந்தக் கால்வாய் வேலை

முடிக்கிறார்களோ அவ்வளவு சீக்கிரத்தில் அந்த பிராந்தியத்தில் நீர்பாசன வசதி ஏற்படும். அடுத்தாற்போல் மைனர் இர்ரிகேஷன் டாங்க்ஸ் விஷயம் ஒரு முக்கியமான விஷயமாகும். இதுவரை இல்லாத ஒரு விஷயத்தை சீப் இஞ்ஜினீர் அவர்கள் புகுத்தி இருக்கிறார்கள். கண்மாய் கரையை மாத்திரம், பக்கத்திலுள்ள மண்ணை வெட்டிப்போட்டு, பலப்படுத்த ஏற்பாடு செய்வார்கள். அதனால் கண்மாயில் தண்ணீர் பெருகி மேலே வராமல் பார்த்துக்கொள்ள நல்ல பந்தோபஸ்த்து ஏற்படும். அவ்விதம் செய்தால் கண்மாய் கரை பலப்படுமேயொழிய கூடுதலான தண்ணீரை கண்மாயில் தேக்கம் செய்ய முடியாது. அந்த கண்மாய்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாக தண்ணீர் தேங்கித் தேங்கி, அதனுடைய ஆழம் மேடுபட்டு, தற்போது, அவைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரின் அளவு எவ்வளவோ குறைந்திருக்கிறது. அப்படி தேக்கக் குறைவுள்ள கண்மாய்களிலிருந்து மண்ணை தோண்டி எடுப்பதற்கு ஒரு புதுத் திட்டம், சர்க்கார் ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. அது மாதிரி செய்தால், அதிலே மக்கள் மிக நன்மை அடைவார்கள் என்பதை சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளுவதோடு கூடுதலான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்து அதிக உற்பத்தியை பெருக்க ஏது ஏற்படும். Western ghats என்ற மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து வரும் கல்லாறு பம்பையாற்று நதிகளின் தண்ணீரை கட்டுப்படுத்த வேண்டியதற்கான திட்டங்கள் அமைத்து, அதை நீர்ப்பாசன வசதிகளுக்கு உபயோககரமாக இருக்கும்படிச் செய்ய விசேஷ முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நெய்வேலி நிலக்கரி சுரங்க திட்டத்தை நானும், மற்ற அங்கத்தினர்களும் நேரடியாகப் போய் பார்த்தோம். இப்போது 150 அடிக்கு மேல் வெட்டி எடுத்திருக்கிறார்கள். அதற்கு கீழே 75 அடி கனத்திலே நிலக்கரி சுரங்கம் இருப்பதாக நாங்கள் தெரிந்துகொண்டோம். ஆனால் விசேஷ சக்திவாய்ந்த நீர் குழாய்கள், பம்புகள் வைத்து, அச்சுரங்கத்திலுள்ள தண்ணீரை வெளியேற்றின பிறகுதான், நிலக்கரியை வெட்டி எடுக்கப் போவதாக, எங்களுக்குச் சொன்னார்கள். இந்தக் காரியத்தில் நாம் எவ்வளவு வெற்றி அடையமுடியுமென்பது தெரியவில்லை. அங்கே, நீர் ஊற்று மூலம் அதிக தண்ணீர் வந்தால் என்ன செய்வார்கள் என்பதும் தெரியவில்லை. அதைப்பற்றி சர்க்கார் விசேஷ ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தாற்போல், சமுதாய நலத்திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம், இந்த மூன்று திட்டங்களும் இந்த மாகாணத்தில் ஒரு விசேஷ உணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற படுத்தியிருக்கிறது. நமது தேசத்திலே, அந்நிய ஆட்சி காலத்திலே, சர்க்கார் விசேஷ கவனம் செலுத்திக்கொண்டுவந்த, எந்த முக்கிய திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், அது சர்க்கார் திட்டமாகத்தான் இருந்துகொண்டிருந்தது. ஆனால் மக்கள் சர்க்கார் நடக்கும் தற்போதைய குடியரசு ஆட்சியிலே, எந்தத் திட்டம் நடந்தாலும், சர்க்கார் எவ்வித அபிவிருத்தி திட்டம் ஏற்படுத்தி நடத்தினாலும், அது மக்கள் திட்டமென்று, பொது மக்களுக்கு உணர்ச்சி ஏற்படும் வகையில் நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு சிறு வேலையை எடுத்துக்கொண்டாலும், அந்த வேலை, அந்த பிராந்திய மக்களுடைய உணர்ச்சி, சரீர உழைப்பு, உதவி காரணமாக செய்யப்பட்டிருந்தாலும், வேறு எந்த விதமான முயற்சி, சக்தியைக் கொண்டு செய்வதாய் இருந்தாலும், அவர்களிடையே ஒரு புது உணாச்சியை உண்டாக்கியிருக்கிறது. அதாவது தங்கள் முயற்சியால் செய்யப்பட்ட வேலை, தங்களுடைய வேலை என்று அதன் மேல் அபிமானம் ஏற்படுகிறது. அத்திட்டம், மக்களுடைய திட்டமென்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. அவ்வித உணர்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் நடவடிக்கைகளால்தான் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த உயர்ந்த ரக திட்டத்தை சர்க்கார் நல்ல முறையில் எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தாற்போல், மதுரையைப்பொறுத்தளவில் அங்கு பெரிய ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அதிலே பல்லாயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள், அங்கே இருந்து சிகிச்சை பெருகிறார்கள். அந்த ஆஸ்பத்திரி

[Sri S. Thinakaraswami Thevar] [3rd August 1955

இன்னும் விஸ்தரிக்கப்படவேண்டும். மற்றும், அந்த ஆஸ்பத்திரியில், ஒரு சலவை யந்திரம் நிறுவப்படவேண்டும். அவ்வியந்திரத்தை அங்கு நிறுவிவிட்டால், அதனால் சர்க்காருக்கு விசேஷ லாபமிருக்கிறது. அவ் வாஸ்பத்திரியில் இருக்கும், துணிகளை, சொற்ப செலவில் சுத்தம் செய்ய லாம், துணிகள் நீண்ட நாள் உழைக்கும். அம்மாதிரியான **Steam Laundry** யந்திரத்தை அங்கே இயக்கிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தாற்போல், எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், திரு மங்கலம் தாலுக்காவில், குஷ்டரோக வியாதி பரவிக்கொண்டிருக்கிறது. தற்போது பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு இந்த வியாதி வந் திருக்கிறது. எங்கள் பிராந்தியத்தில், கட்டதேவம்பட்டியில் 20 வருஷங் களுக்கு முன்னால் நூற்றுக்கு 10 பேர்தான் இக்குஷ்டரோக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். இன்று நூற்றுக்கு 80 பேர் குஷ்டரோகிகளாக இருக்கிறார்கள். அந்த பிராந்தியம், இந்த சமுதாய நலத்திட்டத்திலே யுள்ள கிராமமாகும். இப்பேர்ப்பட்ட கிராமத்தில் இவ்வியாதியை பரவ விடுவது வருந்தத்தக்க விஷயமாகும். ஆகவே அதற்கு வேண்டிய தடுப்பு நடவடிக்கையை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். கடைசியாக, எங்கள் ஜில்லாவில் கள்ளர் சீர்திருத்த இலாகா என்று ஒன்று இருக்கிறது. அதாவது **Ex-Criminal tribe** இனத்தார்களுடைய அபிவிருத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இலாகா. இது விஷயமாக சர்க்கார் விசேஷ கவனஞ் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார் கள். இருந்தாலும் போதுமான அளவு கவனஞ் செலுத்தப்படவில்லை. லட்சக்கணக்கான மக்கள் என்னுடைய மதுரை ஜில்லாவில் வாழ்கிறார் கள். இவர்கள் வெகுகாலமாக (Criminal Tribes Act) என்ற சட்டத்தினால் பாதிக்கப்பட்ட சமுதாயமாகும். இவர்கள் கல்வி, பொருளா தாரம், சுகாதாரம் இத்துறைகளில் மிகவும் பிற்போக்காக இருக்கிறார்கள். இத்துறைகளில், இம்மக்கள் முன்னேற சர்க்கார் விசேஷ கவனஞ்செலுத்த வேண்டும். கல்வி வசதிக்காக ஹாஸ்டல் வசதி முதலிய பல உதவிகள் கொடுத்து, அப்பிராந்தியத்திலுள்ள இப்பிற்போக்கான சமுதாயத்தை, முன்னேற்றத்திற்கு கொண்டுவர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

5 12 a.m.

*Sri V. SANKARANARAYANA MENON :—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഇത്തവണ നിയമസഭയുടെ സമ്മേളനം ആരംഭിക്കുമ്പോൾ ഗവണ്ണരുടെ ഒരു പ്രസംഗം ഉണ്ടാകുമെന്നു മുൻകൂട്ടി അറിഞ്ഞിരുന്നതുകൊണ്ടു ഈ നാട്ടിലെ ജനങ്ങൾ വളരെ പ്രതീക്ഷയോടെ അതിനെ കാത്തിരിക്കയായിരുന്നു. ഇന്നാട്ടിനെ, എന്നുവേണ്ട ഭാരതത്തിനെയാകെതന്നെ, അലട്ടിക്കൊണ്ടിരിക്കുന്ന ഭയങ്കരമായ തൊഴിലില്ലായ്മപ്രശ്നത്തിനു പരിഹാരം കാണണമെങ്കിൽ ഭൂമിയെസംബന്ധിച്ചിടത്തോളം വിപുലമായ ഒരു പരിഷ്ക്കാരം വരുത്തേണ്ടതു അത്യന്താപേക്ഷിതമാണെന്നു ഇന്നാട്ടിലെ എല്ലാ രാഷ്ട്രീയ കക്ഷികളും പ്ലാനിംഗ് കമ്മീഷനും മററു വിദഗ്ദ്ധന്മാരും പലവുരു പ്രസ്താവിച്ചിട്ടുണ്ട്. ഒന്നാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതിയിൽ നേടാൻ സാധിക്കാതെ വീഴ്ചവന്നതായ ഇക്കാര്യം ഇനി കാലതാമസം കൂടാതെ ചെയ്യുന്നതാണെന്നും ഭരണച്ചുമതല വഹിക്കുന്ന ആളുകൾ പലതവണ പ്രഖ്യാപിച്ചിട്ടുണ്ട്. പ്രത്യേകിച്ചും നമ്മുടെ മുഖ്യമന്ത്രി—അദ്ദേഹം സാധാരണ ഒരു മുഖ്യമന്ത്രിയല്ല ; ദീർഘകാലം സാധാരണ ജനങ്ങളുമായി ഇടപഴകി പൊതുപ്രവർത്തനങ്ങളിൽ പരിചയിച്ച് അവരെ പ്രതിനിധീകരിക്കുന്ന ഒരു മുഖ്യമന്ത്രിയാണ് അദ്ദേഹം—ഭൂപരിഷ്ക്കരണത്തിനുള്ള വിപുലമായ ഒരു നിയമം അടുത്ത നിയമസഭാസമ്മേളനത്തിൽ അവതരിപ്പിക്കുന്നതാണെന്നും അതിനു കഴിഞ്ഞില്ലെങ്കിൽ താൻ രാജിവെയ്ക്കാൻ തീരുമാനിച്ചിരിക്കയാണെന്നും കുറച്ചുമുമ്പു പ്രസംഗിച്ചതായി പത്രങ്ങളിൽ കണ്ടു. അതുകൊണ്ടുകൂടിയാണ് ഇത്തവണത്തെ ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തെപ്പററി ജനങ്ങൾക്കു വലിയ പ്രതീക്ഷയുണ്ടായിരുന്നത്. കോൺഗ്രസ്സിൻെറ പതിവുപോലുള്ള നയം മാററംകൊണ്ടോ, ഇന്നാട്ടിലെ ജനങ്ങളുടെ ദൌർഭാഗ്യംകൊണ്ടോ അത്തരം ഒരു പരിഷ്ക്കാരത്തിൻെറ യാതൊരു സൂചനയും ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ കണ്ടില്ല. അതിനു പകരം മര്യാദപ്പാട്ടം, സ്ഥിരാവകാശം മുതലായി ചില ചില്ലറ കാര്യങ്ങൾക്കുവേണ്ടി നിയമമുണ്ടാക്കുവാനാണുദ്ദേശിക്കുന്നത്. എത്ര തുച്ഛവും നിസ്സാരവുമാണ് ഈ പരിഷ്ക്കാരങ്ങളെന്നു മര്യാദപ്പാട്ടവും സ്ഥിരാവകാശവും നടപ്പിലുള്ള മലബാറിൽനിന്നു വരുന്ന ഒരാളെന്നനിലയ്ക്ക് എനിക്കു മനസ്സിലാക്കുവാൻ സാധിച്ചിട്ടുണ്ട്. നാമമാത്രമായ ഇത്തരം നിയമ

3rd August 1955] [Sri V. Sankaranarayana Menon]

നിർമ്മാണങ്ങൾകൊണ്ടൊന്നും നമ്മുടെ നാട്ടിലെ തൊഴിലില്ലായ്മ പരിഹരിക്കാൻ സാദ്ധ്യമല്ല. തൊഴിലില്ലായ്മയ്ക്കു പരിഹാരം ഉണ്ടാകണമെങ്കിൽ ഭൂമിയെ സംബന്ധിച്ചിടത്തോളം വിപുലമായ പരിഷ്ക്കാരങ്ങൾ നടപ്പിൽ വരുത്തിയേ തീരൂ. അതിനു ഗവമ്മേണ്ട് ഈ അവസരത്തിലും ശ്രമിച്ചിട്ടില്ലെന്നു കാണുന്നതു വളരെ പരിതാപകരമാണ്.

"കുടിൽവ്യവസായങ്ങളെ പ്രോത്സാഹിപ്പിക്കുകയാണ് തൊഴിലില്ലായ്മയ്ക്കു പരിഹാരം കാണാനുള്ള മറെറാരു മാർഗ്ഗം. അതിനും ഗവമ്മേണ്ട് കാര്യമായൊന്നും ചെയ്തു കാണുന്നില്ല.

"മലബാറിനെസംബന്ധിച്ചു പറയുകയാണെങ്കിൽ, അവിടെ വലിയ പദ്ധതികളൊന്നും സാദ്ധ്യമല്ല, ചെറുകിട ജലസേചനപദ്ധതികൾക്കേ അവിടെ സാദ്ധ്യതയുള്ളു, അതുകൊണ്ടു മലബാറിൽ ചെറുകിട ജലസേചനപദ്ധതികൾക്കു രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയിൽ പ്രത്യേകം പരിഗണന നൽകുന്നതാണ് എന്നെല്ലാം ഗവമ്മേൻണ്ടിന്റെ ഒരു കുറിപ്പിൽ കാണുകയുണ്ടായി. മലബാറിലെ കുടിൽവ്യവസായങ്ങളെപ്പററി അന്വേഷിക്കാനും അവയുടെ മേൽനോട്ടം വഹിക്കാനുമായി ഒരു കമ്മിററിയെ ഇയ്യിടെ നിയമിച്ചിട്ടുണ്ട്. ആ കമ്മിററിയിലെ അംഗങ്ങളുടെ പേരുകേട്ടപ്പോൾതന്നെ ഇതു വെറുമൊരു പ്രഹസനമല്ലേ എന്നാണ് എനിക്കു തോന്നിയതു്. അതിനു മതിയായ കാരണമുണ്ട്. കുടിൽവ്യവസായങ്ങളുടെ മേൽനോട്ടം വഹിക്കുന്നതിനുള്ള കമ്മിററിയിൽ കുടിൽവ്യവസായങ്ങളുമായി യാതൊരു ബന്ധവുമില്ലാത്തവരായ ഇരുമ്പുവ്യവസായം പ്ലൈവുഡ് വ്യവസായം മുതലായ വൻകിട വ്യവസായങ്ങളുടെ നടത്തിപ്പുകാരും മാനേജർമാരും മററുമാണ് ഉള്ളതു്. അവർക്കു ചെറുകിട വ്യവസായങ്ങളിൽ എത്രമാത്രം വിശ്വാസവും താല്പര്യവും ഉണ്ടായിരിക്കുമെന്നു മനസ്സിലാക്കാൻ പ്രയാസമില്ല.

"മലബാറിൽ ചെറുകിട ജലസേചനപദ്ധതികൾക്കു ധാരാളം സൌകര്യമുണ്ട്. അവ ഏർപ്പെടുത്തിത്തരണമെന്നു ഞങ്ങൾ പണ്ടേ പലപ്രാവശ്യവും മുറവിളികൂട്ടിയതാണ്. മലബാറിൽ ചെറുകിട ജലസേചനപദ്ധതികൾക്കേ സാദ്ധ്യതയുള്ളു, അതിൽ ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധ കേന്ദ്രീകരിക്കാൻ പോവുകയാണെന്നു പലതവണ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാർ പറഞ്ഞിട്ടുമുണ്ട്. ഒന്നാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതി അവസാനിക്കാറായി. മലബാറിൽ പറയത്തക്ക യാതൊരു ചെറുകിടജലസേചനപദ്ധതികളും ഏർപ്പെടുത്തിയിട്ടില്ല. ചെറുകിട ജലസേചനപദ്ധതികളേർപ്പെടുത്തുകയെന്നു പറഞ്ഞാൽ മുമ്പു കൃഷിക്കു ഉപയോഗിച്ചിരുന്ന കുളങ്ങൾ, തോടുകൾ മുതലായവ നന്നാക്കിയെടുക്കുകയെന്നുള്ളതാണ് പ്രധാന കാര്യം. സ്വകാര്യ ഉടമയിലുള്ള അനേകം കുളങ്ങളും തോടുകളും മലബാറിലുണ്ട്. ഗവമ്മേണ്ട് ഇടപെട്ടു അവ നന്നാക്കുന്നതിനു ഇന്നു പല നിയമതടസ്സങ്ങളും നിലവിലുണ്ട്. ഇക്കാര്യം ഞങ്ങൾ പല പ്രാവശ്യം ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽ കൊണ്ടുവന്നിട്ടുണ്ട്. ഇന്നാട്ടിലെ കൃഷി അഭിവൃദ്ധിപ്പെടുത്തണമെന്നും തൊഴിലില്ലായ്മയ്ക്കു പരിഹാരം കാണണമെന്നും ഗവമ്മേണ്ടിനു ആഗ്രഹമുള്ളപക്ഷം ഈ നിയമതടസ്സങ്ങൾ നീക്കാനുള്ള ഒരു ബില്ല് അടുത്ത സമ്മേളനത്തിലെങ്കിലും പാസ്സാക്കാൻ വേണ്ട നടപടിയെടുക്കുമെന്നു ഞാൻ കരുതുന്നു. സ്വകാര്യ ഉടമയിലുള്ള കുളങ്ങളിൽ പ്രവേശിച്ചു നന്നാക്കാൻ ഗവമ്മേണ്ടിനു അധികാരമില്ലെന്നാണ് റവന്യൂ ബോർഡ് പറയുന്നതു്. ചുരുക്കത്തിൽ തന്നിമിത്തം ഒരു കുളവും നന്നാക്കാൻ സാധിച്ചിട്ടില്ലെന്നുള്ളതാണ് പരമാർത്ഥം. ഇനിയെങ്കിലും ഈ തടസ്സം നീക്കി മലബാറിൽ ചെറുകിട ജലസേചനപദ്ധതികൾ നടപ്പിൽ വരുത്താനുള്ള ആത്മാർത്ഥമായ ഒരു ശ്രമം ഗവമ്മേൻറ് നടത്തണമെന്നു അഭ്യർത്ഥിക്കുന്നു. കുളങ്ങളും തോടുകളും സ്ഥിതിചെയ്യുന്ന സ്ഥലങ്ങൾ ഗവമ്മേൻറു പിടിച്ചെടുത്തു ജലസേചനപദ്ധതികൾ നടപ്പിൽവരുത്താൻ ഗവമ്മേണ്ടിനു അധികാരം നൽകുന്ന ഒരു നിയമം നിർമ്മിക്കുന്നതിനു ഗവമ്മേൻറു ശ്രമിച്ചുകാണുന്നില്ല. അതുകൊണ്ടു ഗവമ്മേണ്ടിന്റെ പ്രഖ്യാപനങ്ങളുടെ ആത്മാർത്ഥതയെക്കുറിച്ചുതന്നെ എന്നെപ്പോലുള്ളവർക്കു വലിയ സംശയവും ആശങ്കയുമാണുള്ളതു്.

"സോഷ്യലിസ്റ്റ് അടിസ്ഥാനത്തിലുള്ള ഒരു ക്ഷേമരാഷ്ട്രം കെട്ടിപ്പടുക്കുകയാണ് ഗവമ്മേണ്ടിന്റെ ലക്ഷ്യമെന്നു പറയുന്നുണ്ട്. അതിനെ ആസ്പദിച്ചു ഗവമ്മേണ്ടിന്റെ നയത്തെ സൂചിപ്പിക്കുന്ന ഏതെങ്കിലും ചിലതു് ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിലുണ്ടാവുമെന്നു പലരും പ്രതീക്ഷിച്ചിരുന്നു. പക്ഷെ അങ്ങനെയുള്ള യാതൊന്നും അതിൽ കണ്ടില്ല. സ്വത്തിലും വരുമാനത്തിലുമുള്ള വ്യത്യാസം കുറയ്ക്കുകയെന്നുള്ളതാണ് ഏററവും പ്രധാനപ്പെട്ട കാര്യം. സ്വത്തിന്റെ കാര്യം പറയുമ്പോൾ ഭൂമിയിലുള്ള ഉടമസ്ഥാവകാശത്തിനും ഭൂമി കൈവശത്തിനും ഒരു ക്ലിപ്തമായ പരിധി നിശ്ചയിക്കുകയെന്നുള്ളതാണ് ഒന്നാമ

തായി നാം ഉദ്ദേശിക്കുന്നതു്. അതിനുള്ള നിയമം കൊണ്ടുവരുമെന്നു ഗവമ്മേണ്ടു് പ്രഖ്യാപിച്ചിരുന്നു. ജനങ്ങൾ പ്രതീക്ഷിച്ചിരുന്നു. പക്ഷെ അങ്ങനെയൊരു നിയമമല്ല ഇപ്പോൾ വരാൻപോകുന്നതു്. മററിനങ്ങളിലുള്ള വ്യത്യാസം കുറയ്ക്കാനുള്ള വല്ല ശ്രമവും ഗവമ്മേണ്ടു് ചെയ്തിട്ടുണ്ടോ എന്നു നോക്കിയാൽ അതുമില്ല. ഏതു ഡിപ്പാർട്ടുമെൻറിലേയും വലിയ ഉദ്യോഗസ്ഥന്മാരുടേയും ചെറിയ ഉദ്യോഗസ്ഥന്മാരുടേയും ശമ്പളത്തിലുള്ള വ്യത്യാസം ഒന്നുമാത്രം നോക്കിയാൽമതി ഈ ഗവമ്മേണ്ടിൻെറ സോഷ്യലിസം എങ്ങോട്ടാണു് പോകുന്നതെന്നു മനസ്സിലാക്കാൻ. റവന്യൂ ഡിപ്പാർട്ടുമെൻറുതന്നെയെടുത്തു നോക്കാം. ഇങ്ങേയററത്തു 20 ക. മാത്രം മാസപ്പടി വാങ്ങുന്ന കോൽക്കാരനെ ഒരു വശത്തും അങ്ങേയററത്തു 3,000 ക. വാങ്ങുന്ന റവന്യൂ ബോഡ് മെമ്പറെ മറുവശത്തും കാണുമ്പോൾ സ്ഥിതിസമത്വം നടപ്പിൽ വരുത്താനാണു് തങ്ങൾ നിലകൊള്ളുന്നതെന്നും അതിനുവേണ്ടിയാണു പഞ്ചവത്സരപദ്ധതികൾ ഉദ്ദേശിച്ചിട്ടുള്ളതെന്നും മററും ഭരണാധികാരികൾ പറയുന്നതിൽ വല്ല കഴമ്പുമുണ്ടോ എന്നു സംശയിച്ചുപോകുന്നു. ഈവക കാര്യങ്ങളിൽ മൌലികമായ ചില പരിഷ്കാരങ്ങൾ വരുത്താൻ ഗവമ്മേണ്ടു് തയ്യാറില്ലെങ്കിൽ ജനങ്ങളുടെ പ്രതീക്ഷകളുടെ ഫലം എന്തായിരിക്കുമെന്നോ ഈ രാജ്യത്തിൻെറ ഭാവി ഏതുനിലയിലായിരിക്കുമെന്നോ എനിക്കു നിശ്ചയമില്ല. അങ്ങിനെ ഒരപകടത്തിലേക്കു രാജ്യത്തെ തള്ളിനീക്കരുതേ യെന്നാണു് എൻെറ അപേക്ഷ. ഈ സന്ദർഭത്തിൽ ഇത്ര മാത്രമേ എനിക്കു പറയാനുള്ളൂ."

5-50 p.m. * SRI M. S. MOGRAL :—" Mr. Deputy Speaker, Sir, I rise to support the Motion of Thanks to His Excellency the Governor for his optimistic address in which he has detailed some of the important aspects of the State administration. Sir, the Governor has rightly begun his address with a tribute on behalf of all of us to our great Prime Minister for his glorious contribution to the cause of peace and for laying down the principles of co-existence during his recent tours.

" The Governor has referred to the appointment of our popular Speaker as a Member of the Union Public Service Commission. We will soon be missing from our midst a very amiable personality whose mastery about the complicated details of Parliamentary procedure will be remembered by all of us. The scrupulous care with which he upheld the glorious tradition of Parliamentary practice and the dignity of the House will ever be green in our minds. I take this opportunity to wish him all success in the office which he is going to occupy.

" The Governor's Address refers to the price of agricultural commodities and it is very apt at this stage. So far as South Kanara is concerned, the price of agricultural commodities is not going up. On the other hand, it seems that it is going down. No doubt, it is a serious problem in view of the fact that the prices of industrial products and other essential articles are still high. As the cost of living has not appreciably come down, those engaged and dependant on agriculture do reasonably apprehend that if the decline in the price of agricultural commodities is not effectively checked by the Government by pressing upon the Union Government for a price support programme and to take suitable and adequate measures, agriculture may have to remain hereafter as a way of living rather than as a means of living. Failure to check the fall in the prices of agricultural commodities is sure to upset the agricultural population, as agriculture is an occupation which engages the largest number of people in the country and is the

backbone of our country's economy. It is ultimately bound to result in disastrous consequences. We are well aware that during the dark days of rationing and control, shortages had put an edge to people's temper. Any neglect leading to fall in the prices of agricultural commodities is sure to cause a sharper edge in the temper of the agricultural population. I need not remind the Government as to how much of sincere effort and propaganda was needed all along to evoke enthusiasm in the agriculturists to step up agricultural production. It is therefore quite essential that suitable and adequate measures should be taken up by the Government to see that the prices are kept up high.

" The Governor's reference in the Address to the Bill that is to be introduced to safeguard the rights of tenants will be received with satisfaction throughout the State as a beginning in the right direction. It is a fact that the agriculturists all over the State are anxiously awaiting reforms defining the relations between the landlords, tenants and a large section of labourers who are engaged in agricultural operations. The delay in implementing these reforms has completely upset the agriculturists. While I do appreciate the difficulties of the Government in recasting the age-long feudal system and reconciling it with modern notions and legal technicalities, it has to be remembered that this sort of suspense will upset the agriculturists. The wellbeing of the agriculturist is the primary concern of the Government. As regards South Kanara district, I would like to mention that the system that is prevailing there is a peculiar one. A large section of the labourers who actually till the soil are employed both by the landlords and tenants for agricultural operations. This class of persons is nowhere to be found in the picture in the proposed reforms. They are neither landlords nor tenants. Therefore, I submit that in the future order of things these agricultural labourers should find a proper place.

" Another subject of importance to which the Governor has referred is the extension of Community projects and National Extension Schemes. These schemes have provided many amenities to our villagers who have been clamouring for them for generations. When the schemes were first introduced, misgivings and doubts were entertained by the people about the ultimate success of the schemes, but the phenomenal progress achieved so far has opened up a brighter chapter for the country, thanks to the enthusiastics efforts of our officers and the willing co-operation of our villagers. It is certainly gratifying to note that the aspirations of our people are being fulfilled. Provision for water-supply, village roads and libraries and other facilities are provided, which certainly aim at national reconstruction. Another matter which I would like to refer is about the Local Development works. I think that so far as the district of South Kanara is concerned, about Rs. $1\frac{1}{2}$ lakhs was allowed to lapse last year. This is due to the fact that technical staff were sanctioned very late. So there was no time to execute the works. Therefore, I have got a special request to make to the Hon. Finance Minister, that in addition to the sum of two lakhs

[Sri M. S. Mogral] [3rd August 1955

allotted to South Kanara, a further allotment of rupees two lakhs should be made and instructions given to the Collector of the district.

"The Governor has referred to the Five-year Plan and it is quite apt. The Five-Year Plan has been described as the 'Bible of Free India' and is intended to bring about all-round improvement for achieving the ideal of a Welfare State. The first Five-year Plan was able to evoke a great deal of enthusiasm among the people and the results achieved are really phenomenal. It is in the present set-up that we are going to launch our Second Five-year Plan. We have every reason to hope and feel confident that the Second Plan will easily reach the target we have fondly hoped and that it will promote the growth of underdeveloped areas in the country."

6 p.m. *Sri M. P. SUBRAMANYAM :—" அவைத்தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னருடைய பேருரையில், இந்திய துணைக் கண்டத்தின் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள், உலக அரங்கில் பல நாடுகளின் மத்தியில் அமைதி ஏற்படுத்துவதற்காக, நல்லெண்ணம் உண்டாக்குவதற்காக அவர் அரும்பாடுபட்டதற்கு, கவர்னர் அவர்கள், திரு. நேருவுக்கு பாராட்டுதலை தெரிவித்திருக்கிறார்கள். இன்று உலகத்திலே இருக்கும் இரு முகாம்களுக்கு மத்தியில், அமைதி, நல்லெண்ணம், ஏற்படுவது எவ்வளவு அவசியம் என்று கருதுவதில் நாங்கள் எந்த ஒரு சாராருக்கும் இரண்டாவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. நேருவினுடைய இந்த முயற்சிகளைக்கண்டு நாங்கள் அவரை பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்.

"ஆனாலும், இன்று, பலமாதங்களாக வெளி உலகில் சுற்றுப் பிரயாணம் செய்ய அவகாசமிருந்த திரு. நேருவுக்கு உள்நாட்டு பிரச்சினைகளில் அவ்வளவு அக்கரை இல்லை என்றே தெரிகிறது. நம் அருகாமையிலுள்ள, சிலோனில் வாழும் தமிழர்கள், திராவிடர்கள், இந்தியாவுக்கு சிலோன் கவர்ன்மெண்டாரால் துரத்தி அடிக்கப்படுகின்றனர். பாக்கிஸ்தானிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட இந்திய மக்களின் இடுக்கண்களை போக்க முன்வந்த இந்திய சர்க்காருக்கு இத்தமிழர்களை இங்கு வாழவைக்க வேண்டுமென்ற நல்ல உள்ளம் இருப்பதாகத் தெரியவில்லை. இதைப் பல கட்சிக்காரர்கள், அரசியல் கட்சிக்காரர்கள் அநேக சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கு வந்த சிலோன் இந்தியர் காங்கிரஸ் தலைவரும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். இன்று, சிலோன் இந்தியர்கள், சிலோன் பிரஜைகளாக பதிவு செய்துகொள்ள விரும்புகிறார்கள். சிலோன் இந்தியர்களுடைய, இக் கோரிக்கையை அடைய இந்திய அரசாங்கம் விசேஷ கவனஞ் செலுத்தினால் போதும். மற்ற விஷயங்களை, சிலோன் அரசாங்கத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்ய சிலோன் இந்தியர் காங்கிரஸுக்குத் தெரியுமென்று கூறியிருக்கிறார்கள். இச்சிலோன் இந்தியர் பிரச்சினை பல ஆண்டுகளாக மிகச் சிக்கலாக இருந்து கடைசியாக, இந்திய- சிலோன் அரசாங்கங்கள் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்துங்கூட அந்த உடன்படிக்கையை, சிலோன் அரசாங்கம் மதித்து, அதன்படி நடக்க, நிறைவேற்ற எந்தவிதமான அக்கரையும் காட்டவில்லை. அதற்கு மாறாக, சிலோன் அரசாங்கம், அம்மக்களுக்கு மேலும், மேலும் கொடுமையை இழைத்து அநீதி செய்துகொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கமும், இக் கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு வாளா இருந்துகொண்டிருக்கிறது. இன்று வெளிநாடுகளின் எவ்வளவோ பிரச்னைகளில் அக்கரைக் காட்டிக் கொண்டு, அதற்காக தூதுவர்கள் ஆங்காங்கு அடிக்கடி ஆகாயக் கப்பலில் பறந்து சென்று, தூதுவர் அலுவலகங்கள் ஏற்படுத்தி, பல லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து, தங்கள் நாட்டின் புகழை நிலை நாட்ட வேண்டுமென்று நினைக்கும் திரு. நேரு அவர்கள், சிலோனில்

அவதியுறும் மக்கள், தமிழர்கள, தென்னாட்டவர், திராவிடர் என்ற ஒரே காரணத்திற்காக இச்சிலோன் இந்தியர்கள் பிரச்சினையில் அக்கரை காட்டவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

" இன்று சிலோனில் வாழக்கூடிய இந்தியர்கள் கள்ளத்தனமாக குடியேறியவர்கள் என்று விரட்டித்தள்ளப்படுகிறார்கள். உலகத்தில், மக்களில் சாதாரண அறிவு படைத்தவன் ஒருவனைப் பார்த்துகேட்டால்கூட, குற்றவாளி என்று ஒருவனை கூறினால், குற்றம் சாட்டுபவன்தான் அதற்கு வேண்டிய ஆதாரம் காண்பிக்கவேண்டும் என்று உரைப்பான். எவன் ஒருவன் குற்றவாளி என்று குறிப்பிடப்படுகிறானோ, அவனே தான் குற்றவாளி அல்ல என்று நிருபித்துகொள்ளவேண்டும் என்று கூறுவது மனித அறிவுக்கு பொருந்தாத ஒரு கூற்றாகும். மேலும் யாரும் ஒப்புக்கொள்ளக் கூடாத ஒரு செய்கையாகும். ஆனால் காரியத்தில் இலங்கையில் நடப்பது என்ன ? யாரை வேண்டுமானாலும் எந்த இந்தியனைவேண்டுமானாலும், தான்பிறந்தது முதற்கொண்டு இலங்கையிலேயே வாழ்ந்து, அன்றாடம் 1, 2 ரூபாய் சம்பாதித்து வாழக்கூடிய, படிப்பு ஒன்றும் தெரியாத ஒரு இந்தியனை, பல ஆண்டு காலமாக தான் அங்கு வாழ்ந்தவன் என்பதற்கு ஆதாரபூர்வமான ஒரு அத்தாட்சி வைத்திருக்கத் தெரியாதவனைப் பார்த்து 'நீ கள்ளத்தனமாக தோணியில் வந்தவன்' என்று குற்றம் சாட்டி, 'நீயே குற்றவாளி அல்ல என்பதை நிருபித்துக்கொள்ளவேண்டும்' என்று கூறுகிறார்கள். இவ்வளவு மோசமான நிலையில், இந்திய மக்கள், குறிப்பாக தென்னாட்டு மக்கள், நடத்தப்பட்டு வருகிறார்கள். பத்திரிகையில் நாம் தினமும் படிக்கிறோம். இதுவரையில் பல்லாயிரக்கணக்காக இலங்கைவாழ் இந்தியர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மனுக்கள் போட்டு, அந் நாட்டு குடிமக்களாக பதிவு செய்துகொள்ள விரும்பியும்கூட ஒரு மனுவை ஏற்றுக்கொண்டால், 2,000, 3,000 மனுக்களைத் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். நமது உடன்பிறந்தவர்களாகிய, திருநெல்வேலி, மதுரை மாவட்ட மக்கள், ஆயிரக்கணக்காக அங்கு சென்றிருக்கிறார்கள். எதற்காக அங்கே போய் அந்நாட்டு வியாபாரத்தில் பணத்தை எவ்வளவு முதலீடு செய்வது என்று வியாபாரத்துறையில் அங்கே இருக்கிற இலங்கை அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்து கொள்ளவா ? அல்ல, வயிற்றுப்பிழைப்புக்காக வெளிநாட்டுக்கு சென்றார்கள். வடநாட்டு அரசாங்கம் இலங்கை இந்தியர்களாகிய தென்னாட்டு மக்கள் பிரச்னையில் அக்கரை காட்டவில்லை. அதற்கு இந்த வடநாடு, தென்னாடு என்கிற பேதம்தான் காரணம் என்று நாங்கள் கூறும்போது, இந்த மாநில அமைச்சர்களும், மற்றும் மாற்றுக்கட்சி தோழர்களும் வடநாடு தென்னாடு எனப்பேசும் பிரேமை என்று எங்களை குற்றம் சாட்டமுற்பட்டு, உண்மையை பார்க்க மறுக்கின்றனர். அம்மாதிரி உண்மையை பார்க்க மறுப்பார்களேயானால், தங்கள் இனத்தவர்கள், தாங்கள் எந்த மக்களுக்கு பாடுபடுவதாக சொல்லுகிறார்களோ, அவர்களுக்கு தீங்கு இழைத்தவர்கள் ஆவார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

" அதற்கு அடுத்தபடியாக, கவர்னர் பெருமான் அவர்கள், நாட்டில் இன்று எல்லா இடங்களிலும் மழை பெய்து, நாடு சுபீட்சமாக, திருப்திகரமாக இருக்கிறது என்று கூறினர். அவர் கூற்று எவ்வளவு பொய்மையாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக சிறிது நேரத்திற்கு முன்பு பேசிய திரு. மகாலிங்கம் அவர்கள் பொள்ளாச்சி வட்டாரத்தில் பஞ்ச நிலைமை இன்னும் இருக்கிறது, விவசாயிகள் எல்லோரும் அவதியுறுகிறார்ள், கந்தாயப் பணம் செலுத்துவதை ஒத்திவைக்கவேண்டிய பிரச்னை இருக்கிறது என்று கூறினர். இன்னும் ஆங்காங்கு பலவிடங்களில் போதிய அளவு நீர்ப்பாசன வசதி ஏற்படும்படியான அளவுக்கு, குளம் குட்டைகளில் தண்ணீர் கிடையாது என்பதை நான் எடுத்துக்காட்டமுடியும். மழை பெய்யாததற்கு அரசாங்கம் பொறுப்பாளி என்று நான் கூற முற்படவில்லை. இருந்தாலும் கூட, இந்த நிலைமையை ஒட்டி மக்களுக்கு ஆதரவு, உதவியும் அரசாங்கம் செய்யமுன்வரவில்லை. உணவுப் பண்டங்களின் விலை குறைந்துகொண்டே போகிறது. இப்பொது ஏறுமுகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள் கவர்னர் பெருமான். அவர் கூறும் அளவுக்கு பெரிய அளவில் இன்னும் விவசாய பொருள்களின் விலை ஏறவில்லை என்பதை ஆங்காங்குள்ள சட்-

[Sri M. P. Subramanyam] [3rd August 1955

சபை உறுப்பினர்கள் அறிவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு விற்ற விலையில் நான்கில் ஒரு பங்கு விலைகூட இப்போது விற்கவில்லை. இதை எடுத்துக்காட்டும்போது, சென்னை அரசாங்கம் நாங்கள் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறோம், அது அன்றாட நிலைமையை பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிடுகிறார்கள். இது வரையிலும் கமிட்டி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, என்பது தெரியவில்லை. உத்திர பிரதேசம், இன்னும் மற்ற இடங்களில், விளையும் கோதுமையின் விலை இறங்கக்கூடாது, மற்ற பயிறு போன்ற தான்ய வகைகளின் விலை இறங்கக்கூடாது என்பதற்காக 10 கோடி ரூபாய் செலவுசெய்து, பணத்தைக்கொடுத்து, அந்த பிரதேச குடியான வர்களின் நிலைமை பாதிக்காத அளவிற்கு மத்திய அரசாங்கம் உதவி செய்து இருக்கிறார்கள். இதைச் சுட்டிக்காட்டும்போது, அரசாங்கம் வாளா இருக்கிறதென்றால் மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கமுன்வரவில்லை என்றால், தென்னாடு, வடநாடு என்கிற பேதம் இருக்கிறது என்பதற்கு இதை விடவேறு எடுத்துக்காட்டு தேவையில்லை. இந்திய அரசாங்கம், வடநாட்டு அர சாங்கம் இந்நாட்டு மக்களின் நன்மைக்கு பாடுபடமுன்வராவிட்டால், சென்னை அரசாங்கம் தக்க கவனம் செலுத்தவேண்டும். சாதாரணமாக, இன்று விவசாயிகளின் வருமானம் மிகவும் குறைந்து விட்டபடியாலும், தாங்கள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை அதிகமாக இருப்பதாலும், தாங்கள் வாங்கும் பொருட்களின் எண்ணிக்கையை குறைத்துக்கொண்டுவிட்டார்கள். முன்பு நான்கு வேஷ்டி வாங்கிய இடத்தில், இப்போது இரண்டுகூட வாங்க முடியாமல் இருக்கின்றனர். ஆகவே தான், உணவுப்பொருட்களின் விலை அதிகமாக இருந்தால், விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதுடன்கூட, அவர்கள் வாங்கும் consumer goods-ம் அதிகமாகும். அதனால் அந்த பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய அவசியமும் ஏற்படும். மேலும், இதன் விளைவாக பலபேருக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவேதான் விவசாயத்தை பெரிதும் நம்பி வாழக்கூடிய நாட்டில், விவ சாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்கள் அதிகப்படியான விலையில் விற்கவேண்டும். திடீரென்று விலை குறையக்கூடாது. அதற்கு தகுந்த முயற்சியை அரசாங்கம் எடுக்கவேண்டும். கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறோம் என்று கூறிவிட்டால் மட்டும், விவசாயிகளுக்கு திருப்தி அளித்துவிடாது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அதோடு மட்டுமல்ல, இப்போது இரண்டு ஆண்டுகளாக, குடியான வர்கள் தாங்கள் பட்ட கடன்களை திருப்பி கொடுக்கவேண்டுமென்ற அவசி மில்லை என்று இருந்தது. ஆனால் இப்போது மறுபடியும் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று கூறிவிட்டார்கள். வாங்கியகடனை திருப்பிக் கொடுக்கவேண்டியது அவசியம்தான். திருப்பி அவர்கள் கொடுக்கும் நிலையில் இல்லை. ஆகவே அதை ஒத்திப்போடவேண்டும் என்பதற்கு இணங்காமல் சட்டம் செய்து விட்ட பிறகு, அரசாங்கம் அவர்களுக்கு குறைந்த வட்டி யில் கடன்கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று உறுப்பினர்கள் கேட் டார்கள். இதற்கு ஏற்பாடு நேரிடையாக செய்யாமல், 10, 20 கிராமங் களுக்கு சேர்த்து **Rural bank** ஏற்படுத்தப்போகிறோம் என்று ஏட்டளவில் எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படியே, சில இடங்களில் ஏற்படுத்தி இருந்த போதிலும்கூட பெரும் அளவுக்கு பிரச்னை தீர்க்கப்படவில்லை. **Co-operative society** அல்லது **land mortgage bank**-ல் பணம் வேண்டுமென்றால் 1939-ம் வருஷத்தில் நிலம் மதிப்பீட்டின்படிதான் கடன் கொடுப்போம் என்கிறார்கள். இன்று ஒரு நிலத்தின் மதிப்பீடு 2,000 ரூபாய் இருக்கும், அதில் 1,000 ரூபாய் கடன் வாங்கலாம் என்று இருந் தாலும், 1937-ம் வருஷத்திய மதிப்பீட்டின்படி அந்த நிலம் 100 ரூபாய் தான் விலைபோகும் என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு, அதில் 50 ரூபாய்தான் கடன் கொடுக்கமுடியும் என்று அரசாங்கமும் **Co-operative society**-களும், **land mortgage bank**-களும் கூறுமேயானால் உண்மையாகவே அவர்கள் விவசாயிகளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் படைத் தவர்கள் என்று கூறமுடியாது. ஆகவே, இந்த அடிப்படையை அவசியம் உடனே மாற்றவேண்டும். சாதாரணமாக, அரசாங்கம் வேறு பல காரி யங்களுக்கு நிலத்தின் மதிப்பீட்டை எடுக்கவேண்டுமென்றால், தற்கால

3rd August 1955] [Sri M. P. Subramanyam]

விலையின்படி நிர்ணயிக்கிறார்கள். ஆனால் குடியானவர்களுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தில்மட்டும் **1939**-ம் வருஷத்திய அடிப்படையில்தான் முடியும் என்று கூறுகிறது. இந்த நிலைமை மாறவேண்டுமென்று பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். ஆயினும், மந்திரி அவர்கள் அதற்கு சரியான பதில் கூறவில்லை. எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை.

" அடுத்தபடியாக பல அரசியல் கட்சி உறுப்பினர்களால் வற்புறுத்தப் படும் **Land reforms** பல ஆண்டுகளாகவே கொண்டுவரப்படும் என சொல்லப்பட்டு வருகிறது. சமீப காலத்தில் நாட்டில் மிராசு தாரர்கள், கிஸான்கள் உறவு மிக மோசமாக இருக்கிறது. திருச்சியில் அடிக்கடி, மிராசுதாரர்களுக்கும், கிசான்களுக்கும் தகராறு என்று பத்திரிக்கையில் வருவதை பார்க்கிறோம். அவர்கள் இடையே நல்ல எண்ணம் இல்லாமல், மனக்கசப்பு வளர்ந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் அரசாங்கம்தான். நிலச்சீர்திருத்தம் கொண்டு வரப்போகிறோம், அதன்படி நிலத்தை, நிலம் ஓட்டுபவனுக்கு சொந்தமாக்கப்போகிறோம் என்று காங்கிரஸ்காரர்கள், அமைச்சர்களும்கூட மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக சொல்லிவருகிறார்களே தவிர தங்கள் கூற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்கு முற்படுவதில்லை. இதன் விளைவாக, நிலம் தான் நமக்கு சொந்தமாகபோகிறதே என்று நிலத்தை இதுவரை ஓட்டாதவர்கள்கூட அக்கிரமமாக சில நிலங்களில் புகுந்து ஓட்டுவதாகவும் கேள்விப்படுகிறேன். நிலச்சுவாந்தார்களும், நில சீர்திருத்த சட்டம் வந்துவிட்டால், நிலம் ஓட்டுபவனுக்கு சொந்தமாகிவிடுமே என்று அவர்களை அப்புறப்படுத்த, **100** ரூபாய், **200** ரூபாய் கொடுத்து நிலத்தை நான் ஓட்டவில்லை என்று எழுதிவாங்கிக்கொள்ளுவதாக தஞ்சை ஜில்லாவிலிருந்து வருகிற நண்பர்கள் கூறுகிறார்கள். இதெல்லாம் நீடிப்பதற்கு நிலச் சீர்த்திருத்த சட்டத்தை ஒத்திப்போட்டு செய்கிறோம் என்று சொல்லுவது தான்காரணம். கவர்னர் உரையை பார்க்கும்போதுகூட இந்தக் விஷயத்தில் மிகவும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. ஏதோ கொஞ்சம் கொஞ்சமாக நான்கு தவணைகளில் செய்யப்போகிறார்களாம். இந்தக் கூற்றின் மூலம், எதிர்பார்த்த அளவுக்கு திருப்திகரமாக நிலச்சீர்த்திருத்தம் இருக்கப் போவதில்லை என்பது புலனாகிறது. ஏற்கனவே ஓட்டிக்கொண்டிருந்தவனை அப்புறப்படுத்தக்கூடாது என்பது ஒன்று, அதற்கு அடுத்தபடியாக எவ்வளவு **Rent** கொடுக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பது, இவற்றைத் தவிர வேறொன்றும் செய்யப்போவதாக கவர்னர் உரையிலிருந்து தெரியவில்லை. இதன்மூலம் நாடுமுன்னேறும் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத் தான் தரும். ஆகவே, அரசாங்கம் நாட்டின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, நிலசீர்த்திருத்தை உடனடியாக செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காலம் கடத்தினால், நிலச்சுவான்தார்களுக்கும் நிலத்தை ஓட்டிக்கொண்டு இருப்பவர்களுக்கும் நிச்சயம் தகராறு ஏற்படும். நாட்டில் அதன் விளைவாக கொந்தளிப்பு ஏற்படும் நிலைமை உண்டாகும். திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் உள்ள நிலைமை மற்ற ஜில்லாக்களுக்கும் பரவும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும் என்பதை கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

" அடுத்தபடியாக நீர்ப்பாசன திட்டங்கள் தமிழ் நாட்டில் பெரிய அளவில் செய்ய வேண்டியதற்கு இல்லை என்று கூறுகிறார்கள். திரு-கொச்சியிலிருந்து மேற்குக் கடலில் போய் விழும் தண்ணீரை எடுத்து உபயோகப் படுத்தினால் அவர்களுக்கு மின்சாரமும் தமிழ் நாட்டிற்கு தண்ணீரும் கிடைக்கும் என்றும் அதற்குத் தகுந்த பேச்சு வார்த்தைகளும் நடந்து கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் எவ்வளவோ சிறு நீர்த் தேக்கங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளைச் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் போட்டால் அதை கவனிப்பதாகவே தெரியவில்லை. இதைப்பற்றி சேலத்தில் பல நீர்ப்பாசன மாநாடுகளில் தீர்மானங்கள் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். **1952**-ம் ஆண்டு கூட ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். பெரிய நீர்த் தேக்கங்களை கட்ட வேண்டியதில்லை. சிறிய நீர்த் தேக்கங்களை அமைத்துக் கொடுத்தால் போதும் என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி இதுவரையில் கவனித்ததாகவே தெரியவில்லை. இவைகளைப் **6-13 p.m.**

பற்றி கவனிப்பதற்கு தனி இஞ்சினியர்களைப் போட வேண்டும் என்றும் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அவைகளுக்கு பதில் கிடையாது. எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொண்டதாகவும் தெரியவில்லை. ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் செலவாகும். ரூ. 500-க்கு மேல் செலவு ஆகக் கூடிய திட்டங்களை எடுத்துக்கொள்வதாக இருந்தால் மக்கள் அதற்குப் பண உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் மற்ற இடங்களில் ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவாகும் திட்டங்களை எடுத்து நடத்துகிறார்கள். கிருஷ்ணகிரி திட்டத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு ரூ. 5,000 ஒரு ஏக்கருக்கு செலவு ஆகிறது என்று சொல்லுகிறாகள். சிறிய நீர்த் தேக்க திட்டங்களை எடுத்து நடத்தினால் எவ்வளவோ சௌகர்ய மாக இருக்கும். அதற்கு அரசாங்கம் முன் வருவதாகத் தெரியவில்லை. இஞ்சினியர்களைக் கேட்டால் அதிகமாக செலவு ஆகக் கூடிய திட்டங்களை எடுத்துக் கொள்ளமாட்டோம் என்று சொல்லி விடுகிறார்கள். இந்த மனப்பான்மை மாறவேண்டும். ஐந்து கோடி ரூபாயில் பெரிய திட்டங்களை எடுத்து நடத்துவதற்கு பதிலாக அநேகம் சிறிய திட்டங்களை எடுத்து நடத்தி மக்களுக்கு பலனளிக்கும்படியாக செய்யலாம். அப்படி சிறிய திட்டங்களை எடுத்து நடத்தி சிறிய ஏரிகளைக் கட்டினால் பன்மடங்கு சௌகர்யம் ஏற்படும். சேலம் ஜில்லா ஒரு வரண்ட பிரதேசம். அங்கு பாசனத்திற்கு வேண்டிய ஆறுகள் கிடையாது. பக்கத்தில் காவேரி ஆறுபோனாலும் அதனால் சேலத்திற்கு பெரிய பலன் கிடையாது. அதனால் அங்கு சிறிய நீர்த் தேக்கங்களை கட்டுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக இப்பொழுது இரண்டாயிரம் ஓராசிரியர்கள் பள்ளிக் கூடங்களுக்கு நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுவரை நாலாயிரத்திற்குமேல் ஓராசிரியர்களை நியமித்திருப்பதாகவும் நமக்கு தெரியும். அவர்களுடைய நிலைமை என்ன? அதைப்பற்றி அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தினுடைய அதிகாரிகளுக்கும் தெரியவில்லை. டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்சுக்கும் அவர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. அந்த ஆசிரியர்களுக்கு ஆறு வார பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அந்த ஆறு வார பயிற்சிக்குப் பிறகு அவர்கள் நிரந்தரமாக அப்படியே நியமிக்கப் போகிறார்களா என்பதும் தெரியவில்லை. அது போதுமானதா? பிறகு இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின் அவர்களை வேலையை விட்டு நீக்கி விடுவார்களா? அல்லது மீண்டும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்களா அதற்கு அவசியம் ஏற்படுமா என்பதும் தெரியவில்லை. இந்த ஆறு வார பயிற்சி அவர்களுக்குப் போதுமா? அப்படி அவர்களை நிரந்தரமாக வைத்துக் கொள்வதாக இருந்தால் அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்படுமா? பிராவிடண்ட் பண்ட் நிதி கொடுப்பார்களா? இவைகளையெல்லாம் மந்திரி அவர்கள் திட்டவட்டமாகக் கூறவேண்டும். தங்களுக்கு எப்பொழுது வேலை யில்லாமல் போய்விடுமோ என்று பயந்து கொண்டு மற்ற வேலைகளுக்கு விண்ணப்பங்கள் போட்டுக்கொண்டு காசை வீணாகச் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நிலைமையைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

"அடுத்தபடியாக சொல்லும்போது ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதி ஒரு கிளர்ச்சி நடப்பதாக இருந்தது. அதைப்பற்றி பலர் பலவித அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். தேசீயக் கொடியை எரிப்பது தவறு என்று பலர் எடுத்துக் கூறினார்கள். பல தரப்பிலிருந்தும் அதற்குள்ள எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். தேசீயக் கொடியைப்பற்றி இந்திய சர்க்கார் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்களோ அவ்வளவு முக்கியத்துவம் திராவிடக் கழகம் கொடுக்கவில்லை. இங்கு ஹிந்தியைப் புகுத்தக் கூடாது என்பதற்காகத்தான் அந்த கிளர்ச்சி ஏற்பட இருந்தது. சென்னை அரசாங்கம் விடுத்த அறிக்கையின் காரணமாக அது நிறுத்தப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

"இந்தியைப் பொறுத்த வரையில் கட்டாயப்படுத்தக் கூடாது என்பது தான் பலருடைய எண்ணம். காங்கிரஸ்காரர்களில் சிலரும் பொது உடைமைக் கட்சிக்காரர்களும், சோஷியலிஸ்டுகளும்கூட இந்தியைக் கட்டாயப்

3rd August 1955] [Sri M. P. Subramanyam]

படுத்தக் கூடாது எனத்தான் கூறுகிறார்கள். ஆனால் திராவிட இயக்கத்தைச் சார்ந்த நாங்கள் ஏன் இந்தியை எதிர்க்கிறோம், மற்ற அரசியல் கட்சித் தோழர்கள் ஏன் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதை பொது மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

"நாங்கள் இந்தியை தேசிய மொழியாக ஒப்புக்கொள்ள மாட்டோம் என்கிறோம். இந்தி கூடாது, அவசியமற்றது என்கிறோம். மறைமுகமாக புகுத்தப்பட்டாலும் உறுதியாக எதிர்ப்போம் எனக் கூறுகிறோம். ஆனால் மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் ? இந்தி தேசிய மொழியாக இருந்தாலும், ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தாலும் கட்டாயப்படுத்தாதீர்கள், கட்டாயம் என்று மக்கள் உணராமல் திணித்து விடுங்கள், இப்பொழுது வேண்டாம், பத்து ஆண்டுகள் கழித்து புகுத்தப்படட்டும் என்றுதான் கூறுகிறார்கள். ஆனாலும் எதிர்ப்பதாகக் கூறுகிறார்களே ஏன் ? மக்கள் இந்தியை வெறுக்கிறார்கள். விரும்ப வில்லை. இந்தியை ஆதரிக்கிறோம் என்று கூறிவிட்டால் இந்தியை எதிர்க்கும் பெரும்பான்மையான மக்களின் ஆதரவும் அன்பும் கிட்டாதே என்ற காரணத்திற்காக, ஓட்டுக் கிடைக்காதே என்பதற்காக உள்ளொன்று வைத்து வெளி ஒன்று பேசிவருகிறார்கள்.

"ஆனால் அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகஸ்டு கிளர்ச்சி நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும் கூட இந்தி மறைமுகமாகவோ நேரிடையாகவோ புகுத்தப்படுமானால் தமிழ் நாட்டில் இதுவரை கண்டிராத அளவுக்கு வலுவுள்ளதொரு போராட்டம் நடைபெற்றே தீரும் என்பதை அரசாங்கத்திற்கு எச்சரிக்கிறேன்.

"அடுத்தபடியாக இப்பொழுது நிலவரியில் ரூபாய்க்கு இரண்டு அணு வரி போட இருக்கிறார்கள் . . ." (முடிவதற்குள் மணி அடிக்கப்பட்டு விட்டது.)

* **Sri R. S. Arumugam** :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபைக்கு கனம் சபாநாயகர் இருப்பது இச்சபைக்கும் தமிழ் நாட்டுக்கும் எவ்வளவு பெருமையாக இருக்கிறது என்பது சம்பந்தமாகவும் நமது பண்டித நேருஜி அவர்கள் நமது இந்தியாவுக்கு எவ்வளவு பெருமையைத் தேடித் தந்திருக்கிறார் என்பது சம்பந்தமாகவும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தன்னுடைய பேருரையில் குறிப்பிட்டதைப்பற்றி பல அங்கத்தினர்கள் அதை ஆதரித்தும் பாராட்டியும் பேசிய பிறகு மீண்டும் அதையே நான் இந்த இடத்தில் பேச விரும்பவில்லை. பொதுவாக வேறு விஷயமாக ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். 6-18 p.m.

"தற்சமயம் கிராமங்களில் மக்கள் ஒரு வகையில் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். லோகல் டெவலப்மெண்ட் ஸ்கீம் மற்றும் பல ஸ்கீம்கள் மூலமாக பல கிராமங்களுக்கு ரோடுகள், கிணறுகள் மற்றவைகளெல்லாம் அமைத்ததன் காரணமாக கிராம ஜனங்களுக்கு ஓரளவு சந்தோஷமும், சில குறைகள் நீங்கப்படுகின்றன என்ற எண்ணமும் ஏற்படுகின்றன. சில கிராமங்களில் குறைகள் நீங்காமல் இருக்கலாம். சில கிராமங்களுக்கு சில குறைகள் நிவிர்த்திக்காது இருந்தாலும் பொதுப்படையாக எவ்வளவோ கிராமங்களுக்கு பல குறைகள் இல்லை என்பதை இந்த இடத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி இருக்கும் குறைகளையும் இப்பொழுது நிவர்த்தி செய்து வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"லோகல் டெவலப்மெண்ட் வேலைகளை எடுத்துக் கொண்டால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் ஜனங்கள் மனமுவந்து மிகவும் பொறுப்புடன் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த வேலைகளைப் போல் அவ்வளவு பொறுப்பு எடுத்துக்கொண்டு செய்கிறார்கள் என்பதாகவும் சொல்லலாம். மேலும் வேலை செய்யும்போது ஊக்கமாகவும் எடுத்துச் செய்கிறார்கள். இந்த விஷயத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri R. S. Arumugam] [3rd August 1955

"கவர்னர் அவர்களுடைய உரையில் விவசாயிகள் சம்பந்தமாக நல்ல காரியங்களைச் செய்யப் போவதாக ஒரு முடிவிற்கு அரசாங்கம் வந்திருப்ப தாக தெரிவித்திருக்கிறார். அதற்கு வேண்டிய சட்டத்தையும் கொண்டு வரப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார். அதை எல்லோரும் சந்தோஷமாக வரவேற்கிறோம். இப்படிப்பட்ட சமயத்தில் ஒரு விஷயத்தை அரசாங்கத் தினுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருகிறேன். குறிப்பாக நமது நாட் டில் சுமுகமான ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்றால், நாட்டு மக்கள் அவ்வளவு பேரும் சந்தோஷமாக வாழ வேண்டுமென்றால் முதலில் செய்யவேண்டிய காரியம் விவசாயச் சீர்திருத்தமும் நிலச் சீர்திருத்தமும் தான். இங்கு பேசியவர்களில் பெரும்பாலோர் விவசாயிகளுடைய நிலைமை யைப்பற்றி எடுத்துப் பேசியிருக்கிறார்கள். நானும் பேசிக்கொண்டேதான் இருக்கிறேன். மேலும் சிலவற்றைச் சொல்ல பிரியப்படுகிறேன். அதாவது சில வருடங்களுக்கு முன்னதாகவே நிலச்சீர்திருத்த சட்டம் வந்துவிடும் என்று இருந்தது. அதுவெல்லாம் அப்படியே நாள் கடந்து போய்விட்டது. இப்பொழுதுதான் அதைக் கொண்டுவரவேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி கவர்னர் அவர்களும் தன்னுடைய உரை யில் எடுத்துக் காட்டியிருக்கிறார். நான் சந்தோஷப்படுகிறேன். கவர்னர் தன்னுடைய உரையில் அதை எடுத்துச் சொல்லிவிட்டதால் இந்தச் சட்டம் சீக்கிரம் வந்துவிடும் என்பதற்காகவே சந்தோஷப்படுகிறேன்.

"தன்னுடைய உரையில் சொல்லியிருப்பதில் இந்த சட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதலாவதாக விவசாயிகளை நிலத்தை விட்டு வெளி யேற்றக்கூடாது என்பதாக, அதாவது விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றுவதை தடுத்தும் மேலும் அப்படி வெளியேற்றி யிருந்தால் ஷ வெளியேற்றியவர்களை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ப தாகவும் கொண்டுவரப் போகிறார்கள். இதைக் கேள்விப்பட்ட எந்த விவ சாயியும் சந்தோஷம் அடையாமல் இருக்க முடியாது. நிலத்தில் முதல் வருஷம் விவசாயம் செய்து விட்டு அறுவடை செய்த பிறகு அடுத்த வருஷம் அவனுக்கு அந்த நிலம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற எண்ணம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இதைப் போக்க முதலில் இந்த அளவிற்கு அவர்களுக்கு ஒரு நிவாரணம் அளிக்க முன்வந்திருப்பது கண்டு நான் சந்தோஷப்படுகிறேன்.

"இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வரப்போகிறார்கள் என்பதைக் கண்டு மிராசுதார்கள் கடந்த சில வருஷங்களாக அதாவது இரண்டு மூன்று வருஷங்களாக ஏன் நாலைந்து வருஷங்களாகக்கூட என்று சொல்லலாம்—விவசாயிகளை நிலங்களை விட்டு வெளியேற்றிக் கொண்டு வருகிறார்கள். பல இடங்களில் நடந்துகொண்டு வருகிறது. அவர்களை வேலைக்கு வைத் திருப்பதற்குக்கூட வேண்டிய ரிக்கார்டுகள் அவர்களிடம் இல்லை. குத் தகைக்குப் பயிரிடுபவர்களைக்கூட கூலிக்கு வேலை பார்ப்பதாக சீட்டு எழுதி விவசாயிகளிடம் வாங்கி வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி திருநெல்வேலி ஜில்லாவில் சில இடங்களில் நடந்திருக்கின்றன. எப்படிப்பட்ட ரிக்கார்டு களும் இல்லாமலும் விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள். சட்டம் வந்தால் ஒருக்கால் நிலங்கள் எல்லாம் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை வந்துவிடுமோ என்ற எண்ணத்தால் நிலச்சுவாந்தார் கள் அப்படி ரிக்கார்டுகள் ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் விவசாயம் செய்யச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அங்குள்ள விவசாயிகளுக்கு விவசாய தொழில் ஒன்றுதான் தெரியும். அதனால் அவர்களை எங்கே வெளியேற்றி விடுவார்களோ என்று பயந்துகொண்டு கூலிக்கு வேலை செய்து கொண்டு வருவதாக எழுதிக்கொடுத்து விடுகிறார்கள். வெளி யேற்றினால் அவர்களால் வேறு தொழிலை நடத்துவதற்கு செயல் இல்லா மல் இருப்பதால் நிலச்சுவாந்தார்கள் என்ன சொல்லுகிறார்களோ அதைக் கேட்டுக்கொண்டு பயிரிட்டு வருகிறார்கள் என்பதை இந்த இடத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது நிலச்சுவாந்தார்கள் என்ன எழுதிக் கொடுக்கச் சொன்னாலும் அதை எழுதிக் கொடுத்துவிட்டு விவசாயிகள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை ஞாபகப் படுத்துகிறேன். அப்படி எழுதிக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி விட்டால் அடுத்த வருஷம் அந்த விவசாயிக்கு நிலம் கிடைக்காது. இந்த

நிலை நான்கு, ஐந்து வருஷங்களாக நடந்துகொண்டு வருகிறது. சட்டம் வந்தால் இந்த விவசாயிகளுக்கு நிலம் பாத்தியதை இல்லை என்று சொல்லலாம் என்பதற்காக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் சர்க்கார் பாடுபடும் ஏழைகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். ஆகையால் விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கக்கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு என்று நல்ல சட்டம் கொண்டு வந்ததாகாது என்பதை இந்த இடத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" நல்ல நோக்கத்துடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் அதை நன்றாக கவனித்துக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக எங்கள் ஜில்லாவில் கரையறுப்பு என்ற கிராமத்தில் வசிக்கும் அவ்வளவு விவசாயிகளுக்கும் நிலம் கிடையாது. சொந்தப் பயிருக்கு எடுத்துக்கொள்ளலாம். மேலும் நான் சொன்னபடி நிலச்சொந்தக்காரர்கள் எழுதி வாங்கிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இன்னும் பல கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே இவைகளை சர்க்கார் ஆலோசனை பண்ணித் தான் செய்யவேண்டும் என்பதை நான் திரும்பத் திரும்பதெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். அதாவது நெல்லை ஜில்லாவில் இரண்டு கிராம பாங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் யாருக்குச் சொத்து இருக்கிறதோ, யாருக்கு நிலம் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் அவற்றில் கடன் கொடுக்கப்படுகிறது என்பதை நான் இந்த இடத்தில் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். ஒரு வட்டிக்கோ, இரண்டு வட்டிக்கோ நிலம் உள்ளவர்கள் கடன் வாங்க வசதியுண்டு. ஆனால் கட்டுக்குத்தகைக்கு நிலம் எடுத்திருக்கக்கூடிய, சொந்தமாக சொத்து எதுவுமே இல்லாத ஏழை விவசாயிகள்தான் சாகுபடி செய்வதற்குப் பணம் கிடைக்காமல் நான்கு வட்டிக்கோ ஐந்து வட்டிக்கோ யார் கடன் கொடுப்பார்கள் என்று அலைகிறார்கள். ஒரு மாதத்திற்கு நூறு ரூபாய்க்கு பத்து ரூபாய் வட்டி, 12 ரூபாய் வட்டி என்று கடன் வாங்குகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் கடன் வாங்க வேறு வழியே இல்லை. இந்த பாங்குகளில் கடன் வாங்கலாமென்றாலும் இவர்களுக்குச் சொத்து இருக்கிறதா என்று கேட்கிறார்கள். இவர்களிடம் சொத்து ஏது ? ஆகவே இவர்களுக்கு அங்கே கடன் கிடைப்பதில்லையாதலால் வெளியே மிக உயர்ந்த வட்டிக்குச் சில்லரையாகக் கடனை வாங்கிவிட்டு அதனால் அவர்கள் அடைகிற துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. அதனால்தான் இந்த பாங்குகளில் இவர்களுக்கும் நபர் ஜாமீன் பேரில் கடன் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வாஸ்வத்தில் அவர்கள் வெளியிடத்தில் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதினால் அவர்களுக்கு இழைக்கப்படுகிற அநியாயம் தாங்க முடியாதது. அதைப் பற்றியெல்லாம் இந்தச் சபையில் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவனையும், அவன் மனைவியையும் இழுத்து வந்து தெருவில் வைத்துக்கட்டி உதைத் தாலும் யார் என்று கேட்பார்களே கிடையாது. " நீ ஏன் கடன் வாங்கினாய், அவன் உதைத்தால் பட்டுக்கொள் ' என்று சொல்லுகின்ற தன்மையே அதிகமாக இருக்கிறது. ஆகவேதான் எளிய முறையில், லேசான வட்டிக்கு இப்படிப்பட்ட சொத்து இல்லாத விவசாயிகளுக்கும் கடன் கிடைக்கக்கூடிய வழியை சர்க்கார் உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்று இந்தச் சபையில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

" அடுத்தபடியாக கல்வி சம்பந்தமாக 8-வது வகுப்பு வரையில் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி அளிக்கப்படும் என்று சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதைக் கண்டு மக்கள் சந்தோஷப்படுகிறார்கள். அதே நேரத்தில் மக்கள் கிராம அதிகாரிகளிடம் சென்று வருமான சர்டிபிகேட் வாங்குவதற்கு நிறைய கஷ்டங்கள் இருந்தன. அந்தக் கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் சட்டசபை மெம்பரோ அல்லது ஒரு சில குறிப்பிட்ட வேறு அதிகாரிகளோ சர்டிபிகேட் வழங்கினால் போதும் என்று உத்தரவு போட்டிருந்தாலும்கூட அதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை சபையில் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். ஆகவே இதை உத்தேசித்து இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் 8-வது வகுப்பு வரை

[Sri R. S. Arumugam] [3rd August 1955

இலவசமாகக் கல்வி அளிக்கப்படும் என்கின்ற உத்திரவை சர்க்கார் போட்டு விட்டால் நல்லதாக இருக்காதா என்கின்ற யோசனையை உங்கள் முன்னால் சமர்ப்பிக்க விரும்புகிறேன். பணக்காரர்களுக்கு கல்வி வரி என்பதாக ஒரு வரியைப் போட்டுவிடலாமல்லவா ?

"எனது ஒரு வேண்டுகோள். ராஜ்யத்தின் ஓரத்திலுள்ள திருநெல்வேலி ஜில்லாவை எல்லா விஷயங்களிலும் ஓரமாகத் தள்ளி விடுகிறார்கள். இந்த ராஜ்யத்தின் தென்கோடி செழிக்கவேண்டுமென்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்க வேண்டுமென்பதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்ஜினீயரிங் கல்லூரி, பாலி டெக்னிக், வைத்தியக் கல்லூரி போன்றவைகளை திருநெல்வேலி ஜில்லாவிலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த ஜில்லாவில் அனேக தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகவே தோழில் கல்லூரிகளை அடுத்த பட்ஜெட் வருஷத்திலாவது அந்த ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டும்.

"திருநெல்வேலி நகரசபையிலிருந்து வந்திருக்கும் ஒரு செய்தியை எண்ணும்போதே கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது எல்லா நகர சபைகளிலும் குடி தண்ணீர் வசதியை நல்ல முறையில் ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணம் சர்க்காருக்கு இருப்பதைக்கண்டு பாராட்டாமல் இருக்கமுடியாது. எனது திருநெல்வேலி தொகுதியில் மூன்று முனிஸிபாலிட்டிகள் இருக்கின்றன. மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய நகரசபைக்கு குடிதண்ணீர் திட்டத்துக்கு ஓரளவு மான்யமாக சர்க்கார் அளித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் திருநெல்வேலி நகர சபைக்கு மாத்திரம் குடிதண்ணீர் விஷயமாக எந்தவிதமான மானியமும் அளிக்க முடியாதென்று சர்க்கார் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. மக்களிடையே பட்சபாதம் காட்டக்கூடாதென்பது நாட்டுப்பழமொழி. அந்த நகர சபைக்கு கொஞ்சம் வசதி இருக்கிறதென்று சர்க்கார் கருதினாலும் கொடுக்கப்பட்ட மானியத் தொகையைக் கொஞ்சம் வேண்டுமானால் குறைக்கலாமே தவிர அவர்களுக்கு அறவே கொஞ்சம்கூடக் கொடுக்க முடியாதென்று சொல்வது அந்த நகர சபை மக்களுடைய மனதை வருத்தப்படுத்துவதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அவர்களுக்கு ஏதாவது மான்யம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"எங்கள் ஜில்லாவில் சில ரோடுகள் இருக்கின்றன. அந்த ரோடுகளை யார் போட்டார்கள் என்றே தெரியவில்லை. ரெவின்யூ அதிகாரிகளைக் கேட்டால் தங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். ஜில்லா போர்டு அதிகாரிகளைக் கேட்டால் தங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். இதுமாதிரியாக ரோடு யார் போட்டார்கள் என்பதை தெரியாமல்கூட சில ரோடுகள் இருக்கின்றன. அவ்வாறு போடப்பட்டிருக்கும் ரோடுகளில் சித்தன்குடியிருப்பு ரோடு ஒன்று. அதைச் செப்பனிடவேண்டுமென்று கேட்டால் ரெவின்யூ அதிகாரிகள் தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்கிறார்கள். ஜில்லா போர்டு அதிகாரிகளும் அப்படியே சொல்லுகிறார்கள். இப்படி எல்லோரும் சொல்வதினால் என்ன பயன் ? யார் காலத்திலோ, எப்படியோ போடப்பட்ட ரோடுகளாக இருந்தாலும் தற்காலத்தில் சர்க்கார் கொஞ்சம் பணம் ஒதுக்கி அவற்றை மராமத்து செய்வதற்குவேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அது ரயில்வே லயனைக்கடந்து செல்லுகிறது. லெவல் கிராஸிங் போடவேண்டும். யார் போடுவது ? ரயில்வேகாரர்கள் அதாவது மத்திய சர்க்கார், முடியாது என்கிறார்கள் மாகாண சர்க்கார் செய்யவழியில்லை, ஜில்லாபோர்டார் தீர்மானம் போட்டு மறுக்கிறார்கள். இதை எல்லாம் யார் செய்வது ? என்கிற விஷயங்களை உடனடியாகக் கவனித்து செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

6-3 p.m. * **Sri E. T. KUNHAN** :—"മിസ്റ്റർ ഡിപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തെ പ്രശംസിച്ചുകൊണ്ടും ആക്ഷേപിച്ചുകൊണ്ടുമുള്ള ചില പ്രസംഗങ്ങളെല്ലാം ഇവിടെ നടന്നുകഴിഞ്ഞിട്ടുണ്ട്. എങ്കിലും രണ്ടുവാക്കു എനിക്കും പറഞ്ഞാൽ കൊള്ളാമെന്നുണ്ട്. ആദ്യമെതന്നെ നമ്മുടെ സഭാനാഥനായ ശ്രീ ശിവഷണ്മുഖം പിള്ള നമ്മെ

വിട്ടുപിരിഞ്ഞു കേന്ദ്രത്തിലേക്കു പോകുന്നതിനെ സംബന്ധിച്ചു ഒരുവാക്കു പറഞ്ഞുകൊള്ളട്ടെ. നമ്മോടെല്ലാം വളരെ സ്നേഹത്തോടും ആദരവോടും പെരുമാറി നമ്മുടെയെല്ലാം അളവററ സ്നേഹാദരങ്ങൾക്കു പാത്രീഭൂതനായിക്കഴിഞ്ഞിട്ടുള്ള അദ്ദേഹം കേന്ദ്രത്തിൽ വളരെ ഉന്നതമായ ഒരു സ്ഥാനം അലങ്കരിക്കാൻ പോകുന്നുവെന്നുള്ളതു നമുക്കെല്ലാം വളരെ സന്തോഷകരമായ ഒരു വസ്തുതയാണ്.

"സർ, ഇന്നാട്ടിലെ അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തെപ്പററി ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ യാതൊന്നും മിണ്ടിയിട്ടില്ല. നാട്ടിന്റെ നട്ടെല്ലായ കൃഷിക്കാരുടെ പ്രശ്നത്തെപ്പററി ഗവർണ്ണർക്ക് ഒററയക്ഷരംപോലും പറയാനുണ്ടായില്ല. വൻകിട കൃഷിക്കാരുടേയും നാടുവാഴി ജന്മികളുടേയും കീഴിൽ അടിമകളെപ്പോലെ പ്രവൃത്തിയെടുത്തു പട്ടിണിയിലും ദാരിദ്ര്യത്തിലും പരാധീനതയിലും കഴിയുന്ന കൃഷിത്തൊഴിലാളികൾക്കു ആശ്വാസം നൽകുവാനൊ അവരുടെ ജീവിതത്തോതുയർത്തുവാനൊ ഉള്ള യാതൊന്നും ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ കണ്ടില്ല. കൃഷിത്തൊഴിലാളികൾക്കു കൊല്ലത്തിൽ നാലഞ്ചു മാസത്തിലധികം ജോലിയില്ല. ജോലിയുള്ള കാലത്തുപോലും അവർക്കു ജീവിക്കാൻ മതിയായ കൂലി കിട്ടുന്നില്ല. ജോലിയുള്ള കാലത്തുപോലും ജീവിക്കാൻ മതിയായ കൂലി കിട്ടുന്നില്ലെന്നു പറഞ്ഞാൽ ജോലിയില്ലാത്ത കാലങ്ങളിലെ കഥയെന്താണെന്നു ഊഹിക്കാൻ കഴിയും. വർഷത്തിൽ അല്പകാലത്തെ കൃഷിത്തൊഴിൽ കഴിഞ്ഞാൽ കൃഷിത്തൊഴിലാളികൾക്കു യാതൊരു തൊഴിലുമില്ല. അതിനു ഒരു പോംവഴി കാണേണ്ടതു വളരെ അടിയന്തിരമായ ഒരു കാര്യമാണ്. കുടിൽവ്യവസായങ്ങൾക്കു വേണ്ട സൌകര്യമുണ്ടാക്കിക്കൊടുക്കുകയെന്നുള്ളതാണ് അതിന്നുള്ള പോംവഴി. കുടിൽവ്യവസായങ്ങളെ പ്രോത്സാഹിപ്പിച്ചു കൃഷിത്തൊഴിലാളികൾക്കു തൊഴിലുണ്ടാക്കിക്കൊടുക്കുകയും അങ്ങനെ അവരെ പട്ടിണിയിൽനിന്നു രക്ഷിക്കുകയും ചെയ്യേണ്ട കടമ ഗവർമ്മേണ്ടിനുണ്ട്. അതു ഗവർമ്മേണ്ട് വിസ്മരിച്ചിരിക്കുന്നതായിട്ടാണു കാണുന്നതു്. ഇങ്ങനെ ഒരു വർഗ്ഗം ഈ രാജ്യത്തുണ്ടെന്നുള്ള വസ്തുതതന്നെ ഗവർമ്മേണ്ട് വിസ്മരിച്ചിരിക്കുന്നമട്ടാണു കാണുന്നതു്.

"സർ, ഈ നാട്ടിലെ നിയമസമാധാനപരിപാലനത്തിന്റെ സമ്പ്രദായത്തെപ്പററി രണ്ടു വാക്കു പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. പോലീസുകാരിൽനിന്നു നാട്ടിലെ പാവപ്പെട്ട ആളുകൾക്കും ഹരിജനങ്ങൾക്കും അനുഭവപ്പെട്ടുകൊണ്ടിരിക്കുന്ന പീഡനങ്ങളേയും മറ്റുനങ്ങളേയും സംബന്ധിച്ചു രാജ്യത്തിന്റെ നാനാഭാഗത്തുനിന്നും ദിവസംപ്രതി ആക്ഷേപങ്ങളും ആവലാതികളും കിട്ടിക്കൊണ്ടിരിക്കുന്നു. എന്റെ അറിവിൽപ്പെട്ടിട്ടുള്ള ചില കേസ്സുകളെപ്പററി ഞാൻ ചുരുക്കത്തിൽ പറയാം. നാട്ടിക ഫർക്കയിൽ മോഹനദാസ് എന്നൊരു സബ്ബ് ഇൻസ്പെക്ടർ നടത്തുന്ന അഴിമതികളെക്കുറിച്ചും മറ്റുനങ്ങളെക്കുറിച്ചും നാട്ടുകാർ മുഖ്യമന്ത്രി മലബാറിൽ വന്നപ്പോൾ മെമ്മോറാണ്ടം സമർപ്പിച്ചിട്ടുണ്ട്. ഈ സബ്ബ് ഇൻസ്പെക്ടരുടെ കൊള്ളരുതായ്മകൾ നിമിത്തം നാട്ടിൽ മര്യാദക്കാർക്കും സാധുക്കൾക്കും കിടന്നുപൊറുക്കുവാൻ നിവൃത്തിയില്ലാതായിരിക്കുന്നുവെന്നു ആക്ഷേപം കിട്ടിയിട്ടുണ്ട്. തൃത്താല ഫർക്കയിൽ ചാലിശ്ശേരി സബ്ബ് ഇൻസ്പെക്ടരെപ്പററിയും ആക്ഷേപമുണ്ട്. അതുപോലെതന്നെ കോട്ടക്കൽ സബ്ബ് ഇൻസ്പെക്ടരെപ്പററിയും. വളാഞ്ചേരി ഹെഡ് കോൺസ്റ്റബിളായ കൃഷ്ണൻ നമ്പ്യാർ ചാത്തൻ എന്നൊരു ഹരിജനെ മർദ്ദിച്ച ഒരു കേസ്സുണ്ട്. ഇങ്ങനെ പോലീസുകർ ജനങ്ങളുടെമേൽ നടത്തുന്ന കൈയ്യേററങ്ങളെക്കുറിച്ചും അക്രമങ്ങളെക്കുറിച്ചും നിരവധി ആക്ഷേപങ്ങൾ കിട്ടിക്കൊണ്ടിരിക്കുന്നു. ഇതു് നല്ലതല്ല, പോലീസുകാർ ഈ ജനദ്രോഹം അവസാനിപ്പിക്കേണ്ടതാണ്. ജനങ്ങളോടു് പോലീസുകാർ മര്യാദയ്ക്കു് പെരുമാറണം, എന്നു് ഗവർണ്ണർക്കു പറയാമായിരുന്നു, പറയേണ്ടതായിരുന്നു. പക്ഷെ അതു് ചെയ്തു കാണുന്നില്ല. പൊന്നാനിയിൽ നടന്ന ഒരു ഹരിജൻ മർദ്ദന കേസ്സിനെ പോലീസ് കൃത്രിമമായി തേച്ചുമാച്ചുകളഞ്ഞ സമ്പ്രദായത്തെപ്പററി ഈ അവസരത്തിൽ പ്രത്യേകം എടുത്തു പറയണമെന്നുദ്ദേശിക്കുന്നു. ആ കേസ്സിനെ സംബന്ധിച്ചു് പോലീസിൽ ആവലാതി കൊടുത്തതു് ജൂലായി 7-ാം തിയ്യതിയാണ്. 8-ാം തിയ്യതി സബ്ബ് ഇൻസ്പെക്ടരും പാർട്ടിയും സ്ഥലത്തുപോയി അന്വേഷണം നടത്തി. അന്നു് എട്ടരമണിക്ക് പ്രതിയെ അറസ്റ്റു ചെയ്തു. ജൂലായി 9-ാം തിയ്യതി 11 മണിക്കു അറസ്റ്റു ചെയ്യപ്പെട്ട പ്രതിയെ ഞാൻ പോലീസ് ലോക്കപ്പിൽവച്ചു കണ്ടു. അന്നുതന്നെ വൈകുന്നേരം 5 മണിക്ക് പോലീസ് സബ്ബ് ഇൻസ്പെക്ടർ അയാളെ വിട്ടയച്ചു. എന്നിട്ടു കക്ഷി പണക്കാരനും സ്വാധീനമുള്ളവനുമായതുകൊണ്ടു് പോലീസ് കൃത്രിമമായി ജൂലായി 8-ാം തിയ്യതിതന്നെ കേസ്സുതള്ളിക്കൊണ്ടു റെഫർ നോട്ടീസ് കൊടുത്തു. 8-ാം തിയ്യതി തള്ളിയ കേസ്സിലെ പ്രതിയെ 9-ാം തിയ്യതി ലോക്കപ്പിൽവെച്ചുകൊണ്ടിരുന്നതു എന്തിനാണെന്നു അന്വേഷിക്കേണ്ടതാണ്. ഈ സംഭവത്തെ സംബന്ധിച്ചു കലക്ടർക്ക്

ആക്ഷേപം കൊടുത്തിട്ടുണ്ട്. ഇങ്ങനെയുള്ള പല കേസ്സുകളും നമ്മുടെ നാട്ടിൽ നടക്കുന്നുണ്ടു. അതിനെക്കുറിച്ചെല്ലാം ശരിയായ ഒരന്വേഷണം നടത്തേണ്ടതു് അത്യാവശ്യമാണു്. 1952 ൽ ചാവക്കാട്ട് ഫക്കയിൽ മണത്തല എന്ന സ്ഥലത്തു നടന്ന ഒരു കേസ്സിനെപ്പററി ആക്ഷേപമുണ്ടായപ്പോൾ അന്നു മുഖ്യമന്ത്രിയായിരുന്ന ശ്രീ സി. രാജഗോപാലാചാരി, അതെല്ലാം അടിസ്ഥാനരഹിതമാണെന്നാണ് കലക്ടർ റിപ്പോർട്ടുചെയ്തിരിക്കുന്നതെന്നു് ആദ്യം പറഞ്ഞു. പിന്നീടു അതുമാററി അക്രമം ചെയ്തു കക്ഷിയല്ല, ആക്ഷേപക്കാരാണ് കുററക്കാരെന്നു ഗവമ്മേണ്ടു് പറഞ്ഞു. പക്ഷേ നാട്ടുകാർ വിട്ടില്ല. തുടർന്നു ആക്ഷേപം കൊടുത്തതിന്റെ ഫലമായി ഗവമ്മേണ്ടു വീണ്ടും അന്വേഷണം നടത്തുകയും ഒടുവിൽ മൂന്നുകൊല്ലം കഴിഞ്ഞപ്പോൾ ആദ്യം പറഞ്ഞതു് ശരിയല്ല. ജനങ്ങൾ പറഞ്ഞതാണ് സത്യം എന്നു ഗവമ്മേണ്ടു സമ്മതിക്കുകയും ചെയ്തു. അതുപോലെ ഞാൻ ഇപ്പോൾ പറഞ്ഞ കേസ്സുകളെക്കുറിച്ചു ശരിയായ ഒരന്വേഷണം നടത്താമെങ്കിൽ പോലിസിന്റെ ക്രിത്രിമങ്ങളും കൊള്ളരുതായ്മകളുമെല്ലാം വെളിച്ചത്തു വരുന്നതാണ്. അതു് ചെയ്യണമെന്നു ഞാൻ അഭ്യർത്ഥിക്കുന്നു.

"ഹരിജനങ്ങളെ സംബന്ധിച്ചു് ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ ചിലതെല്ലാം പറഞ്ഞു കാണുന്നുണ്ട്. മധുരയിൽ 90 വീടുകൾ ഹരിജനങ്ങൾക്കായി കെട്ടിക്കൊടുക്കാനുദ്ദേശിക്കുന്നുണ്ടെന്നു് പറയുന്നു. അതിൽ ഞാൻ സന്തോഷിക്കുന്നു. ഇങ്ങനെ മധുരയിൽ ഒരു 90 വീടുകളുണ്ടാക്കിക്കൊടുക്കാനുദ്ദേശിക്കുന്നുവെന്നു പറഞ്ഞതല്ലാതെ ഹരിജനപ്രശ്നത്തെ സംബന്ധിച്ചു് പൊതുവായി ഗവമ്മേണ്ടു ചിന്തിച്ചതിന്റെ ലക്ഷണം ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ കാണുന്നില്ല. മലബാറിൽ ഹരിജനങ്ങൾക്കു പാർപ്പിടത്തിനായി 15 സെൻറ സ്ഥലം കൊടുക്കുന്നതാണെന്നു് 1949 മുതൽ ഗവമ്മേണ്ടു പറഞ്ഞുകൊണ്ടിരിക്കയാണ്. 1955 പകുതിയായിട്ടും ഒരൊററ ഹരിജനും ഒരിഞ്ചുഭൂമിപോലും കൊടുത്തതായി എനിക്കറിവാൻ കഴിഞ്ഞിട്ടില്ല. ഭൂമി കൊടുത്തിട്ടില്ലെന്നു മാത്രമല്ല, ഇതുവരെ കൊടുക്കാതിരുന്നതിന്റെ കാരണമെന്തെന്നുപോലും വെളിവാക്കിയിട്ടില്ല. ഇനിയെങ്കിലും കൊടുക്കാൻ ശ്രമിക്കുന്നതാണെന്നും ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ പറഞ്ഞുകാണുന്നില്ല. ബഹുമാനപ്പെട്ട ഹരിജനോദ്ധാരണമന്ത്രി മലബാർ സന്ദർശിക്കുകയും ജൂൺ മാസത്തിനു മുമ്പുതന്നെ 15 സെൻറു ഭൂമിവീതം കൊടുക്കുന്നതിനുള്ള നടപടികൾ പൂത്തിയാക്കുമെന്നു് ഉറപ്പു നൽകുകയും മററും ചെയ്തിരുന്നു. അതു പറഞ്ഞു അവസാനിപ്പിച്ചതല്ലാതെ ഭൂമി ഇതേവരെ ആക്കും കൊടുത്തിട്ടില്ല. മേലാൽ കൊടുക്കുമായിരിക്കാം. കൊടുക്കുമെന്നുതന്നെ ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. ഈ അവസരത്തിൽ എനിക്കു പ്രത്യേകിച്ചൊരപേക്ഷയുണ്ട്. ഇപ്പോൾ വരുന്നതു് രണ്ടാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതിയാണ്. ജനങ്ങളുടെ ജീവിതത്തോതുയത്തുകയെന്നുള്ളതാണല്ലോ ഈ പദ്ധതികളുടെ ഉദ്ദേശം. ഒന്നാം പഞ്ചവത്സരപദ്ധതികൊണ്ടുദ്ദേശിച്ചിട്ടുള്ളതിൽ കൂടുതൽ ഉയരണമെന്നാണ് രണ്ടാമത്തെ പദ്ധതികൊണ്ടുദ്ദേശിക്കുന്നതു്. അതിന്റെ അടിസ്ഥാനത്തിൽ ഞാൻ പറയുന്നതു് 15 സെൻറ് കൊടുക്കുമെന്നുള്ളതു് 25 സെൻറാക്കി വദ്ധിപ്പിക്കണമെന്നാണ്. ഒന്നാം പഞ്ചവത്സരപദ്ധതിയിൽ 15 സെൻറു കൊടുക്കാനുദ്ദേശിച്ചിരുന്നുവെങ്കിൽ രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയിൽ 10 സെൻറുകൂടെ വദ്ധിപ്പിക്കുന്നതു് വെറും ന്യായം മാത്രമാണ്.

"ഹരിജനങ്ങൾക്കു് നൽകിവരുന്ന വിദ്യാഭ്യാസസൌജന്യങ്ങളെക്കുറിച്ചും ചിലതു പറയാനുണ്ടു്. ഇന്നു് എട്ടാം ക്ലാസ്സുവരെ സകലക്കും ഫീസ്സു സൌജന്യം അനുവദിച്ചിട്ടുണ്ട്. എന്നാൽ, ഹരിജൻ കുട്ടികളെ സംബന്ധിച്ചിടത്തോളം ഏതെങ്കിലും ഒരു ക്ലാസ്സിൽ ഒരു കൊല്ലം തോററാൽ അടുത്തകൊല്ലം യാതൊരു സൌജന്യവുമില്ല; ഫീസ്സു കൊടുത്തുതന്നെ തീരണമെന്നാണ് ചട്ടം. അതുപോലെ ഹൈസ്കൂൾ ക്ലാസുകളിൽ രണ്ടു കൊല്ലം തോററാൽ സൌജന്യമില്ല. ഞാൻ ഇപ്പറയുന്നതു് ബഹുമാനപ്പെട്ട വിദ്യാഭ്യാസമന്ത്രി പ്രത്യേകം ശ്രദ്ധിച്ചു കേൾക്കണമെന്നു് അപേക്ഷിക്കുന്നു. എട്ടാം ക്ലാസ്സുവരെ ഹരിജൻ കുട്ടികൾ ഒരു കൊല്ലം തോററാൽ അവക്കു് കൊടുക്കുന്ന സ്കോളർഷിപ്പു മുതലായതു് കൊടുക്കുകയില്ലെന്നു മാത്രമല്ല, അവരിൽനിന്നു് ഫീസ് ഈടാക്കുകയും ചെയ്യുന്നു. എന്നാൽ മററാളുകളെ സംബന്ധിച്ചിടത്തോളം III-ാം ഫാറംവരെ വിദ്യാഭ്യാസം സൌജന്യമാണ്. ഹരിജൻ കുട്ടികൾ ഒരു കൊല്ലം തോററാൽ ഫീസ്സുകൊടുക്കണം. മററു കുട്ടികൾക്കാണെങ്കിൽ തോററാലും ഫീസുകൊടുക്കേണ്ട. ഇതെന്തൊരു ന്യായമാണ്? ഒരു കൊല്ലം തോററ ഹരിജൻ വിദ്യാർത്ഥികളിൽനിന്നും എട്ടാം തരംവരെ ഫീസ്സു പിരിച്ചു വരുന്നതായി എനിക്കു നേരിട്ടറിയാം. ഇതു് നിയമത്തിൽ ഭേദഗതി ചെയ്യേണ്ടതാണ്.

എട്ടാം തരംവരെ സൌജന്യവിദ്യാഭ്യാസമെന്നുള്ളതിന്റെ ആനുകൂല്യം ഹരിജനങ്ങൾക്കു കൂടി സിദ്ധിക്കത്തക്കവണ്ണം ഉടനെ വേണ്ട ഉത്തരവു പുറപ്പെടുവിക്കണമെന്ന് അപേക്ഷിച്ചുകൊള്ളുന്നു."

Sri T. Ananta Pai :—" Mr. Deputy Speaker, I support the motion. I endorse all that has been said about our beloved Prime Minister's efforts for the promotion of peace in the world and add my humble tribute to the services rendered by our Speaker to this Assembly. 6.46 p.m.

" It has been pointed out that the Governor's Address does not promise anything spectacular. Every statement of policy of the Government cannot be expected to be spectacular. After all, we cannot be continuously bringing up before the House things which might be startling or reforms which might perhaps be brought about in the course of every quarter. One of the important pieces of legislation that will be coming up before the House is about land reforms. This measure, I am sure, will at least be a good beginning. In the First Five-Year Plan, land reforms should have been given an earlier priority. Every day that was allowed to lapse led to the deterioration of the relationship between the landlord and tenant. If we take an objective view of the matter, we will realize that land reform does not mean only the maintenance of cordial relationship between the landlord and tenant. There are larger issues also involved in it. Even from countries with an advanced economy like the United States of America, Russia or England, we have not had the last word on the question of land reforms. Land reforms should proceed on the basis that we should get the maximum production from the land for the benefit of the society concerned. What share of the produce the landlord should get and what share the tenant should get is also a part of the land reform question.

" Prevention of eviction of tenants is not going to solve the problem. Simultaneously with the prohibition of eviction, we have provided for resumption of lands from the tenants by the landlords for personal cultivation. It is found that wholesale eviction of tenants has taken place in other States, because many landlords have come back to their land. This result should be welcomed, because it is but right that people with resources should be allowed to come back to their land. At the same time, if prevention of eviction is to result in more and more evictions, we should come forward with schemes for the rehabilitation and resettlement of the evicted persons. By merely passing laws, we cannot achieve positive results. We should see that all the persons have the least suffering. From that point of view also, the question of providing credit for agriculturual operations assumes great importance. If we are to pass a legislation to restrict credit facilities and to see that particular institutions only are allowed to give credit, we must, at the same time, enlarge the scope of the working of those institutions which are now expected to cater to agricultural needs. We should see that they have at their disposal sufficient funds and relax conditions which would help these institutions to give aid to the people who are in dire need of credit. Along with this question of 6-50 p.m.

credit comes the question of marketing. Whatever might be said, to-day marketing has still to be organized at all levels. Of course, to what extent co-operative institutions alone will have to take up that work, I am not sure. If we think that under the next Five-Year Plan, co-operative institutions alone are going to solve this problem, it may be a bit difficult for them because it is entirely a question of organization. To-day we may have all the resources in this country. We have enough of money; we have enough of men. But the main difficulty is that of organization. Our experience of the First Five-Year Plan shows many things which we have not been able to achieve. It is mainly because we do not have proper organization for that. From that point of view, it is necessary that we should have an assessment of what we have been able to achieve during the First Five-Year Plan period. No doubt, this is one of the few States that can claim credit in spite of the fact that it has had to pass through difficult conditions which perhaps no other State has had to face in the course of the last five years and in spite of the difficulties that were brought about as a result of the certain decision of the Government to have the bifurcation of the Madras State into Andhra and Madras States. In spite of these difficulties, it must be said to the credit of this Government that it has been able to complete all the major schemes that had been set before it in the First Five-Year Plan. It has also been able to raise successfully loans in the market which redounds to our credit for sometimes they were oversubscribed. It has again come forward before the market to-day with a much larger issue than many other States have the courage to come up with. I have no doubt that this loan also, as in the past, will be a great success and the State will be able to carry out many of the constructive schemes placed before it. This State to-day has built up an organization at least in the course of these five years and it might be able to take up many more schemes without difficulty if given a chance, in the Second Five-year Plan. It has had the experience of the execution of major schemes. It has got the personnel ready. Many of the schemes have been held up in other States. I am sure our State will have enough resources to carry out many schemes of development. I do hope that in the Second Five-Year Plan the programme that has been drawn up will be accepted. But here, of course, speaking for South Kanara, I must say that we are in a very difficult position and perhaps we are as uncertain as the Members of the Government and the others in this House as to what exactly is going to be our fate. When the Second Five-year Plan is drawn up, it is quite possible that those who are in power may think, 'These districts are likely to go out. Why should we think of drawing up a Plan for them?' If the Government do not draw up the Plan on the basis that these are the requirements of the State and that they have got to be met in case we have to go out, we will be in a very difficult position, because the people in power in the other State to which we might go might as well feel, 'Those with whom you were all these years and who had all the knowledge of the requirements of your district have not come forward with schemes for you. Why should you expect us now to go into the whole question?' I say this because the possible separation might come exactly at the time when the

3rd August 1955] [Sri T. Ananta Pai]

Second Five-year Plan is being finalised. From that point of view, I would request the Government to be generous at least in providing schemes for the district. Whether they are going to be executed or not is a different matter because ultimately the whole Plan is entirely dependent upon the sanction of the Planning Commission. With regard to the formulation of these schemes at least, I do hope that a generous attitude will be taken. I am not casting any aspersion on the Members of the Government. We have the fullest confidence in the Government that justice will be done to us. At the same time, the feeling will be there. If the scheme is promised and sanctioned, till its execution there is a considerable lapse. The entire Government to-day can be as prejudiced in the matter of linguism as anybody else. There is absolutely every reason for mutual suspicion between ourselves and the others in the State. We do not want that to arise. From that point of view, we do hope that the time during which we are here will be spent happily, that until our separation, we will continue to be regarded as belonging to this State as anybody else and that we will be allowed to play our part as anybody else. Ultimately whatever decisions are taken, they will have to be taken in the larger interests of the State.

"Talking about education, we had appointed a committee to go into the question of primary education. I do think that the Report of the Committee is with the Government. I hope that it will be placed before the House so that the decisions with respect to education may be taken sufficiently early and we may be able to implement them during the next academic year at least.

"So far as Harijan uplift is concerned, I welcome the provision that other communities may be allowed to mix up freely with the Harijans so that the concessions extended may not become a sort of vested interest. I say this because whatever might be the justification in the olden days for separate institutions like the labour schools, in these days we should not keep people apart. We should encourage all the people to enter the general schools because every section of the people are as much entitled to privileges as any other citizen. Recently, the Government issued a circular requesting all those who were in charge of Harijan hostels to change the name of the hostel. I do hope that they will come forward and say that even the Brahmins should be permitted to enter the hostels and that they will give grants. We try to bring the backward class people into the hostel but we are not able to do it. I do hope that sufficient encouragement will be given to those who are prepared to come forward and even make a sacrifice to mix up freely with others. I think that this is the only way to clear the barriers between communities."

Sri D. K. RAJU :—" Mr. Deputy Speaker, Sir, in the first instance, I would like to say that this year's Address of the Governor is satisfactory except in respect of one or two points here and there. The Governor has referred to our Prime Minister's tour of Europe and his efforts for establishment of world peace, Panch Shila and co-existence. In fact, our Prime Minister's visit to Europe

[Sri D. K. Raju] [3rd August 1955

has raised the prestige of our country as well as of the leaders of our country. So, it is a happy thing to be mentioned in the Governor's Address.

" Again, the Governor has referred to the question of boundaries and expressed the hope that it will be settled with the Andhra and other States in a spirit of peaceful and mutual adjustment. This is also a method of adopting Nehruji's way of doing things.

" Then the next question is that of the language of the State. Even though there are people speaking different languages in our State, Tamil is the most important language spoken in our State. It is the most prominent and popular language spoken. I feel sorry that the Governor has failed to refer to that question in detail and to express the intention of the Government to introduce Tamil as the State language as soon as possible. In this connexion, I appreciate the diplomacy of the Hon. the Chief Minister, Sri Kamaraj Nadar, in having brought about a settlement and avoided unnecessary troubles within our State.

" It is one of the very great diplomatic acts of our Chief Minister. We all appreciate his diplomacy in this connexion.

1 p.m.

" Then, Sir, about giving facilities to the agriculturists, His Excellency has referred to the major irrigation projects such as Bhavani and others on which the Government have spent lot of money. That is one of the major directions in which the State can do good to the public. As regards land reforms and other things the trend of feeling in the country is that the people want agrarian reforms to be introduced as early as possible. But very little has been mentioned about it in the Address. My honest impression is that measures of land reform should be taken up on hand here and now and introduced little by little so that there will be no agitation for them. This also very necessary because the success of the Second Five-year Plan depends on the success of the agricultural industry in our country.

" Again the success of the Second Five-year Plan is also dependent on the success of the co-operative societies. Now it has been proposed to open rural banks and finance required by the agriculturists is proposed to be advanced through these co-operatives. In the development of agriculture in this country, the Co-operative Department has an important role to play. In this connexion I would like to mention that though it is called co-operative movement, all the party people are not allowed to co-operate in it. People belonging to the party in power alone are monopolising it. I would request the Members on the Treasury Benches to see that not only members belonging to the party in power get into the co-operative societies but also allow other people to get in. Then only it will deserve the name of co-operative society. I have known from personal experience that none from the other parties are allowed to co-operate with the Co-operative Department. So Government should see to it that prominent people belonging to other parties also get in and co-operate with the department so that the agricultural industry in the country might be improved.

3rd August 1955] [Sri D. K. Raju]

"Regarding extension of electricity supply very little has been mentioned in the Address. It is a very important factor in improving agriculture in this country. In my speeches on previous occasions on the floor of this House, I have requested the Government to see that electricity is made available to agricultural industry at much cheaper rates than those they are now charging. In the matter of extension of electricity many things have to be taken into consideration. First of all extensions for this purpose should be designed in such a way that the capital cost involved is the minimum. Such extensions should be subsidized from other funds. The electricity department is always thought of as a commercial department and they want to make good revenue out of it, especially for supply of electricity for agricultural purposes. For supply made for agricultural purposes, they should not adopt this commercial attitude. Therefore I think a good amount should be set apart in the Second Five-Year Plan for subsidizing extension for agricultural purposes so that tariff minimum guarantee and other things will be minimised and electricity made available to the agriculturists at cheap rates.

"Then, Sir, with regard to elementary education the hon. House knows how a system of elementary education was introduced some time ago and later how it was changed. Government are trying to do a lot of things in this direction. But we are yet to see the result of their efforts in this direction. Whatever it is, the public need that type of primary education which would be useful when the adult leaves the school. Those who leave school must be in a position to become good craftsmen or other. I think the Government are trying to give some such education. Merely copying the systems of primary education obtaining in other countries will do no good to our country. A system of education which would be suitable to our country should be designed and that should be introduced.

"Thank you, Sir."

* **Sri O. KORAN**:—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഇന്നു നമ്മുടെ നിയമസഭയിൽ നടന്നുകൊണ്ടിരിക്കുന്ന ചർച്ച ഈ സംസ്ഥാനത്തിന്റെ ഭരണത്തലവൻ നിയമസഭകളുടെ സംയുക്തയോഗത്തിൽ ചെയ്തിട്ടുള്ള പ്രസംഗത്തെപ്പററിയാണല്ലോ. ആ പ്രസംഗത്തിൽ ആദ്യമായി പറയുന്നതു് ഇന്ത്യയുടെ പ്രശസ്തി ലോകത്തിന്റെ മുമ്പാകെ ഉയർത്തിയ നമ്മുടെ പ്രധാന മന്ത്രിയുടെ ആ മഹനീയമായ വിദേശനയത്തെപ്പററിയാണു്. ഇന്ത്യയുടെ സൽപ്പേരു് ലോകത്തിൽ ഉയർന്നു കാണുന്നതിൽ ഏതൊരു ഇന്ത്യക്കാരനും അഭിമാനം കൊള്ളുമെന്നുള്ളതിനു സംശയമില്ല. പക്ഷെ ഒരു നാണയത്തിന്റെ രണ്ടു വശങ്ങളെന്നപോലെ വിദേശനയത്തേയും ആഭ്യന്തരനയത്തേയും ബന്ധപ്പെടുത്തിക്കൊണ്ടു പോകുന്നില്ലെങ്കിൽ വിദേശനയത്തിൽ മാത്രം നാം അഭിമാനംകൊണ്ടിട്ടു കാര്യമില്ല. വിദേശനയത്തിൽ ഇന്ത്യ പ്രശസ്തി ആർജ്ജിച്ചുകൊണ്ടിരിക്കുമ്പോൾ ഇന്നാട്ടിലെ സാധാരണക്കാരായ ആളുകളുടെ പ്രശ്നങ്ങൾക്കു പരിഹാരം കാണുന്ന വിഷയത്തിൽ ഗവമ്മേണ്ടു അമ്പേ പരാജയപ്പെട്ടിരിക്കുന്നു എന്ന വസ്തുത ആക്കും നിഷേധിക്കാൻ സാദ്ധ്യമല്ല. 7-10 p.m.

"സർ, ഈ സഭയുടെ സ്പീക്കറായ ശ്രീ ശിവഷണ്മുഖം പിള്ള അവർകൾ ഈ നിയമസഭ വിട്ടു് യൂനിയൻ പബ്ലിക്കു് സർവ്വീസ് കമ്മീഷൻ അംഗമായി പോകുന്നതിനെ സംബന്ധിച്ചു ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ ഒരു പ്രസ്താവന കാണുന്നുണ്ടു്. ബഹുമാനപ്പെട്ട സ്പീക്കറെ അദ്ദേഹത്തിന്റെ പുതിയ പദവിയിൽ അഭിനന്ദിക്കുന്നതിനും അദ്ദേഹത്തിന്റെ വിജയത്തിനു ജഗദീശ്വരന്റെ അനുഗ്രഹം ഉത്തരോത്തരം ഉണ്ടാകട്ടെ എന്നു

[Sri O. Koran] [3rd August 1955

പ്രാർത്ഥിക്കുന്നതിനും എനിക്കു അതിയായ സന്തോഷമുണ്ട്. ഹരിജൻ സമുദായത്തിൽപെട്ട അദ്ദേഹം ഉയർന്നുയർന്നു വരുന്ന കാഴ്ച അധ:പതനത്തിൽനിന്നു പൊങ്ങിവരുവാൻ മരണവേദനപ്പെടുന്ന ഈ രാജ്യത്തിലെ ഹരിജനങ്ങൾക്കു ഒരു മാർഗ്ഗനിദർശനംകൂടിയാണ്. അടുത്ത കാലത്തു ഐക്യരാഷ്ട്രസമിതി പ്രസിദ്ധപ്പെടുത്തിയ ഒരു രേഖയിൽ ഏഴു പ്രധാന കാര്യങ്ങൾ പറഞ്ഞിട്ടുള്ള കൂട്ടത്തിൽ ആദ്യമായി കാണുന്നതു് ഇതാണ്: 'തുല്യസന്ദർഭങ്ങളാണ് എല്ലാററിൻേറയും വിജയം.' ശ്രീ ശിവഷണ്മുഖം പിള്ള അതിനു മികച്ച ഉദാഹരണമാണ്. മഹാകവി കുമാരനാശാൻ ഇങ്ങിനെ പാടിയിട്ടുണ്ട് —

> 'താണുകിടക്കുന്നു നിൻകുക്ഷിയിൽ ചാണ
> കാണാതെയാറേഴുകോടിയിന്നും
> തേച്ചുമിനുക്കിയാൽ കാന്തിയും മൂല്യവും
> വാച്ചിടും കല്ലുകൾ ഭാരതാംബേ!'

വളരാനും വികസിക്കാനുമുള്ള തുല്യസന്ദർഭം ലഭിക്കുകയാണെങ്കിൽ ഭാരതത്തിനു അഭിമാനംകൊള്ളാവുന്ന എത്രയോ ശിവഷണ്മുഖം പിള്ളമാർ നമ്മുടെ സമുദായത്തിൻെറ അടിത്തട്ടിൽനിന്നു പൊങ്ങിവരുമെന്നുള്ളതിനു സംശയമില്ല. അദ്ദേഹത്തിൻെറ വിജയത്തിനും ക്ഷേമത്തിനുംവേണ്ടി ഞാൻ വീണ്ടും പ്രാർത്ഥിച്ചുകൊള്ളുന്നു.

"സർ, രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയുടെ കരടു് ഗവമ്മേണ്ടു തയ്യാറാക്കിക്കഴിഞ്ഞിരിക്കയാണല്ലോ. ആ പദ്ധതി വിജയിച്ചു ഇന്ത്യക്കു ക്ഷേമൈശ്വര്യങ്ങൾ കൈവരണമെന്നാണ് നാമേവരും പ്രതീക്ഷിക്കുന്നതു്. ഈ രാജ്യത്തെ പ്രശ്നങ്ങളെ അടിസ്ഥാനപരമായി വിശകലനംചെയ്തിട്ടാണോ ഈ പദ്ധതി തയ്യാറാക്കിയിരിക്കുന്നതെന്നു നാം പരിശോധിക്കേണ്ടിയിരിക്കുന്നു. ഇന്ത്യ ഒരു കാർഷികരാജ്യമാണ്. കൃഷിക്കാരൻെറ അഭിവൃദ്ധിയെ ആശ്രയിച്ചാണ് നമ്മുടെ രാജ്യത്തിൻെറ അഭിവൃദ്ധി നിലകൊള്ളുന്നതെന്നുള്ളതു് തക്കമററ സംഗതിയാണ്. കൃഷിക്കാരനും സ്റ്റേററിനും ഇടയിലുള്ള സകല മദ്ധ്യവർത്തികളേയും നിർമ്മാർജ്ജനം ചെയ്യാനുള്ള ഒരു പദ്ധതി ഗവമ്മേണ്ടിനുണ്ടോ എന്നു ഈ അവസരത്തിൽ നാം പരിശോധിക്കേണ്ടിയിരിക്കുന്നു. അടിയന്തിരമായി കാർഷികപരിഷ്ക്കാരങ്ങൾ വരുത്താൻ തങ്ങളുദ്ദേശിക്കുന്നുവെന്നും അതിനുവേണ്ടിയാണ് തങ്ങൾ നിലകൊള്ളുന്നതെന്നും ഭരണാധികാരികൾ പലതവണ വാഗ്ദത്തം ചെയ്തിട്ടുണ്ട്. അതിപ്രധാനമായ രണ്ടാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതി കെട്ടിപ്പടുക്കുമ്പോഴെങ്കിലും അതിനുവേണ്ടി കാര്യമായ ശ്രമങ്ങൾ ചെയ്യുകാണുമെന്നു ഞങ്ങൾ പ്രതീക്ഷിച്ചിരുന്നു. ഗവമ്മേണ്ടു അതിനു തയ്യാറായിട്ടില്ലെങ്കിൽ പഞ്ചവത്സരപദ്ധതിക്കു ജനങ്ങളുടെ സഹകരണം എങ്ങനെ ഉണ്ടാകാനാണ്? കാർഷികപ്രശ്നത്തെപ്പററി പറയുമ്പോൾ ഗവമ്മേണ്ടിൻെറ തന്നെ കൈവശം കിടപ്പുള്ള തരിശുഭൂമികളെപ്പററി പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. ഗവമ്മേണ്ടിൻെറ കൈവശമുള്ള തരിശുഭൂമികൾ കൃഷിക്കു കൊടുക്കുന്നതിനുള്ള യാതൊരു പദ്ധതിയും ഗവമ്മേണ്ടു ഇതേവരെ രൂപീകരിച്ചിട്ടില്ല. രണ്ടാംപഞ്ചവത്സര പദ്ധതികൊണ്ട് തൊഴിലില്ലായ്മ പരിഹരിക്കുമെന്നെല്ലാം പറയുമ്പോൾ തരിശുഭൂമിയെല്ലാം കൃഷിക്കായി പതിച്ചുകൊടുത്തു കൃഷിക്കുവേണ്ടി സാമ്പത്തികസഹായവും നൽകി നശിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന ജനങ്ങളെ രക്ഷിക്കാനുള്ള ഒരു പരിപാടി ഗവമ്മേണ്ടിനുണ്ടാക്കാമായിരുന്നില്ലേ എന്നാണ് ഞാൻ ചോദിക്കുന്നതു്. അതിനെപ്പററി ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ യാതൊന്നും പറയുന്നില്ല.

"സർ, ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ പരാമർശിച്ചിട്ടുള്ള മറെറാരു പ്രധാന സംഗതി ഹരിജനങ്ങളുടേയും പിന്നണി സമുദായങ്ങളുടേയും കാര്യമാണ്. ഹരിജനപ്രശ്നത്തെപ്പററി പറയുമ്പോൾ ഗവമ്മേണ്ടു ആ പ്രശ്നത്തെ അടിസ്ഥാനപരമായി സമീപിക്കാൻ ശ്രമിച്ചിട്ടില്ലെന്നുള്ളതു് കമ്മ്യൂണിററി പ്ലാൻറുഹാമുകൾക്കും മററുമായി വലിയ സംഖ്യകൾ വൃഥാ ചെലവഴിച്ചതിൽനിന്നുതന്നെ വ്യക്തമാണ്. ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടി ഒരു പദ്ധതി രൂപീകരിക്കുമ്പോൾ ഹരിജനങ്ങളുമായും ഹരിജൻ പ്രവർത്തകരുമായും ഹരിജൻ പ്രശ്നങ്ങളെക്കുറിച്ചു വിവരമുള്ള ആളുകളുമായും ചർച്ചചെയ്തു അവരുടെ നിർദ്ദേശങ്ങൾ സ്വീകരിക്കേണ്ടതു് അത്യാവശ്യമാണ്. അതല്ലാതെ ഉദ്യോഗസ്ഥന്മാർ ഗവമ്മേണ്ടു ആഫീസുകളിലിരുന്നുകൊണ്ടു് എഴുതിയുണ്ടാക്കുന്ന പദ്ധതികൾകൊണ്ടു് ഹരിജനങ്ങളെ ഉദ്ധരിക്കാമെന്നു കരുതുന്നതു് മൌഢ്യമാണ്. അത്തരം ഏതു പദ്ധതിയും പരാജയപ്പെടുകയേയുള്ളു. മധുര ജില്ലയിൽ കുറച്ചു വീടുകൾ ഹരിജനങ്ങൾക്കായി കെട്ടാൻ ഉദ്ദേശിക്കുന്നുണ്ടെന്നു പറഞ്ഞിരിക്കുന്നു. അവിടെയുള്ള കുറെ ഹരിജനങ്ങൾക്കെങ്കിലും അതുകൊണ്ടു് രക്ഷ കിട്ടുമല്ലോ എന്നു ഞാൻ സന്തോഷിക്കുന്നു. എന്നാൽ ഇന്നു ഹരിജന

ങ്ങൾക്കു ഉള്ള വീടുകളിൽതന്നെ കിടന്നുപൊറുക്കാൻ നിവൃത്തിയില്ലാത്ത ഒരു പരിതഃസ്ഥിതിയാണ് ഇന്നാട്ടിലുള്ളതു്. രണ്ടാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതിയിലെങ്കിലും ഹരിജനങ്ങൾക്കു വീടു കെട്ടിക്കൊടുക്കാനും അതിന്റെ ചെലവു ബുദ്ധിമുട്ടുണ്ടാകാത്ത തരത്തിൽ തവണകളായി അവരിൽനിന്നു ഈടാക്കിയെടുക്കുന്നതിനും ഒരു പരിപാടി ഉൾപ്പെടുത്തുമെന്നു് ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു.

“ഇന്ത്യ ഒരു കാർഷിക രാജ്യമാണ്. നാം ഒരു സോഷ്യലിസ്റ്റ് രാഷ്ട്രമാണ് ലക്ഷീകരിക്കുന്നതു്. നമ്മുടെ ലക്ഷ്യം അതായിരിക്കുമ്പോൾ ആദ്യമായി വേണ്ടതു ഇന്നാട്ടിലെ അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തിനു ജീവിക്കാനുള്ള സാഹചര്യങ്ങൾ സൃഷ്ടിച്ചുകൊടുക്കുകയാണ്. സർ, ഇന്ത്യാ ഗവർമ്മേണ്ടിന്റെ ലേബർ വകുപ്പ് കർഷകത്തൊഴിലാളികളെപ്പററി അന്വേഷണം നടത്തി ശേഖരിച്ചിട്ടുള്ള സ്ഥിതിവിവരക്കണക്കുകൾ കഴിഞ്ഞ ഒക്ടോബറിൽ പ്രസിദ്ധപ്പെടുത്തിയിട്ടുണ്ടു്. ഇന്ത്യയിൽ ഉൾനാടുകളിൽ ആകെയുള്ള 580 ലക്ഷം കുടുംബങ്ങളിൽ 176 ലക്ഷം കർഷകത്തൊഴിലാളികളാണ്. ഇവർക്കു കുടുംബമൊന്നിനു 468 ക. കൊല്ലത്തിൽ ചെലവുള്ളപ്പോൾ 447 ക. മാത്രമാണ് വരവുള്ളതു്. ഇന്ത്യയിൽ ഒരാളുടെ ശരാശരി വരവ് 264 ക. ആണ്. എന്നാൽ കർഷകത്തൊഴിലാളികളുടെ വരുമാനം 104 ക.യാണ്. പുരുഷന്മാർക്കു കൊല്ലത്തിൽ 189 ദിവസം മാത്രമെ ജോലിയുള്ളു. ഉൾനാടുകളിൽ ആകെ ജീവിക്കുന്ന കുടുംബങ്ങളിൽ 80 ശതമാനവും കാർഷികകുടുംബങ്ങളാണ്. കൊല്ലത്തിൽ 189 ദിവസം മാത്രമേ കർഷകത്തൊഴിലാളികൾക്കു തൊഴിലുള്ളു. അതുകൊണ്ടുമാത്രം അവർക്ക് ജീവിക്കാൻ സാദ്ധ്യമല്ല. ഗവർമ്മേണ്ട് തയ്യാറാക്കിയ രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയുടെ കരട് ഇപ്പോൾ പുറത്തുവന്നിട്ടുണ്ട്. ഹരിജനങ്ങൾക്കു വിദ്യാഭ്യാസപരമായി ചില ആനുകൂല്യങ്ങളെല്ലാം ചെയ്തുകൊടുക്കാനുദ്ദേശിക്കുന്നുണ്ടെന്നല്ലാതെ അവരുടെ സാമ്പത്തികാഭിവൃദ്ധിക്കായുള്ള പദ്ധതികളൊന്നും ഞാൻ അതിൽ കാണുന്നില്ല. കൃഷിത്തൊഴിലില്ലാത്ത കാലങ്ങളിൽ അവർക്ക് എന്തെങ്കിലും തൊഴിൽ ചെയ്യാനുള്ള സൌകര്യം ചെയ്തുകൊടുക്കുക, കൃഷിക്കായി തരിശുഭൂമികൾ പതിച്ചുകൊടുക്കുക, കൃഷിച്ചെലവിനായി സാമ്പത്തികസഹായം നൽകുക, ഒരു ജോഡി കാളയും കൃഷിയായുധങ്ങളും വാങ്ങാനുള്ള പണം കൊടുക്കുക മുതലായ കാര്യങ്ങൾക്കു ഒരു പദ്ധതി ഉൾക്കൊള്ളിക്കേണ്ടതാണ്. ചുരുങ്ങിയ ഒരു വിഭാഗം ഹരിജനങ്ങൾക്കു വിദ്യാഭ്യാസസൌജന്യങ്ങൾ നൽകിയതുകൊണ്ടുമാത്രം ബഹുഭൂരിപക്ഷം ഹരിജനങ്ങളുടെ അടിയന്തിരമായ പ്രശ്നങ്ങൾക്കു പരിഹാരം കാണുവാൻ സാദ്ധ്യമല്ല. ഹരിജനങ്ങളുടെ സാമ്പത്തികോന്നമന കാര്യത്തിൽ ഗവർമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധ കൂടുതൽ പതിയേണ്ടിയിരിക്കുന്നു. അതനുസരിച്ചു രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയിലെ പരിപാടികളിൽ മാററം വരുത്തുമെന്നു ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു.

“ഹരിജനങ്ങൾക്കുവേണ്ടിയുള്ള പ്രത്യേക സ്കൂളുകൾ നിറുത്തൽ ചെയ്തിട്ടു എല്ലാവർക്കുമായി കൂട്ടായ സ്കൂളുകൾ സ്ഥാപിക്കുന്ന കാര്യത്തെപ്പററി ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ പറഞ്ഞിട്ടുണ്ട്. എല്ലാ കുട്ടികൾക്കും ഒരുമിച്ചിരുന്നു പഠിക്കാൻ സൌകര്യം നൽകുന്ന പൊതു സ്കൂളുകളെ ഞാൻ സ്വാഗതം ചെയ്യുന്നു. പക്ഷെ ഹരിജൻ കുട്ടികളെ പൊതു സ്കൂളുകളിൽ പ്രവേശിപ്പിച്ചതുകൊണ്ടുമാത്രമായില്ല. ഹരിജൻ സ്കൂളുകളിൽ ഇന്നു അവർക്കു എന്തെല്ലാം ആനുകൂല്യങ്ങൾ അനുവദിച്ചിട്ടുണ്ടോ അവയെല്ലാം പൊതു സ്കൂളുകളിലും അനുവദിച്ചുകൊടുക്കേണ്ടതാണ്. യാതൊരു സൌജന്യവും നിർത്തിക്കളയരുതു്. ഉച്ചഭക്ഷണം, വസ്ത്രം, പുസ്തകങ്ങൾ മുതലായി ഇന്നുള്ള സകല സൌജന്യങ്ങളും പൊതു സ്കൂളുകളിലും ഹരിജൻ കുട്ടികൾക്കു നൽകാൻ ഏർപ്പാടു ചെയ്യുകയാണെങ്കിൽ പൊതു സ്കൂളുകൾ സർവ്വഥാ സ്വാഗതാർഹമാണ്.

“സർ, ഈ രാജ്യത്തു നിയമസമാധാനങ്ങൾ ശരിക്കും പരിപാലിക്കപ്പെടുന്നുണ്ടെന്നു ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ പറഞ്ഞിരിക്കുന്നു. ഹരിജനങ്ങളുടെ അനുഭവം പറയുകയാണെങ്കിൽ ഈ നാട്ടിൽ നിയമവും പാലിക്കപ്പെടുന്നില്ല, സമാധാനവും നിലവിലില്ല. മലബാർ കുടിയായ്മ നിയമപ്രകാരം ഉൾക്കുടിക്കാർക്കു കൈവശാവകാശം നൽകിയിട്ടുണ്ട്. ഉൾക്കുടിക്കാരെന്നു പറഞ്ഞാൽ ഒട്ടുമുക്കാലും ഹരിജനങ്ങളാണ്. നിയമത്തെ തോല്പിച്ചു ഉൾക്കുടിക്കാരെ ദ്രോഹിക്കാൻവേണ്ടിയുള്ള സകല സൂത്രപ്പണികളും പ്രയോഗിച്ചുകൊണ്ടിരിക്കയാണ് ജന്മിമാർ. ജന്മിമാരോടു വിലപേശുവാനുള്ള കെല്പ് ഹരിജനങ്ങൾക്കില്ല. ഒരു കൊല്ലത്തെ കൈവശാവകാശമുണ്ടെങ്കിലേ ഉൾക്കുടിക്കു നിയമസാധുത്വം ഉള്ളു. അതുകൊണ്ടു ജന്മിമാർ ചെയ്യുന്നതെന്താണെന്നുവെച്ചാൽ, ഒരു കൊല്ലമോ രണ്ടുകൊല്ലമോ ആയാലും ശരി ഉൾക്കുടിക്കാരനെ വിളിച്ചു ഭീഷണിപ്പെടുത്തി നാലുമാസവും ആറു മാസവും

[Sri O. Koran] [3rd August 1955

മററും കാലയളവുവെച്ചു് പ്രമാണങ്ങൾ എഴുതി വാങ്ങുന്നു. ഉൾക്കുടിക്കാരൻ പ്രമാണമെഴുതിക്കൊടുക്കാൻ മറുത്താൽ ജന്മി എന്തെങ്കിലും കള്ളക്കേസുകൊടുത്തു ഉൾക്കുടിക്കാരനെ പോലീസിനെക്കൊണ്ടു മർദ്ദിപ്പിക്കുകയായി. പോലീസുമർദ്ദനത്തെ ഭയന്നു നിസ്സഹായരായ ഉൾക്കുടിക്കാർ ജന്മി പറയുംപോലെ രേഖ എഴുതിക്കൊടുക്കുന്നു. പയ്യോളിയിൽ വെള്ളൻ എന്നൊരു ഹരിജനെ ബലാൽക്കാരമായി കുടിയൊഴിപ്പിച്ച സംഭവത്തെപ്പററി അധികൃതർക്കു് നിവേദനങ്ങൾ സമർപ്പിച്ചിട്ടുണ്ടു്. ബഹുമാനപ്പെട്ട ഹരിജനോദ്ധാരണമന്ത്രി മലബാറിൽ വന്നപ്പോൾ അദ്ദേഹത്തിനും നിവേദനങ്ങൾ സമർപ്പിച്ചിട്ടുണ്ടു്. എന്നിട്ടും അതിന്മേൽ യാതൊരു നടപടിയും എടുത്തില്ല. ഫലമെന്തായി? അധികാരസ്ഥാനങ്ങളിൽ നിവേദനം നടത്തിയതിനു പകപോക്കലെന്ന നിലയിൽ ചില റൌഡികൾചേർന്നു ആ ഹരിജനെ തല്ലി കാലൊടിച്ചു ഇട്ടിരിക്കയാണിന്നു്. ഹരിജനങ്ങൾക്കും സാധുക്കൾക്കും ഇന്നു നാട്ടിൽ യാതൊരു രക്ഷയുമില്ല. മൃഗീയമർദ്ദനങ്ങൾ അനുഭവിച്ചുകഴിഞ്ഞതിനുശേഷം അതു് അധികൃതരുടെ ശ്രദ്ധയിൽകൊണ്ടുവന്നാൽ യാതൊരു നടപടിയുമില്ല. പോരെങ്കിൽ ചിലപ്പോൾ തിരിച്ചടിക്കുകയും ചെയ്യും. വാദി പ്രതിയാവും. ഹരിജനെ പോലീസിൻെറവകയായി ഒന്നുകൂടെ മർദ്ദിച്ചുവെന്നുംവരും. പണക്കാർക്കും സ്വാധീനശക്തിയുള്ളവർക്കും ന്യായവും നീതിയും ലഭിക്കുന്നുണ്ടു്. അതിലധികവും ലഭിക്കുന്നുണ്ടു്. പക്ഷെ പാവപ്പെട്ടവർക്കും ഹരിജനങ്ങൾക്കും ഇന്നാട്ടിൽ യാതൊരു രക്ഷയുമില്ല. വലപ്പാടു പോലീസ് സബ്ബ് ഇൻസ്പെക്ടരുടെ അക്രമങ്ങളെപ്പററി ഗുരുതരമായ ആക്ഷേപങ്ങളുണ്ടായിട്ടുണ്ടു്. ഒരു പ്രത്യേക കേസിനെ സംബന്ധിച്ചു ഞാൻതന്നെ ഹരിജനോദ്ധാരണമന്ത്രിക്കു ആക്ഷേപം കൊടുത്തിട്ടുണ്ടു്. ഒരു ഹരിജനെ ഒരു മാവിൻെറ കടയോടുചേർത്തുവെച്ചു ചവിട്ടി മർദ്ദിച്ചതിനെപ്പററി ആവലാതിപ്പെട്ടിട്ടു പോലീസുകാർ സ്ഥലത്തുവന്നു ഏററവും ആക്ഷേപാർഹമായവിധത്തിൽ ആ കേസിനെ തേച്ചുമാച്ചു കളയുകയാണു് ചെയ്തതു്. ഭരണം മാറി, ജനകീയഭരണം വന്നുകഴിഞ്ഞാലെങ്കിലും സാധുക്കൾക്കു പോലീസിൽനിന്നു രക്ഷ കിട്ടുമെന്നു ആളുകൾ പ്രതീക്ഷിച്ചിരുന്നു. പക്ഷെ ദൌർഭാഗ്യമെന്നു പറയട്ടെ ഈ ജനകീയഭരണകാലത്തും പണക്കാർക്കും പ്രമാണികൾക്കുമല്ലാതെ പാവപ്പെട്ടവർക്കു പോലീസുകാരെക്കൊണ്ടു് യാതൊരു രക്ഷയുമുണ്ടാകുന്നില്ലെന്നുള്ളതാണു് വാസ്തവം. ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ അനാസ്ഥകൊണ്ടാണു് പോലീസിൻെറ ഇത്തരം അക്രമങ്ങൾ തുടർന്നുപോകുന്നതെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു. മേലധികാരികൾക്കു ഒരു ആവലാതി കൊടുത്താൽ അതിന്മേൽ ഊർജ്ജിതമായ നടപടിയെടുക്കുകയാണെങ്കിൽ അക്രമങ്ങൾ ഇത്രയധികം വർദ്ധിക്കാനിടയില്ല. രാജ്യത്തിൻെറ ഭരണം മാറിക്കഴിഞ്ഞു എന്നു സാധാരണ ജനങ്ങൾക്കു അനുഭവത്തിൽ ബോദ്ധ്യപ്പെടണം. ഒന്നാമത്തെ പഞ്ചവത്സരപദ്ധതിയുടെ ഗതി എന്തായിരുന്നാലും രണ്ടാം പഞ്ചവത്സര പദ്ധതിയെങ്കിലും വിജയിക്കണമെന്നു ഗവർമ്മേണ്ടിനു ആഗ്രഹമുള്ളപക്ഷം ഭരണം മാറി, ജനകീയഭരണമാണു ഇവിടെ നടക്കുന്നതു്, പാവപ്പെട്ടവരുടെ രക്ഷക്കു വേണ്ടിയാണു് ഗവർമ്മേണ്ടു് നിലകൊള്ളുന്നതു് എന്നൊരു ബോധം ജനങ്ങൾക്കുണ്ടാകേണ്ടതു് അത്യാവശ്യമാണു്. നിർഭാഗ്യവശാൽ അതു സംഭവിച്ചുകാണുന്നില്ല. നിയമസമാധാനങ്ങൾ ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിലല്ലാതെ അനുഭവത്തിൽ ഞാൻ കാണുന്നില്ല. ഇത്രയും പറഞ്ഞുകൊണ്ടു് സമയച്ചുരുക്കത്താൽ എൻെറ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.''

7-25 p.m. * SRI V. MUTHU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சபை முன்பு விவாதத்தில் இருக்கும் மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையை நான் வரவேற்றுச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

" நமது ஒப்புயர்வற்ற பிரதம மந்திரி அவர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றி கவர்னர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அதற்காக கவர்னர் அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

" அத்துடன் சென்ற ஒன்பது ஆண்டுகளாக இந்த ராஜ்ய சட்டசபையில் சபாநாயகராக இருந்துவரும் நமது சபாநாயகர் உயர் பதவியை ஏற்பதற்காக நம்மைவிட்டு வெளியே செல்வதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னைப்பொறுத்தவரையில் ஹரிஜனங்கள் சார்பிலே நாங்களெல்லாம், இந்தச் சபையில் ஒரு ஹரிஜன், இந்த ராஜ்யத்திலுள்ள ஹரிஜன சமுகத்திற்கே கௌரவம் கொடுக்கக்கூடிய முறையிலே சென்ற ஒன்பது ஆண்டுகளாக சபாநாயகராயிருந்து வந்ததைப்பற்றி பெருமை அடைந்துவந்தோம்.

இன்னும் பெருமை அடைந்துகொண்டிருக்கிறோம்: ஆனால், அவர் வெளியே செல்வது எங்களுக்கு ஒரு வகையில் வருத்தம் அளிக்கிறது. இருந்தபோதிலும் அவர்கள் இதேபோல் மத்திய அரசாங்கத்திற்குச் சென்று அங்கும் பெரிய ஸ்தானம் வகிக்கப்போவதாலும், பெரியதொரு ஸ்தானத்தில் அவர் இருக்கப்போகிறார் என்ற ஒரே சந்தோஷத்தினால் அவர்கள் செல்வதைப்பற்றி நாங்கள் சந்தோஷப்படுகிறோம்.

" அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் உரையில் நாட்டிலே நல்ல பருவ மழை ஆரம்பித்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு வகையில் வாஸ்தவந்தான். பல ஜில்லாக்களிலிருந்து வந்த அங்கத்தினர்கள் இங்கு பேசும்போது அவரவர்களுடைய ஜில்லாக்களில் மழை இல்லையென்ற வருத்தத்தை நான் காணவில்லை. ஆனால், மதுரை ஜில்லாவிலே பெரியகுளம் தாலுகா, திருமங்கலம் சப்-தாலூகா என்ற பிரதேசங்களில் இன்றைக்குக் கூட குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத வகையில் வரட்சி இருக்கிறது. தோட்டக் காடுகளிலுள்ள தோட்டக் கிணறுகளில்தான் தண்ணீர் இல்லை, அதனால் விவசாயம்தான் தடைப்படும் என்று சொன்னாலும் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடையாது. எப்பொழுதும் அந்தப் பிரதேசத்தில் குடி தண்ணீருக்குப் பஞ்சமே கிடையாது. இருந்தாலும் இந்த வருஷம் குடிப்பதற்கே தண்ணீர் கிடைப்பது மிகவும் அருந்தலாக இருக்கிறது. கனம் விவசாய மந்திரி அவர்கள்கூட எங்கள் பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்குள்ள நிலைமையைப் பார்த்திருக்கிறார்கள். சில இடங்களில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. ஆகையால் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இந்த மாதிரியான குடிப்பதற்குக்கூட தண்ணீர் அருந்தலாயிருக்கிற பிரதேசங்களில், முனிசிபல் பிரதேசத்தில் லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுபோய் ஜனங்களுக்குக் கொடுப்பதுபோல் கிராமப் பிரதேசங்களிலுள்ள பெரிய பஞ்சாயத் 'ஏரியா' க்களிலாவது குடிதண்ணீர் சப்ளை செய்யவேண்டும். அந்தப் பக்கத்தில் தண்ணீர் இல்லை என்றால் பக்கத்தில் ஒன்றிரண்டு மைல்களுக்கப்பால் நீர் ஊற்றுகள் இருக்கும். அங்கிருந்து லாரிகளில் தண்ணீரை எடுத்துக்கொண்டுவந்து தண்ணீர் இல்லாத இடங்களில் சப்ளை செய்யவேண்டும். குடி தண்ணீர் விஷயத்தில் இந்தமாதிரி ஜனங்களுக்கே கஷ்டமாயிருக்குமானால் கால் நடைகளுடைய கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. குளம் குட்டைகள் வரண்டுபோய்விட்டது. இவ்வளவு மழை இருக்கும் காலத்தில் அங்கு இந்த ஆறு மாத காலமாக மழை இல்லை. ஆகையால், கிராமக் குடிதண்ணீர்த் திட்டம் போட்டிருக்கிறோம். ஐந்தாண்டுத்திட்டம் வரும் வரை தாகத்தைத் தாங்கிக்கொண்டிருக்க முடியாது. உணவு இல்லாவிட்டால்கூட ஒரு காலம் வரையில் தாங்கிக் கொண்டிருக்கலாம், ஆனால், குடிதண்ணீர் தாகத்தைத் தாங்கிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, குடிதண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்கு லாரிகளின் மூலம் குடிதண்ணீர் சப்ளை செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நெருப்பணைக்கும் லாரிகளைக்கொண்டாவது சில சமயங்களில் தண்ணீர் சப்ளையை நிறைவேற்றலாம். நெருப்பணைக்கும் இன்ஜின்கள், லாரிகள் போன்றவைகளை கிராமக் குடிதண்ணீர் சப்ளைக்காக. ஜில்லா போர்டார்களை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து போர்டார்கள் அணுகிக்கேட்டுக் கொண்டால், அவர்கள் கொடுக்க முடியாதென்று சொல்கிறார்கள். அவர்களிடத்தில் போதுமான லாரிகள் இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். ஆகையால் ஜில்லா போர்டாரிடம் சில லாரிகளைக் கொடுத்து, கிராமங்களில் தண்ணீர் வசதி இல்லையென்று கேட்கும்போது அவர்களுக்குத் தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கவர்னர் அவர்களுடைய உரையில், நாட்டில் அமைதி நிலவுகிறதென்று சொன்னார்கள். அது உண்மை. நாமெல்லாம் முதன் முதலில் சட்டசபை அங்கத்தினர்களாக ஆகும் காலத்தில், இந்த சட்டசபையில் வாழ் நாளைத் துவக்கும் காலத்தில், நாட்டில் பலவிதமான கொந்தளிப்புகள் இருந்தது வாஸ்தவம். அவைகள் நாளடைவில் சிறுகச் சிறுகக் குறைந்து இப்பொழுது அமைதி நிலைத்திருக்கிறது. இந்த நிலையில்துரதிருஷ்டவசமாக சமீபத்தில் நாம் ஒரு துக்ககரமான செய்தியைக் கேட்டோம். நாட்டில் திராவிடக் கழகத்தார்கள் தேசியக் கொடியைக் கொளுத்துவது என்ற ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். 'அந்தப் போராட்டம் ஆரம்பித்திருந்தால் கவர்னர் அவர்கள் நினைத்திருந்த எண்ணத்திற்கே மாறாக

[Sri V. Muthu] [3rd August 1955

முடிந்திருக்கும். அது பெரிய விபரீதத்தில் முடிந்திருக்கும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் அதைப்பற்றி விரிவாகச் சொன்னார்கள். அந்தப் போராட்டத்தைக் கண்டித்துப் பேசியதற்காக நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். கொடியைக் கொளுத்துவதென்றால் அது மனிதனுடைய உயிரைக் கொளுத்துவதுமாதிரி. ஒரு நாட்டில் குடியரசுக்குப் பதில் முடியரசு இருந்தால், அப்பொழுது கொடியை எரித்தால், அது அந்த நாட்டு மன்னனையே கொளுத்துவதற்கு ஒப்பாகும். நாட்டின் தேசியக் கொடியின் தத்துவத்தை உணர்ந்துதான் கொடியைக் கொளுத்துவதற்குத் திட்டமிட்ட தலைவர்கள் முடிவு செய்தார்களா என்று தெரியவில்லை. ஆனால், எந்த விதமான பிரச்னையைத் தீர்ப்பதற்கும் இம்மாதிரி போராட்டம்செய்ய ஆரம்பித்தது துரதிருஷ்டந்தான் என்று நான் நினைக்கிறேன். கொடி கொளுத்தும் இயக்கம் ஒரு வழியில் ஒழிந்து விட்டது. இம்மாதிரி இயக்கம் வாபஸ் செய்யப்பட்டதனால் அந்தக் கட்சிக்குத்தான் நல்ல காலம் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்தக் கட்சிக்கு இன்னும் கொஞ்ச காலம் வரை உயிர் இருக்கிறதென்று தெரிகிறது. ஏனென்றால் நான் மதுரை வாசி. கொடி கொளுத்த முற்பட்ட கட்சியும் மதுரையில் ஒரு காலத்தில் மதுரை வைகைக் கரையில் ஒரு கருப்புச்சட்டை மகாநாடு நடத்தினார்கள். அந்த சமயத்தில் கருப்புச் சட்டைத் தொண்டர்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சுவாமி தரிசனத்திற்காகப் போகும் பெண் பக்தர்களை அவமானப்படுத்தினார்கள். அதைக்கண்ட மக்கள் கொந்தளிப்படைந்து மகாநாட்டுப் பந்தலையே தீயிட்டுக் கொளுத்தினார்கள். அப்படிப் பெண்களை அவமானப் படுத்திய கருப்புச் சட்டைகளும் கொடிகளும் எரிந்து போய்விட்டன, வைகைக் கரையிலே. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பலமான பிரசாரத்தின் காரணமாக அந்தக் கட்சி வளர்ந்து, தேசீயக் கொடிக்கு தீ வைக்க ஆரம்பித்திருந்தது. அதோடு அந்தக் கட்சி ஒழிந்துபோயிருக்குமென்று நான் நினைத்தேன். அவர்களுடைய இயக்கத்தை வாபஸ் வாங்கிக்கொண்டதனால் அவர்களுடைய கட்சி இன்னும் கொஞ்ச நாள் உயிரோடு இருக்குமோ என்று நான் நினைக்கின்றேன். இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்த மாதிரி சம்பவத்தை சர்க்கார் ஒரு அணுகூட அனுமதிக்கக்கூடாது. நாட்டுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சர்க்கார்க் கட்சியினுடைய கொள்கை சரியாக இல்லையென்றால், அதை இதர கட்சிகள் எடுத்துச் சொல்லலாம். சர்க்காருடைய கொள்கையைக் கண்டிக்கலாம். அவர்களுடைய கொள்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தலாம். அதற்கான பிரசாரங்களை எந்தக் கட்சியும் நடத்தலாம். இன்றைக்கு ஒரு கட்சி இருக்கலாம், நாளைக்கு இன்னொரு கட்சி இருக்கலாம். எந்தக் கட்சி பதவியிலிருந்தாலும் தேசீயக் கொடியை எரிக்க நினைப்பது கண்டிக்கத்தக்கதாகும். பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் நாங்கள் பெரிய போராட்டம் நடத்தினோம். அப்பொழுதுகூட பிரிடிஷ் கொடியை யாரும் கொளுத்த முன்வரவில்லை. பிரிட்டிஷ் கொடியை யாரும் எரித்ததாக நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்தான் போராட்டம் நடத்தியவர்களாகிய எங்களுடைய கொடியைக் கொளுத்தினார்கள். ஆகவே, தேசீயக் கொடியை எந்தக் காரணத்திற்காகவும் எந்தக்கொள்கை வேறுபாட்டுக்காகவும் எரிக்கமுன் வரக்கூடாது என்று எல்லா எதிர்க் கட்சிக்காரர்களும் உணரவேண்டும். கொடியைக் கொளுத்துவதென்றால் அது விஷயத்தில் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடுகூட மக்கள் தங்களுடைய உயிர், உடைமை எல்லாவற்றையும் கொடுத்துக் காப்பாற்றுவதற்குத் தயங்கமாட்டார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

"சமுதாய அபிவிருத்தியைப்பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் இவைகளெல்லாம் நாட்டிலுள்ள ஜனத்தொகையில் நான்கில் ஒரு பாகத்தைக் கவர்ந்திருக்கிறதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மை. தேசிய அபிவிருத்தி வேலை, சமூக நலத் திட்டம் ஆகியவைகள் ஒவ்வொரு இடத்திலும் வெகுவாக நடந்து வருகின்றன. எங்களுடைய பிரதேசத்தில் மதுரை ஜில்லாவிலே திருமங்கலம் தாலூகாவில் சமூக நலத் திட்டம், தேசீய அபிவிருத்தித் திட்டவேலைகள் நடைபெறுகின்றன. கனம் மந்திரி அவர்களும் வந்திருந்தார்கள்.

3rd August 1955] [Sri V. Muthu]

கிராமத்தார்களுடைய உற்சாகத்தைப் பார்க்கும்போது இன்னும் ஏராளமான பணத்தைச் செலவழிக்கவேண்டும். இந்தத் திட்டங்களுக்கு மக்களிடையே அதிகமான ஊக்கமும் வரவேற்பும் இருக்கிறது. இந்தச் சபையில்கூட சில பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அபிவிருத்தித் திட்டம் அனு வசியமான செலவு ஆகக்கூடிய உதவாக்கரைத் திட்டம், பொதுமக்களுடைய பணம் வீண் விரயம் செய்யப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது பல இடங்களில் பல கட்சிக்காரர்கள் எல்லாம் ஒத்துழைத்து திட்டம் தயாரித்துக் கொடுக்கிறார்கள். அதைச் செய்கிறார்கள் என்பதைக் கண்ணால் பார்க்கிறோம். அபிவிருத்தித் திட்டங்கள் நாளுக்கு நாள் விரிவாக வேண்டும். ராஜ்யம் பூராவும் சமுதாய அபிவிருத்தி, தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் பரவிவிடும் என்று சொல்வதைக் கேட்கும்போது நாங்கள் உற்சாகம் அடைகிறோம். இன்னும் வேகமாகப் பரவும் என்பதைக் கேட்கும்போது மக்கள் குதூகலம் அடைகிறார்கள். இன்னும் இந்தத் திட்டத்தில் இப்பொழுது ஊக்கம் ராட்ட ஆரம்பித்திருக்கிறது. ஒரு வருஷத்தில் ராஜ்யம் பூராவும் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் பரவும்போது ஜனங்கள் பலவகையில் நன்மை அடைகிறார்கள். கிராமங்களிலெல்லாம் ரோடுகளும், கிணறுகளும், நல்ல குடியிருப்பு வசதிகளும் இன்னும் இதுபோன்ற சகல வசதிகளும் மக்களுக்கு இந்தத் திட்டங்களினால் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு வேண்டிய தன்னம்பிக்கையை கிராம மக்களிடையே இன்றைக்கு சமுதாய அபிவிருத்தி திட்டம் சிருஷ்டி செய்கிறது. ஆகவே, இம்மாதிரி திட்டங்கள் நாளுக்கு நாள் வளரவேண்டும்.

"இந்த நாடு நம்முடையது, கிராமம் நம்முடையது, இந்த ரோடு, கட்டிடம் நம்முடையது என்ற உணர்ச்சியுடனும், தன்னம்பிக்கையுடனும மக்கள் இருக்கிறார்கள். சமுதாய அபிவிருத்தியின் மூலமாக தம் சொந்த பலத்தால் வாழலாம் என்ற உணர்ச்சி ஜனங்களிடையை வந்திருக்கிறது. ஆகையினால் இந்த திட்டம் நாளுக்கு நாள் வளர வேண்டும். சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் எங்குபார்த்தாலும் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அத்திட்டத்திலே ஒன்று கூறப்பட்டிருக்கிறது. சமுதாய அபிவிருத்தி திட்டம் பரவி இருக்கும் பிரதேசங்களிலுள்ள எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்து போர்ட் ஏற்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சில இடங்களில் அப்படி ஏற்படவில்லை. உசிலம்பட்டி பிர்க்காவிலே 75 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. ஆனால் இன்றுவரை இரண்டே பஞ்சாயத்து போர்டுகள், அதாவது ஒன்று மேஜர் பஞ்சாயத்து இன்னொன்று மைனர் பஞ்சாயத்து, ஏற்படுத்தி இருக்கிறார்கள். சமுதாய அபிவிருத்தி திட்டத்தை அந்த பிர்க்காவில் புகுத்தப்பட்டு ஒரு வருஷம் ஆகிவிட்டது. அந்த திட்டப்படி அந்த பிராந்தியத்தில் எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இரண்டே இரண்டு பஞ்சாயத்து போர்டுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த மாதிரி தேசிய அபிவிருத்தி திட்டம் புகுத்தப்பட்ட இடங்களிலெல்லாம் பஞ்சாயத்து போர்டுகள் அமைக்க வேண்டுமென்றும், அதற்காக ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். 7-35 p.m.

"அடுத்தபடியாக கவர்னர் உரையில், ஹரிஜனங்களுக்கு இருக்கும் சமூகத்தடை நீக்கும் காரியங்கள் சம்பந்தமாக சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சமூகத்தடை நீக்கத்தில் நகரத்தில் ஒரு வெற்றி கண்டிருக்கிறோம். ஆனால் கிராமங்களில் இன்னும், முன்னைக் காட்டிலும் அதிகமாக ஹரிஜனங்களுக்குத் தொல்லை வந்துகொண்டிருக்கிறது. அங்கே பொது மக்கள் படிக்காதவர்களாக இருப்பதால்தான் தீண்டாமையை அனுசரிக்கிறார்கள் என்று நினைத்தோம். ஆனால் இப்போது படித்தவர்களிடையேயும் அத்தீண்டாமைப்பேய் புகுந்துவிட்டது. கிராமங்களில் சமூகப் பிரச்னை தீராமல், படித்தவனும், இதற்காக வக்காலத்திற்குப் போகும் வகையில், ஒவ்வொருவரும் தங்களுடைய சமூகம், தாங்கள் ஜனக்கட்டுப்பாடுடன் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி வந்து விட்டதால், அங்கே ஹரிஜனங்களுக்கு கஷ்டங்களும், தொல்லைகளும் அதிகமாகி வருகின்றன. ஜாதி இந்துக்களில் கட்சிகள் கிராமங்களில் ஏற்பட்டு, ஒவ்வொரு கட்சியைச்

[Sri V. Muthu] [3rd August 1955

சேர்ந்தவர்கள், பலபேர் அக்கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களை தங்கள் பக்கம் வசப்படுத்த வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். இந்த இரண்டு வகைக் காரணங்களால், ஹரிஜனங்கள், கிராமங்களில் மிகக் கஷ்டமான தொந்திரவுகளுக்கு ஆளாகிறார்கள். இதனால் ஒரு ஜாதி ஹிந்து கட்சிக் காரருக்கு அதிருப்தி ஏற்பட்டு, அவர்கள், ஹரிஜனங்களுக்கு தீண்டாமை என்ற முறையில் பல தொல்லைகள் கொடுக்கிறார்கள். ஆகையினாலே, இதற்கு உடனடியாக ஏதாவது பரிகாரம் செய்யவேண்டும். இதற்காக பல வழக்குகள் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வழக்கு களுக்கு சாட்சியங்கள் இல்லாததால் வழக்குகளை நடத்தமுடியாமல், போய் விடுகின்றன. அதற்கு எந்த விதமான பரிகாரமும் கோர்ட்டில் தேட முடியவில்லை. ஆகவே, கிராமங்களில், உதாரணமாக, இந்த மாதிரி ஜாதிப் பூசல்கள் இருப்பதால் ஆக்க வேலைகளுக்கு மிகவும் குந்தகமாக இருக் கின்றன.

"ஹரிஜனங்களுக்கு குடி இருப்பு மனைக்கட்டு கொடுக்கவேண்டுமென்ற திட்ட மிருக்கிறது. சில கிராமங்களில் பொறம்போக்கு நிலங்கள் இருக் கின்றன. ஜாதி இந்துக்கள், அந்த இடங்களிலே மாடுகள் கட்டுகிறார்கள், குப்பை கொட்டுகிறார்கள். ஹரிஜனங்கள் வீடுகட்டிக்கொள்ள இடத்திற்கு மனு போட்டால் தாங்கள் மாடுகள் கட்டவேண்டும், குப்பை போடவேண்டு மென்று சாக்குப் போக்குச் சொல்லி கழித்து விடுகிறார்கள். ரெவினியூ இனஸ்பெக்டர், கர்ணம், கிராம முனிசீப், இவர்களிடம் போய்ச் சொன்னால், ஜாதி இந்துக்கள் சொல்லுவதை கேட்டுக்கொண்டு, அந்த நிலங்கள் ஹரிஜனங்களுக்கு கொடுக்கத்தக்கவையல்ல என்று ரிபோர்ட் செய்து விடு கிறார்கள். அதை நம்பிக்கொண்டு, மேலே இருக்கும் அதிகாரிகள் அந்த கோரிக்கையை ரத்துச் **(proposal-ஐ drop)** செய்கிறார்கள். ஹரிஜனங்கள், தாங்களாக நிலம் வாங்கி வீடுகட்ட கையில் பண மில்லை. ஆகவே, ஹரிஜனங்களுக்கு குடியிருப்புக்காக நிலமில்லை என்று சொல்லுவது நியாயமல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பார்த்து, உண்மையாக ஹரிஜனங்களுக்கு குறிப்பிடப்பட்ட பொறம்போக்கு நிலம் தேவையா இல்லையா, என்பதை நன்றாக ஆலோசித்துப்பார்த்து, அந் நிலங்களை குடி இருப்புக்காக ஹரிஜனங்களுக்கு விநியோகிக்கவேண்டும். இம்மாதிரியாக செய்யவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தப்படியாக, கல்வி விஷயமாக இப்போது ஒரு புது திட்டத்தை சர்க்கார் போட்டிருக்கிறார்கள். அதாவது மாணவர் ஹாஸ்டல்கள், நம் ராஜ்ஜியத்திலே, சில இடங்களில், ஜாதி இந்துக்களில் பிற்போக்கு சமூக மாணவர்களுக்கு தனியாக ஹாஸ்டல் இருந்தது. அதிலே மறவர், தேவர், கள்ளர் சமூக மாணவர்கள் இருந்து வந்தார்கள். அதிலே எந்த காலத்தி லும், ஒரு ஹரிஜன் மாணவன்கூட சேரமுடியாது. **Grant** சர்க்காரிட மிருந்து வாங்கி அவ்விதமாக நடத்தி வந்தார்கள். இந்த ஹாஸ்டல்கள் விஷயமாகவும், அதிலே ஹரிஜன மாணவர்களை சேர்க்கும் சம்பந்தமாகவும், சர்க்கார் ஒரு முறையைக் கையாண்டிருக்கிறது. உன் வசத்தில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் இருக்கிறது. அதன் பக்கத்தில் பிற்போக்கு ஜாதி ஹிந்துக்களுக்கென்று ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. இந்த வருஷம் ஹரிஜன ஹாஸ்டலில் 25 சத விகிதம் கள்ளர் சமூக மாணவர்களை சேர்க்க வேண்டுமென்றும், பக்கத்திலுள்ள பிற்போக்கு ஜாதி இந்துக்கள் ஹாஸ் டலில் 25 சத விகிதம் ஹரிஜனங்களை சேர்க்கவேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, இம்மாதிரி ஜாதி இந்து சமூக மாணவர்களும் ஹரிஜனமாணவர்களும் சேர்ந்து ஒரே இடத்தில் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டால் கண்டிப்பாக தீண்டாமை ஒழியும் என்பதில் சந்தேக மில்லை. சாப்பாட்டு முறையில் ஒதுங்கி நிற்கும்வரையில் நாட்டிலே தீண் டாமை ஒழியாது. ஆகையினாலே சமபந்தி போஜனம் தீண்டாமையை போக்க முடியும். பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்துவிட்டு, மாணவர்கள், வீடுகளுக்குப் போய்விட்டால், தீண்டாமையைப் போக்க முடியாது. இம் மாதிரி ஹாஸ்டல்களில், ஹரிஜன மாணவர்கள், ஜாதி இந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டு, ஒன்றாக சமபந்தி போஜனம் சாப்பிடும் பழக்கம் அவர் களுக்கு ஏற்பட்டால் ஹரிஜன மாணவன், ஜாதி இந்து பிற்போக்கு மாண வன் என்ற துவேஷமனப்பான்மை இல்லாமல் இருக்கும். இந்த முறையை சர்க்கார் கையாண்டிருப்பது போற்றத்தக்கது. இது எல்லா இடங்களிலும்

3rd August 1955] [Sri V. Muthu]

நடக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஒன்று கவனத்தில் இருக்கவேண்டும். அதாவது ஹரிஜன ஹாஸ்டலில் அதிகமான ஜாதி ஹிந்து மாணவர்களுக்கு இடம் கொடுத்துவிடக்கூடாது."

*Sri V. MADANAGOPAL :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையில் வரவேற்கக்கூடிய பல அம்சங்களோடு, முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டிய சில விஷயங்களைப்பற்றி கவனம் செலுத்தப்படாமல் இருப்பதை நான் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. 7-4. p.m

" முதலாவதாக, இந்த மாகாணத்தில் அரசாங்க பாஷையாக தமிழ் பாஷை வரவேண்டும் என்பதைப் பொருத்தவரையிலும், இந்த மாகாணத்து மக்கள் நீண்ட நெடுநாளாக உணர்ந்து இருக்கிறார்கள். அடுத்தபடியாக, இந்திப்பிரச்னை, மிகப்பெரிய சர்ச்சைக்கு உரிய பிரச்னையாகவே இருக்கிறது. இந்த விஷயத்தில் இந்த அரசாங்கம் அனுசரிக்கக்கூடிய கொள்கையானது ஒரு வழவழாக் கொள்கையாக இருக்கிறது. அதனால் மாகாணத்தில் அமைதி குலையும்படியான நிலைமை ஏற்பட சந்தர்ப்பம் அதிகமாகிறது. இனறைக்குக்கூட, தமிழ் மொழியை அரசாங்க மொழியாக எடுத்துக் கொள்ள, என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறோம் என்பதைப்பற்றி அரசாங்கம் பேசுவதே கிடையாது. அதே காலத்தில், இந்தி விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை தெளிவாக வெளியிடாமல் இருப்பது இன்னும் பெரிய சிக்கலை ஏற்படுத்தக்கூடிய விஷயமாக இருக்கிறது. இங்கிருக்கிற மாற்றுக்கட்சியை சேர்ந்த நண்பர் ஒருவர்—அவர் இப்போது இடத்தில் இல்லை—குறிப்பிடும்போது இந்தியை பொருத்தவரையில் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒரு கொள்கை கிடையாது, அது உள் ஒன்றுவைத்து புறம் ஒன்று பேசுகிறது என்று குறிப்பிட்டார்கள். அவர் இப்போது இடத்தில் இருந்திருந்தால் நன்றாக இருக்கும். கம்யூனிஸ்டு கட்சி தன்னுடைய கொள்கையைப்பற்றி கூறும்போது உள் ஒன்றும், புறம் ஒன்றும் பேசுவதே கிடையாது. தனக்கு எது சரி என்று படுகிறதோ, அதைச் சொல்லுவதற்கு கம்யூனிஸ்டு கட்சி எப்போதும் தயங்குவது கிடையாது. எதாவது முடிவோ, போராட்டமோ, கிளர்ச்சியோ, அல்லது காரியமோ, எதில் இறங்கினாலும், அந்த விஷயத்திலிருந்து முன்வைத்த காலை பின்னுக்கு வாங்குவது கிடையாது என்பதை தெரிவிக்கமட்டுமல்ல, இந்தியைப் பொருத்த வரையில் இந்த தேசத்தில் உள்ள பெருவாரியான தேசீய இனங்களைச் சேர்ந்த மக்கள், இந்தி பாஷையை பேசுவதன் காரணமாகவும் இந்த நாட்டின் தேசீய பாஷையாக இந்தி வளர்வதற்கு எல்லாவிதமான யோக்கியதாம்சமும் இருக்கிறது என்ற காரணத்தினாலும், இந்தி பாஷை வளரவேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சி கூறுகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். தேசீய பாஷை என்று கூறும் அதே சமயத்தில், ஒவ்வொரு தாயகத்திலும், தேசீய இனத்திலும், தாய் பாஷைக்கு பூரண வளர்ச்சி கொடுப்பதன் மூலமாக, இந்தியை தேசீய பாஷை ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தை மனப்பூர்வமாக இந்தியாவில் சிருஷ்டிக்கவேண்டும். அதற்காக, தமிழ் பாஷை அரசாங்க பாஷையாக வருவதற்கு தங்கு தடையற்ற சுதந்திரம் கொடுக்கவேண்டும். அதே காலத்தில், இந்தியை எந்தத் துறையில் எப்பேர்ப்பட்ட முறையில் வளர்க்க வேண்டுமென்றால், படிப்படியாக, நீண்டகால அளவில் அரசாங்க பரீட்சைகளிலோ, உத்தியோகங்களிலோ, கண்டிஷனாக இல்லாத முறையில் வளர்க்கவேண்டும். தேசீய பாஷை என்கிறபோது, தேச இனங்களுக்குள்ளே பரிமாறிக்கொள்ளும் பாஷையாக வளர்க்கவேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி தெட்டத் தெளிவாக கூறுகிறது.

" அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைப்பற்றியும் கவர்னரின் பிரசங்கம் குறிப்பிட்டிருக்க வேண்டும். அது இலங்கையில் இருக்கிற தமிழ் மக்களைப் பற்றிய விஷயம். இது விஷயமாக, அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பது வாஸ்தவம்தான். ஆனால், குறிப்பாக சென்னையில் இருக்கும் அரசாங்கம் அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மாகாணத்தில் இருக்கிற மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மாற்றுக் கட்சியில் இருக்கும்

[Sri V. Madanagopal] [3rd August 1955

தோழர், திராவிடர்கள் என்பதற்காக கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டார். அப்பேர்ப்பட்ட முறையில் நான் கூறவில்லை. அப்படிச் சொல்லுவது ஆச்சரியமான விஷயமும்கூட. இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய அந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள், வேடிக்கையான விஷயத்தைப்பற்றி பேசுகிறார்கள். சில சமயத்தில் ஆரியம் ஒழிக என்கிறார்கள். சில சமயத்தில் ஆரியனை திராவிட நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று பேசுகிறார்கள். ரொம்ப ஆச்சரியகரமான விஷயம். வேதகாலத்துக்கு முன்பு, பல்லாயிர கணக்கான வருஷங்களுக்கு முன்பு, ஆரியம் இந்த நாட்டுக்கு வந்ததாக சரித்திரம் கூறுகிறது. அவர்கள் வந்ததோடு மட்டு மல்ல. இந்தியாவில் பூர்வீக குடியாக இருந்த ஆதித்திராவிடர்கள் அல்லது வேறு எந்த இனத்தவராகவோ வைத்துக்கொள்ளுங்கள். அவர்களோடு கலாசார, பொருளாதார, மற்றெல்லா துறைகளிலும் இரண்டற கலந்து பரிணமித்து இருக்கிறார்கள். அவர்களை, பல்லாயிர வருஷங்களுக்கு முன்னால் வந்தவர்களை இந்த நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று கூறக்கூடிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், சிங்களத்தில் இருக்கக்கூடிய தமிழ் மக்களைப்பற்றி பேசுவது வேடிக்கையும், விநோதமும் மாத்திரமல்ல, பகுத்தறிவற்ற விஷயமும்கூட. நாங்களும் இலங்கை இந்தியர் பிரச்னையை பற்றி பேசுகின்றோம் என்று கூறிக்கொண்டு, அதே மூச்சில் ஆரியனை வெளியேற்ற வேண்டும் என்று பேசும் அறிஞர்களே, அய்யாக்களே, நீங்கள் இப்படி கூறுவது நியாயமா என்று சிங்களவர்கள் கேட்கமாட்டார்களா ? நாங்கள் அப்படிக் கூற பிரியப்படவில்லை. அதற்கு மாறாக, இந்த மாகாண சர்க்கார் இலங்கை இந்தியர் பிரச்னையை கவனிக்க வேண்டும். திட்டவட்டமாக மத்திய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். பிரச்னையை சுமுகமாக தீர்க்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகின்றேன்.

" மூன்றாவதாக கவர்னருடைய அறிக்கையில் எல்லா விஷயங்களிலும் மிக மிக விசேஷமாக இருக்கக்கூடியது நிலச் சீர்திருத்தத்தை குறித்த விஷயமாகும். இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய மக்கள் மட்டுமல்ல. நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை அரசியல் கட்சிகளும், விவசாயிகளும் இந்த நாடு முன்னேற வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட அத்தனை பேரும், இன்று மட்டுமல்ல, நீண்ட நெடுங்காலமாக விவசாய சீர்திருத்தம் அவசியம் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அந்த விஷயத்தில், நமது சென்னை அரசாங்கம் முழுமையான நடவடிக்கையில் இறங்காவிட்டாலும்கூட, குறிப்பாக நிலச் சீர்திருத்தம் என்ற அந்த அடிப்படையில் ஆரம்ப நடவடிக்கைகளாக, நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும், அதற்கான மசோதாக்கள் வரும் என்று ஆரம்பித்திருப்பதை இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய விவசாய மக்களின் முன்னேற்றத்திற்காக நிற்கக்கூடிய அரசியல் வாதிகள் அத்தனை பேரும் பொதுவாக ஏற்றுக்கொள்ளுவார்கள், வரவேற்பார்கள். அதே மாதிரியாக, ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி கூறியிருக்கக்கூடிய விஷயங்களில், உற்பத்தியை பெருக்குவதாகவும், வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய அம்சங்களாகவும் இருக்கக்கூடிய திட்டங்களையும் எல்லோரும் வரவேற்பார்கள், ஆதரிப்பார்கள், ஒத்துழைப்பார்கள். ஆனால் கவர்னர் அவர்கள் கூறியிருக்கிற விஷயமோ ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க விவசாய சீர்திருத்த மட்டுமல்ல, ஐந்தாண்டு திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பது ஒரு பகுதி சரி, முழுதும் சரியில்லை. ஐந்தாண்டு திட்டத்தையும், நில சீர்திருத்தத்தையும் நிறைவேற்றுவதன் மூலமாகமட்டும் ஒரு சமதர்ம ஆட்சியை நிறுவி விட முடியாது. நிலச் சீர்திருத்தங்களினாலும், ஐந்தாண்டு திட்டங்கள் போடுவதினாலும், தேசச் செல்வம் பெருகும் என்பது வாஸ்தவம், வேலை வாய்ப்பு கிடைப்பது வாஸ்தவம். ஆனால் தேசத்தில் உற்பத்தியாகக்கூடிய செல்வம், எப்படி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மக்களிடையே வினியோகிக்கப்படுகிறது, அவர்களின் உறவு முறை எப்படி யிருக்கிறது என்பதில்தான் சமதர்மம் அடங்கியிருக்கிறது. அதைப் பற்றி மாகாண சர்க்காரும், மத்திய சர்க்காரும் என்ன கொள்கையை கையாளுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. பவானி சாகரில் அணை கட்டியிருக்கிற விஷயம், வரவேற்கத் தக்க விஷயம். இரண்டு லட்ச ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதுடன், விவசாயிகளுக்கும் பலன்

3rd August 1955] [Sri V. Madanagopal]

கிடைப்பது வாஸ்தவம். நிலச் சீர்திருத்த சம்பந்தமான சட்டம், மாகாணத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்போவது வாஸ்தவம். அணைக்கட்டு இருக்கக்கூடிய இடத்திலோ, நிலச் சீர்திருத்தம் வரக்கூடிய இடத்திலோ, விவசாயிகளுக்கு இரண்டு கலம் கூடுதலாக கிடைக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். பவானி சாகர் அணைக்கட்டு கட்டியிருப்பதால், நான்கு பொதி பருத்தி ஐந்து பொதி ஆக கிடைக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அதே சமயத்தில் கடந்த மூன்று வருஷமாக பருத்தியின் விலை 140 ரூபாயிலிருந்து, 85, 90, 100 ரூபாய் ஆகி, இப்போது 110 ரூபாயில் இருக்கிறது. அப்படியானால் ஒரு பக்கத்தில் நிலச்சீர்திருத்தத்தின் மூலமாகவும், ஐந்தாண்டு திட்டங்களின் மூலமாகவும் ஏற்படுகிற அபிவிருத்திகள், உற்பத்தியாகக்கூடிய செல்வம் இருக்கிறதே, அது உழைக்கிற மக்களுக்கு, உற்பத்தியில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு சமமாக கிடைப்பதற்கான ஏற்பாட்டை செய்யவில்லையானால், இந்த சீர்திருத்தங்களினாலும், ஐந்தாண்டு திட்டங்களினாலும் சமதர்ம சமுதாயத்தை நிறுவ முடியாது. பஞ்சின் விலை, கடலை விலை, மற்றும் விவசாய மக்கள் உற்பத்தி செய்யக்கூடிய அத்தனை பொருள்களின் விலையும் சரியாக 100-க்கு 30 சத விகிதம் குறைந்திருக்கிறது. இது எல்லோருக்கும் தெரியும். மந்திரிகளுக்கு தெரியும். மற்ற எதிர்கட்சிக்காரர்களுக்கும் தெரியும். இந்த பிரச்னைக்கு மத்திய சர்க்காரும் சரி, மாகாண சர்க்கார் மந்திரிகளும் சரி, விடையளிப்பதில்லை. அதே சமயத்தில், இரும்பு, உரம், காப்பிக்கொட்டை, தேயிலை, துணி முதலிய உற்பத்தி பொருள்களின் விலை, விவசாய மக்கள் வாங்கும் பொருள்களின் விலை குறையவில்லை. குறிப்பாக, மூன்று வருஷ காலமாக பஞ்சின் விலை 25 சத விகிதம் குறைந்திருக்கிறது. அப்படி குறைந்திருக்கும் காலத்திலும், ஹார்வி மில், இன்னும் கோயம்பத்தூர் மில், மீனாக்ஷி மில் நூல் விலை குறையவில்லை. இந்த மில்களின் லாபத்தை மாகாண அரசாங்கம் கணக்குப் பார்க்குமேயானால், கடந்த மூன்று வருஷமாக பஞ்சின் விலை குறைவினால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதும், மில் முதலாளிகளுக்கு மூன்று மடங்கு லாபம் ஏற்பட்டதும் வெளியாகும். விவசாய சீர்திருத்தத்தினால் ஏற்படும் நன்மை, நிலப்பிரபுக்களுக்கு போவதற்கு பதிலாக முதலாளிகளுக்கு போகிறது. முதலாளிகள் அந்த முறையை தவிர்க்க அரசாங்கம் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் கேட்க பிரியப்படுகிறேன், முதலாளிகள் அடிக்கக்கூடிய லாபத்திற்கு ஏதாவது விதி முறை உண்டா? நூற்றுக்கு மூன்று சத விகிதம் லாபம் ஹார்வி மில் எடுத்துக்கொள்ளட்டும், ராஜா சர் முத்தையா செட்டியார் எடுத்துக்கொள்ளக்கூடிய லாபம் ஆறு சத விகிதம் அல்லது எட்டு சத விகிதம் அனுமதிக்கட்டும். அதற்குமேல் லாபம் இருக்கக்கூடாது என்றால், சாதாரண மக்களுக்கு சரியான விலையில் பொருள்கள் கிடைக்கும். விவசாய பொருட்களின் விலை குறைந்திருப்பதால் அல்ல, விவசாயிகள் வாங்கக்கூடிய பொருள்களின் விலை குறையாமல் இருப்பதால்தான் மிகப் பெரிய ஆபத்து ஏற்படும்படியான நிலைமையிருக்கிறது. ஆகவே இந்த விஷயத்தில் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இரண்டாவதாக, சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறும் சர்க்கார், தங்கள் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சாதாரண மக்களின் உரிமைகளை பாதுகாக்க எவ்வித கவனமும் எடுத்துக்கொள்ளவில்லை. கவர்னர் உரையில் அதுபோன்ற விஷயம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இன்றைக்கு சர்க்கார் சார்பில் பரிசீலனை செய்த நில சீர்திருத்த கமிட்டி தென்னாட்டு தெற்குப் பகுதியைப் பொருத்த வரையில், விவசாய கூலிகள் எனப்படுபவர்கள் இந்தியாவில் வேறெங்கும் இருப்பதைக் காட்டிலும், அதிகமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இந்தியாவில் எல்லா விடங்களிலும் கிடைப்பதைவிட, குறைந்த நாளைக்கு அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. இந்த நிலையில் உள்ள அவர்களுக்கு ஐந்தாண்டு திட்டத்தில் வேலைக்கு என்ன வழி செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி பேச்சே இல்லை.

"அதுமட்டுமல்ல. இன்றைய தினம் விவசாயக் கூலிகளுக்கு என்று இந்த சர்க்கார், சோஷலிஸ சமுதாய அடிப்படையில் நடத்தும் சர்க்கார், எந்த அடிப்படையில் கூலியைக் கொடுக்க சட்டம் இயற்றப் போகிறார்கள் 7-54 p.m.

[Sri V. Madanagopal] [3rd August 1955

என்பதைப்பற்றி ஏதாவது சொல்லி இருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்காக ஏதாகிலும் சட்டம் கொண்டு வரப்போகிறார்களா என்றால் அதைப்பற்றி பேச்சே இல்லை. மாகாண சர்க்காரிடமும் அப்படிப்பட்ட பேச்சு இல்லை. மத்திய சர்க்காரிடமும் அப்படிப்பட்ட பேச்சே இல்லை. எட்டு மணி நேரம் வேலை செய்யும் கூலிகளுக்கு குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்யக்கூடிய சட்டம் வரப் போகிறதா என்பதைப்பற்றிய பேச்சே இல்லை. குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பதற்கு சர்க்கார் தயாராக இல்லையா ? விவசாய மக்கள் சம்பந்தமாக அதைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டிருக்கிறார்கள்.

" நிலப் பிரச்னையை எடுத்துக்கொள்ளும்போது சர்க்கார் மூன்று விஷயங்களை கவனிப்பதாக கூறியிருக்கிறார்கள். நிலத்தினுடைய அளவு என்ன என்பதைப்பற்றி அதாவது குறைந்த பட்சம் எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம் என்பதைப்பற்றியும், நிலம் எவ்வாறு கொடுக்கப்படும் என்பதைப்பற்றியும் உள்ள விஷயங்களைக் கண்டுபிடிக்க முடியவே இல்லை. அதைப்பற்றி விவரிக்கும் போது அரசியல் சட்டம் அதற்குக் குறுக்கே நிற்கிறது என்று சொல்லுகிறார்கள். சட்டம் குறுக்கே நிற்கிறது என்று சொல்லிக்கொண்டு காலத்தை கடத்த முடியாது. நிலச் சீர்திருத்தம் செய்ய முன்வந்தால் எதிர்ப்பு இருக்கத்தான் இருக்கும். அதை சமாளித்துத்தான் நிலச் சீர்திருத்தம் கொண்டு வரவேண்டுமேயொழிய சட்டம் குறுக்கே நிற்கிறது என்று பயந்து கொண்டு காலத்தைக் கடத்திவிட முடியாது. அதை சமாளித்துத்தான் தீரவேண்டும். அப்பொழுதுதான் ஜனங்களுடைய உதவி கிடைக்கும். இந்தப் பிரச்னையைத் தீர்க்கும்போது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு வேண்டிய சட்டத்தையும் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். இப்பொழுது ஐந்து வருஷ திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்கள். அப்பொழுது அதைப்பற்றி யோசித்துக்கொள்ளலாம். ஆகவே இவ்வளவு வருஷ காலம் கடத்தியது போதும். மற்றும் வாரம் குத்தகையை நிர்ணயிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவ்விதம் செய்யாவிட்டால் நிலச் சீர்திருத்தம் செய்ததாக அர்த்தம் இல்லை. இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்தின் பலனை விவசாயிகள் அனுபவிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவ்விதம் அனுபவிக்க முடியாமல் நிலச்சுவாந்தார்கள் காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். விவசாயிகளிடமிருந்து குத்தகை வாரச் சீட்டு எழுதி வாங்கிக்கொள்வதும் கொடுப்பதும் கிடையாது. யாரிடத்திலும் சீட்டு இப்பொழுது கிடையாது. சட்டம் வந்துவிட்டால் இந்த சீட்டை வைத்துக்கொண்டு நிலத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுவார்களே என்று பயந்து கொண்டு சீட்டே எழுதிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். விவசாயிகளும் குத்தகைக்காரர்களும் சீட்டு எழுதிக் கொடுங்கள் என்று கேட்டுவிட்டால் அடுத்த வருஷம் அவனுக்கு நிலம் கிடைக்காது. பிறகு அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள். வெளியேற்றியும் இருக்கிறார்கள். இன்றுகூட எனக்கு ஒரு தபால் வந்திருக்கிறது. மதுரையில் பட்டிமேடு என்ற கிராமத்தில் விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றியிருப்பதாக தபால் வந்திருக்கிறது நிலத்தில் உழக்கூடாது என்றும் நிலத்தில் இறங்கக்கூடாது. என்று சொல்லுகிறார்கள். மற்றும் பலரை வெளியேற்றி வருகிறார்கள். அப்படி உழச் சென்ற 30 முதல் 35 பேர்களை கைது செய்திருக்கிறார்கள். கைது செய்து மூன்று நாட்களாக அவர்கள் ஸ்டேஷனில் இருக்கிறார்கள். உழ நிலம் வேண்டும் என்று கேட்டால் போலீசார்களுடைய தயவை வைத்துக் கொண்டு விவசாயிகளை கைது செய்திருக்கிறார்கள். இப்படி மதுரையில் நடக்கிறது. ஆனால் திருச்சியில் விவசாயிகளுக்கு போலீசார் துணையாக இருக்கிறார்கள். நிலத்தில் இறங்கி உழுவதற்கு வசதி செய்து கொடுக்கிறார்கள். ஆனால் மதுரையில் விவசாயிகளுக்கு விரோதமாக இருந்து கைது செய்கிறார்கள். சர்க்கார் இந்த விஷயங்களில் தெளிவற்ற கொள்கைகளை கையாண்டு வருகிறது.

" அடுத்தபடியாக விவசாயிகளுக்கு சர்க்கார் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த சட்டத்தை அமுல் நடத்தக் கூடிய காலத்தில் நிலங்களை உழுகிறவர்களுக்கு நிச்சயமாக நிலம் கிடைக்கக்கூடிய வகையில் சட்டம்

3rd August 1955] [Sri V. Madanagopal]

செய்ய வேண்டும். இந்த முறையை சர்க்கார் யோசிக்க வேண்டும். வாரம் குத்தகை பற்றியும் நிலம் எந்த அளவில் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் நிலம் கிடைப்பதற்கு வேண்டிய முறையையும் நில அளவைப் பற்றியும் சர்க்கார் யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

"தொழில் விஷயமாக பேசும்போது இந்த ஐந்து ஆண்டு திட்டத்தில் அதற்கு முதலிடம் கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமையில் இப்பொழுது இருக்கும் தொழில்கள்கூட நாசமாகும் நிலைமையில் இருக்கிறது. தொழிலாளர்களை வெளியேற்றும் முறையில் நடந்துகொண்டு வருகிறது. கை நெசவுத் தொழிலை எடுத்துக் கொண்டால் அதற்கு பதிலாக பவர் லூமைக் கொண்டு வரப்போவதாகத் தெரிகிறது. அதைப்பற்றி கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசும்போது ஒன்றிலும் பிடி கொடுக்காது சொல்லியிருக்கிறார். இதில் வழவழா கொள்கை கூடாது. இன்றுள்ள நிலையில் பவர் லூம் அனுமதிப்பது கை நெசவு தொழிலை நாசமாக்கும். மிகப் பெரிய அளவில் வேலையில்லா திண்டாட்டம் வளரும்.

